# தமிழர் சமூக அமைப்பில் சான்றார் எனப்படும் நாடார் வரலாறு



வைரமுத்து சுந்தரராஜா (B.A. Dip.in.Edu.)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தமிழர் சமூக அமைப்பில் சான்றார் எனப்படும்

# நாடார் வரலாறு

## வைரமுத்து சுந்தரராஜா

(வரலாறு, அரசறிவியல்துறை ஆசிரியர் கல்முனை)


## மணிமேகலைப் பிரசுரம்

தபால் பெட்டி எண்: 1447
7 (ப.எண்.4), தணிகாசலம் சாலை,
தியாகராய நகர், சென்னை–600 017.
தொலைபேசி :24342926,24346082
மின் அஞ்சல் :manimekalai1@dataone.in
இணைய தளம் :www.tamilvanan.com



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நூல் விவரம்


| | | |
|---|---|---|
| நூல் தலைப்பு | : | தமிழர் சமூக அமைப்பில் சான்றார் எனப்படும் நாடார் வரலாறு |
| ஆசிரியர் | : | வைரமுத்து சுந்தரராஜா |
| மொழி | : | தமிழ் |
| பதிப்பு ஆண்டு | : | 2016 |
| பதிப்பு விவரம் | : | முதற் பதிப்பு |
| உரிமை | : | ஆசிரியருக்கு |
| தாளின் தன்மை | : | 13.6 கி.கி. |
| நூலின் அளவு | : | கிரௌன் சைஸ் (12 X 18 செ.மீ.) |
| அச்சு எழுத்து அளவு | : | 10 புள்ளி |
| மொத்த பக்கங்கள் | : | viii + 104 = 112 |
| நூலின் விலை | : | ரூ. 60.00 |
| **நூலின் இலங்கை விலை** | : | ரூ. 250/- |
| அட்டைப்பட ஓவியம் | : | மோகன் கிராபிகஸ் |
| லேசர் வடிவமைப்பு | : | பான்ராஜா கிராபிக்ஸ் சென்னை–24 Ph: 7299992699 |
| அச்சிட்டோர் | : | ஸ்கிரிப்ட் பிரிண்டர்ஸ் சென்னை – 94. Ph: 9551429203 |
| நூல் கட்டுமானம் | : | தையல் |


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சமர்ப்பணம்

என்னைப் பெற்றெடுத்து, அன்புடனும்
பாசத்துடனும் வளர்த்து, கல்வியூட்டி இவ்வுலகிற்கு
ஈன்றளித்த எனது தாயாராகிய "சரஸ்வதி வைரமுத்து"
அவர்களுக்கும், தந்தையாராகிய
காலஞ்சென்ற "பெரியதம்பி வைரமுத்து"
அவர்களுக்கும்
இந்நூலைச் சமர்ப்பிக்கின்றேன்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# என்னுரை

உலகத்தில் தமிழ் இனம் மூத்த இனமாகவும், வரலாற்றுக்கு முற்பட்ட காலத்திலேயே நாகரிகத்தின் உச்சியைத் தொட்டுவிட்ட இனமாகவும், சிறந்த மொழி, கலை, கலாசார, பண்புகளையுடைய இனமாகவும், ஒரு காலத்தில் ஆசியாவிலேயே பேரரசு ஒன்றை உருவாக்கி ஆண்ட இனமாகவும் விளங்குகின்றது.

எனினும் வரலாறு என்று வரும்பொழுது அதனை சரியாகவும், உறுதியாகவும், நம்பகத்தன்மையுடனும் பேணாது சிறுமைப்பட்டு நிற்கின்றது.

அண்மையில் சமூக வலைத்தளங்களில் சோழப் பேரரசை உருவாக்கிய மாமன்னன் இராஜராஜ சோழ மன்னனுடைய சமாதியைப் பார்த்தேன். மிகக் கவலைப்பட்டு அந்தச் செய்தியைப் பகிர்ந்திருந்தார்கள். கும்பகோணம் அருகேயுள்ள பட்டீஸ்வரத்திலிருந்து 2 கி.மீ. தூரத்திலுள்ள "கீழ்ப் பாழையாறை" எனும் இடத்தில் ஒரு ஒதுக்கப்பட்ட பகுதியில், நான்கைந்து செங்கற்களைச் சுற்றி வைத்து, நடுவில் ஒரு சிறிய பாறையை வைத்து, பின்புறத்தில் அவனுடைய பிரேம் போட்ட படத்தை வைத்து, இது ராஜராஜ சோழனின் சமாதி எனப் போட்டுள்ளார்கள்.

இதுதான் உலகத்தில் தமிழனை தலைநிமிர வைத்த, வியக்க வைத்த தமிழ்ப் பேரரசனுக்கு நாம் கொடுக்கும் மரியாதை. இவனுக்கே இக்கதியென்றால் அவன் காலத்திலும், அதற்கு முன்னரும் சிறப்பின் உச்சத்தில் தமிழரை நிலை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நிறுத்திய தமிழ்ப் போர்ப்படைகளை, அவை சார்ந்த குடிகளை யார் நினைப்பார்கள்?

எனக்கு சுமார் 20 வருடங்களாக தமிழ் மக்களுடைய பூர்வீக வரலாறுகளை அறியும் ஆவல் ஏற்பட்டது. குமரிக் கண்டத்தின் சரித்திரங்களையும், சிந்துவெளி நாகரிகத்தின் தொல்பொருளாய்வு ஊகங்களையும், சங்ககால, மூவேந்தர் கால ஆட்சி முறைகளையும், மக்கள் வாழ்க்கையையும் கேட்கும்போது, வாசிக்கும்போது ஒரு சிலிர்ப்பு ஏற்படும். மேலும் மேலும் அறியும் ஆவல் ஏற்படும். அந்த நேரத்தில்தான் தமிழர்களின் பூர்வீக குடிகளான சான்றார் குலத்தவர் பற்றியும் சில தகவல்களை அறிய நேரிட்டது.

நான் சான்றார் குலத்தவர்கள் தொடர்பான தகவல்களைத் திரட்ட ஆரம்பித்தேன். வியக்க வைக்கும் விடயங்கள் பல அவர்கள் வரலாறுகளுக்குள் பொதிந்து கிடந்தன. இவர்கள் பற்றிய பல உண்மைகள் பிற்காலத்தவர்களால் மறைக்கப்பட்டும், திரிபுபடுத்தப்பட்டும், காலவெள்ளத்தில் அள்ளுண்டும் போயின.

அம்மக்களே தங்கள் வரலாறுகளை அறியாது, அறிய முற்படாது இருப்பதைக் கண்ணுற்றேன். வெறும் புனைகதைகளை வைத்தே வரலாற்றுக் கதைகளை உருவாக்கும், நம் மகாவம்ச நாட்டிலே உண்மையிலேயே பல ஆதாரங்களைக் கொண்ட சான்றார் வரலாறு எழுதப்படாமல் இருப்பது துரதிர்ஷ்டமானது என்பதை உணர்ந்தேன். இதுவே இந்நூலை நான் படைக்க முற்பட்டமைக்கான காரணமாகும்.

இன்றைய ஜனநாயக உலகில் மன்னராட்சி என்பது தேவையற்ற ஒன்றாகி விட்டது. அதுபற்றி எழுதுவதும்,

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பேசுவதும் காலாவதியாகி விட்டது. இது மக்களைப் பற்றிப் பேசும் காலம். உரிமை, சுதந்திரம், சமத்துவம், நல்லாட்சி பற்றிப் பேசும் காலம். எனினும் தவிர்க்க முடியாதவாறு சான்றார் வரலாறு என்பது மன்னர்களுடனும், போர் களுடனும், ஆட்சி நடவடிக்கைகளுடனும் பின்னிப் பிணைந் திருப்பதனால், அவர்கள் தொடர்பான வரலாறுகளை எழுதும் போது, இவ்விடயங்களே பெரும்பாலும் வருகின்றன. பொதுவாக தமிழர் வரலாறு காதலுடனும், வீரத்துடனும் தொடர்புபட்டிருப்பதால், சான்றார் வரலாறும் அவ்வாறே வருகின்றது போலும்!

இலங்கையில் தற்போதைய சமகாலத்தில் தமிழ்த் தேசியம் பற்றிய உணர்வுகள் மேலோங்கியுள்ளன. தமிழர் ஒற்றுமை என்பது அத்தியாவசியத் தேவையாகியுள்ளது. இச்சூழலில் குறிப்பிட்ட வகுப்பினரை உயர்த்தியும், ஏனையோரைத் தாழ்த்தியும் எழுதப்படும் நூல்களும் வெளிவந்து கொண்டுதான் இருக்கின்றன. ஆனால் இந்நூலானது இச்சிந்தனைக்கு அப்பாற்பட்டதாகும். உயர்வு தாழ்வு பாராட்டாது, எவரையும் புண்படுத்தும் நோக்கம் இல்லாது, நடுநிலையாக உண்மைகளை ஆராயும் போக்கில் தான் இங்கு விடயங்கள் முன்வைக்கப்பட்டுள்ளன.

ஒரு சிறந்த வரலாற்று நூலாக இதைப் படைக்க வேண்டும் என்ற எண்ணத்தினால், இயன்றவரை உண்மையான, நிச்சயமான, மூலாதாரங்களுடன் கூடிய தகவல்களைத் திரட்டி இந்நூலை எழுதியுள்ளேன். அவ்வாறே இது சிறந்த வரலாற்று நூலுக்குரிய பண்புகளுடன் அமைந்திருப்பதனை வாசிப்பவர்கள் உணரலாம். இதில்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆராய்ந்து முன்வைக்கப்பட்டுள்ள முடிபுகள் எவற்றிலாயினும் வாசகர்கள் எவருக்காவது கருத்து பேதங்கள் ஏற்படக்கூடும். அவற்றைத் தக்கவாறு சுட்டிக்காட்டினால் நன்றியுடன் ஏற்றுக் கொள்வேன். இந்நூல் வெளிவர உதவிய, ஊக்கப்படுத்திய அனைவருக்கும் மனமார்ந்த நன்றிகள்,

ஆசிரியர்

வைரமுத்து சுந்தரராஜா

(B.A. Dip.in.Edu.)

வரலாறு, அரசறிவியல் துறை ஆசிரியர்

கல்முனை 20.08.2015

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உள்ளடக்கம்

1. தமிழர் வரலாற்றுப் போக்குகளும் சான்றாரும் ........1

2. "சான்றார்" என்ற சொல் பற்றிய விளக்கம்............14

3. சான்றார் பற்றிய இலக்கிய ஆதாரங்கள் ..............20

4. சான்றாரின் ஆரம்பமும் பரவலும் -
(புராதன காலம் கி.பி. 4 வரை) .......................26

5. மத்திய காலத்தில் சான்றாரின் நிலை
(கி.பி. 5-15 வரை) ..........................................37

6. சான்றார் குலத்தவரின் வீழ்ச்சி
நவீன காலம் (கி.பி.15 இன் பின்).......................54

7. சான்றார் வீழ்ச்சி பற்றி அறிஞர்களால்
வெளியிடப்பட்ட கருத்துகள் ..............................63

8. சான்றார்கள் தங்களை உயர் வகுப்பினர்
என நிரூபித்த சந்தர்ப்பங்கள் ..........................67

9. இலங்கையில் சான்றார் குலத்தவரின் வரவு ..........71

10. சான்றார் நாணயங்கள்
தொடர்பான ஆதாரங்கள் ..................................92

11. சான்றார் குலத்தினரின் உட்பிரிவுகள்....................95

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 1. தமிழர் வரலாற்றுப் போக்குகளும் சான்றாரும்

மனிதகுலம் மிக நீண்ட காலமாக இப்பூமியில் வாழ்ந்து வருகின்றது. இப்பாரில் எத்தனையோ இனங்கள், சமூகங்கள், குலங்கள், கோத்திரங்கள் வாழ்ந்தன. எச்சங்களாக தொடர்ந்து வாழ்ந்து கொண்டிருக்கின்றன. மனிதன் பல்வேறு பிரதேசங்களில் வாழ்ந்துள்ளான். வாழ்வதற்குத் தகுந்த முறையில் சூழலை அமைத்துக் கொண்டுள்ளான். எனவே இவ்வாறு கடந்த காலத்தில் வாழ்ந்த மக்கள் பற்றிய தகவல்களை தேடி அறிந்து விளக்க வேண்டும். இதுவே வரலாறு எனப்படும்.

இலண்டன் கல்விக்கான மத்திய ஆலோசனைச் சபையின் 'எமது எதிர்காலத்தின் சரிபாதி' எனும் அறிக்கையில் "தான் வாழும் சமூகம் பற்றி அறியாத, உலகில் தனது சமூகத்திற்கும் தனக்கும் உரிய இடம் பற்றிய விளக்கம் இல்லாத மனிதன், வாக்குரிமை இருந்தபோதிலும் சுதந்திர பிரசையாகமாட்டான்" எனக் கூறப்பட்டுள்ளது.

புகழ்பெற்ற முன்னாள் இந்தியப் பிரதமர் பண்டித 'ஜவஹர்லால் நேரு' அவர்கள் குறிப்பிடும்போது "நிகழ் காலமும் எதிர்காலமும் நிச்சயமாக இறந்த காலத்திலிருந்து கட்டியெழுப்பப்படுவதுடன், அதன் அடையாளங்களையும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆங்காங்கே காணமுடியும். அதனை மறந்து செயற்படுவது அத்திவாரமின்றி கட்டடமொன்றைக் கட்டுவதற்கு ஒப்பானதாகும்" எனக் கூறியுள்ளார்.

இன்றைய சமூகவமைப்பானது முறைப்படியான உலக நடைமுறையின் மாற்றங்கள் பலவற்றினதும் பிரதி பலனாகும். ஆகவே, இறந்த காலத்தை சிறப்பாக அறிந்து கொள்வதன் மூலம் நிகழ்காலத்தைக் கட்டியெழுப்புவதற்கான அடிப்படையை அமைத்துக் கொள்ளலாம்.

தமிழர் வரலாறு என்பது மிக நீண்ட கால தொன்மையைக் கொண்டதாகும். அது பல நெளிவுசுழிவுகளையும், தெளிவின்மைகளையும் கொண்டு காணப்பட்டாலும் பெருமைக்குரிய பல பண்புகளையும் உள்ளடக்கியுள்ளது. திரிபுகளுக்கும், பக்கச் சார்புகளுக்கும், இருட்டடிப்புகளுக்கும் உள்ளாக்கப்பட்டுள்ளதால், மேலைத்தேய வரலாறுகள் போல தமிழர் வரலாற்றை நிச்சயப்படுத்துவது வரலாற்று ஆய்வாளர்களுக்கு மிகவும் சிரமமாய்ப் போயுள்ளது.

ஏப்ரல் 2011இல் வெளியான "பிரவாதம்" இதழ் 05இல் அதன் ஆசிரியர் திரு. க.சண்முகலிங்கன் அவர்கள் குறிப்பிடும்போது, "இலங்கையின் நிகழ்கால வரலாற்று நூல்கள் யாவும் 'கெட்ட ஜான் அரசர் தத்துவம்' பற்றிய வியாக்கியானங்களாகவே இருப்பது ஆச்சரியத்திற்கு உரியதல்ல" எனக் குறிப்பிட்டுள்ளார். வரலாற்று நிகழ்வுகளை தனிநபர்களின் பண்பும், நடத்தையும் கொண்டு விளக்கும் போக்கை 'கெட்ட ஜான் அரசர் தத்துவம்' (Bad King John Theory) என்று அழைப்பர். மட்டக்களப்பின் வரலாற்றைக் கூறும் நூல்களும் இதற்கு விதிவிலக்கல்ல.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பேராசிரியர் கே.கே.பிள்ளை அவர்களின் 'தென்னிந்திய வரலாறு' என்ற பிரபலமான நூலுக்கு அணிந்துரை வழங்கிய ஸ்ரீ பிரகாசா அவர்கள் "வரலாற்று நூலின் குறிக்கோள் பண்டைய நிகழ்ச்சிகளை நேர்மையாக எடுத்து விளக்குவதாகும். ஆனால் தமிழர் வரலாற்று நூல்களை இயற்றியோர் பலகாலும் நடுநிலையை காப்பாற்றத் தவறியுள்ளனர். பலர் உண்மையைப் புறக்கணித்து, தம் தனி நோக்கத்திற்கு ஏற்றவாறு தவறான பொருளமைத்து வரலாற்றை எழுதியுள்ளனர். தமது சமயம், இனம், சாதி, குலம் முதலியவற்றை மிகைப்படுத்திக் கூறக் கருதியதால் உண்மைநெறி தவறியுள்ளனர்" எனக் கூறியுள்ளார். பேராசிரியர் வீலர் அவர்களும் இக்கருத்தையே முன்வைத்துள்ளார். இலங்கையில் எழுதப்பட்ட தமிழர் வரலாற்று நூல்களும் இவ்வகையையே சாரும்.

வரலாறு பற்றிய ஆய்வுகளைச் செய்த பேராசிரியர் ஈ.எச்.கார் கூறும்போது, "வரலாற்று ஆசிரியர் ஆதாரங் களுக்கு அடிமை அல்ல, எசமானரும் அல்ல. அது சமத்துவமான உறவு. கொடுக்கல் வாங்கல் தன்மையுள்ள உறவு. அவர் ஆதாரங்களைத் தன்னுடைய உட்பொருளுக்குத் தக்க முறையில் பயன்படுத்துகிறார். உட்பொருளை ஆதாரங்களுடன் பொருந்துமாறு அமைக்கிறார். ஆதாரங்கள் இல்லாத வரலாற்றாசிரியர் அத்திவாரம் இல்லாதவர். வரலாற்றாசிரியர் இல்லாத ஆதாரங்கள் உயிர் இல்லாதவை. அர்த்தம் இல்லாதவை" எனக் குறிப்பிடுகிறார்.

எனவே, ஒரு இனத்தின் அல்லது சமூகத்தின் அல்லது குலத்தின் வரலாற்றை அறிந்து கொள்வதற்கு வரலாற்று

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மூலாதாரங்கள் அத்தியாவசியமாகின்றன. இவற்றை இலக்கிய மூலாதாரங்கள், தொல்பொருள் மூலாதாரங்கள் என இரண்டாகப் பிரிக்கலாம். இலக்கிய மூலாதாரம் என்பதில் உள்நாட்டு இலக்கிய மூலாதாரங்களும், வெளிநாட்டு இலக்கிய மூலாதாரங்களும் அடங்குகின்றன. தொல்பொருள் மூலாதாரம் என்பதில் நாணயங்கள், சிதைவுகள், கல்வெட்டுகள் என்பன அடங்குகின்றன.

மேற்கூறப்பட்டவை போன்ற மூலாதாரங்களுக்குள் வாய்மொழிமூலக் கதைகள், நிகண்டுகள், உபதேசங்கள், அறிக்கைகள், சட்டவைத்திய – கல்வி – கலை – கலாசாரக் குறிப்புகள், செய்யுள் இலக்கியங்கள், மகா காவியங்கள், கவிதைகள், கதைகள், நாட்டார் பாடல்கள், தேச சஞ்சாரிகளின் அறிக்கைகள், நூல்கள், நாட்குறிப்புகள், தேசப்படங்கள், உலோகங்களினாலான நாணயங்கள், கட்டடங்கள், இடிபாடுகள், குகை – குன்று – தூண் – சுவர் போன்றவற்றில் காணப்படும் கல்வெட்டுகள், ஓவியங்கள், சிற்பங்கள், செதுக்கல்கள் போன்றன வரலாற்று ஆய்வுகளுக்கு உட்படுத்தப்படுகின்றன. இவைதான் ஓரள விற்காயினும் உண்மையான வரலாற்று முடிவுகளுக்கு உறுதுணையாகின்றன.

இந்தியாவிலும், இலங்கையிலும் வெளியான தமிழர் சமுதாய வரலாற்று நூல்களைப் பார்ப்போமாயின், கூடுதலாக வெறும் கர்ண பரம்பரைக் கதைகளைக் கொண்டு எழுதப்பட்டுள்ளவை போலவே அவை தோன்றுகின்றன. மேலும், இவ்வரலாறுகளை எழுத முற்படுவோர் அகவயப்பட்ட பண்புகளுடனேயே எழுதுகின்றனர். அத்துடன் ஒரு விடயம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பற்றி பல்வேறுபட்ட கருத்து முரண்பாடுகள் தொடர்ந்த வண்ணமேயுள்ளன. இதனால்தான் எமது வரலாறுகளை மேலைத்தேய அறிஞர்கள் உறுதியாக ஏற்றுக்கொள்வதில்லை.

எனவே, வரலாறுகளை எழுத முற்படுவோர் இயன்றளவு மேற்குறிப்பிடப்பட்ட வரலாற்று மூலாதாரங்களை எடுத்துக்காட்டி, உண்மைகளை நிறுவ முயலவேண்டும். அப்போதுதான் சரியான பாதையில் நாம் பயணிக்கலாம். எந்தவொரு விடயத்தையும் கேள்விப்பட்டவுடன் ஏற்றுக் கொள்ளாது, அதுபற்றி தேடியறிந்து உண்மைகளை வெளிக் கொண்டுவர வேண்டும். புனைகதைகளை வரலாறுகள் என நம்பி ஏமாறாது தர்க்க ரீதியாகவும் சிந்திக்க வேண்டும். தக்க சான்றுகளை முன்வைக்க வேண்டும்.

உலக மனித இனங்களுக்குள் தமிழ் இனம் பழம் பெருமை வாய்ந்ததாகும். அது பல்வேறு குலங்களும், கோத்திரங்களும், சாதிகளும் பின்னிப்பிணைந்த கூட்டு வடிவமாகும். பல அரசியல், பொருளாதார, சமூக தத்துவங்களை அது கொண்டுள்ளது. வரலாறுகளை திரிபுபடுத்தி அதற்கு யாரும் தனியுரிமை கொண்டாட முடியாது. அவ்வாறு முற்பட்டால் அது வெறும் கட்டுக் கதைகளாகவே தொடரும்.

தமிழ் மக்களுக்குள் பல்வேறு சாதிக் கட்டமைப்புகள் காணப்படுகின்றன. அவை ஒவ்வொன்றுக்கும் வரலாற்றுப் பின்னணிகள் உள்ளன. இந்த வகையில் வரலாற்றுத் தொன்மை வாய்ந்த சான்றார் சாதி பற்றி எழுத முற்பட்டுள்ளேன். ஒரு வரலாற்று ஆய்வுக்குத் தேவையான மூலாதாரங்கள் அனைத்தும் சான்றார் வரலாற்று ஆய்வுகளிலும் தாராளமாக

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காணக்கிடைக்கின்றன. இதனால் காய்தல் உவத்தல் இன்றி முடிபுகளை முன்வைக்க முடியுமாயுள்ளது.

சான்றார் குலத்தினரின் தோற்றம், ஆரம்பகால நிலை, பிற்பட்ட காலங்களில் அவர்களின் வகிபங்கு, அவர்களின் எழுச்சிகள், வீழ்ச்சிகள், சமூக நிலைகள் போன்றவற்றை அறிந்து கொள்வதற்கு பல சான்றுகள் பரவிக் கிடக்கின்றன. வரலாற்றுக்கு முற்பட்ட காலம் தவிர, இலங்கையில் தற்போதுள்ள இனங்கள், சமூகக் குழுக்கள் யாவும் (சிங்களவர் உட்பட) இந்தியாவிலிருந்து வந்தவர்களே. அந்த வகையில் சான்றார்களின் பூர்வீகமும் இந்தியாவே என்பதால், இந்தியாவில் காணப்படும் வரலாற்று மூலங்களையே முதலில் இவர்கள் பற்றிய ஆய்வுக்கு எடுத்துக் கொள்ள வேண்டியுள்ளது.

பின்வரும் வரலாற்று மூலாதாரங்கள் சான்றார் குல வரலாற்றை அறிய எமக்கு உதவுகின்றன.

1. புறநானூறு, தொல்காப்பியம் போன்ற சங்க நூல்கள்
2. வலங்கை மாலை
3. அவல்பூந்துறை சான்றோர்மடச் செப்பேடு (ஈரோடு மாவட்டம்)
4. திருவிடை மருதூர்ச் சான்றோர் மடச்செப்பேடு (தஞ்சை மாவட்டம்)
5. சிங்களாந்தகபுரம் கல்வெட்டு (பெரம்பலூர் மாவட்டம்)
6. தஞ்சைப் பெருங்கோவில் கல்வெட்டு
7. பெரும்பழஞ்சிக் கல்வெட்டு (சான்றார் முந்நூற்றுவர் பற்றியது)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

8. திருப்பராய்த்துறைக் கல்வெட்டு (திருச்சி மாவட்டம்)
9. மாந்தாதா (காளி) ஜாதகம் அமராவதிச் சிற்பம் (சென்னை மியூசியம்)
10. பெரியபுராணம்
11. சான்றோர் மரபு
12. சான்றோர் வரலாறு
13. தமிழருள் மறைந்த அரசகுலம்
14. சான்றார், நாடார், கிராமணி
15. சத்திரியகுல விளக்கம்
16. வலங்கை மாலையும், சான்றோர் சமூகச் செப்பேடுகளும்
17. யாழ்ப்பாண வைபவமாலை
18. யாழ்ப்பாண கௌமுதி
19. மேல்நாட்டு அறிஞர்களின் கூற்றுகள்
20. தேசசஞ்சாரிகளின் குறிப்புகள்
21. தொல்பொருட்கள்

*தமிழர் சமூக வரலாற்று ஆய்வு என்பது ஒரு குறிப்பிட்ட சிலரின் ஏகபோகம் என்ற நிலை மாறிவருகின்றது. அண்மைக் காலங்களில் தொல்லியல், கல்வெட்டியல் ஆய்வாளர்கள் தாங்கள் கள ஆய்வில் கண்டறிந்த தரவுகளைச் சமூக வரலாற்றாய்வுக்குப் பயன்படுத்தி உண்மைத் தன்மை வாய்ந்த விளக்கங்களை அளிக்கத் தொடங்கியுள்ளனர். இத்தகைய ஆய்வுக்கு, நாட்டுப்பாடல்கள் போன்ற*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வட்டாரத் தரவுகளைத் தீவிரமான, நடுநிலையான ஆய்வுக்கு உட்படுத்திப் பயன்படுத்தும் போக்கும் தொடங்கியுள்ளது.

இந்த வகையில்தான் அண்மையில் வெளியான 'வலங்கை மாலையும், சான்றோர் சமூகச் செப்பேடுகளும்' என்ற நூலை 'உலக தமிழாராய்ச்சி நிறுவனம்' வெளியிட்டிருந்தது. இந் நூலை தொல்பொருள் ஆய்வாளரும், கல்வெட்டியல் ஆய்வாளருமான திரு.எஸ்.இராமச்சந்திரன் அவர்கள் வெளியிட்டிருந்தார். அவ்வாய்வில் அவர் சான்றார் குலம் பற்றி மிகவும் ஆழமாக ஆராய்ந்துள்ளார். வலங்கை மாலை எனப்படும் இந்தியாவில் பிரபலமானதும், பழமையானதும், சான்றோர் வரலாற்றைக் கூறுவதுமான வில்லுப்பாட்டையும், சான்றோர் மடச் செப்பேடுகளையும், சான்றோர் தொடர்பான கல்வெட்டுகளையும் ஒப்பிட்டு ஆராய்ந்துள்ளார். இது ஒரு தரமான வரலாற்று நூலாகக் காணப்படுகின்றது.

"தமிழ்ச் சான்றார் சமூகம்" தொடர்பான வரலாற்று ஆய்வு 19ஆம் நூற்றாண்டின் பிற்பகுதியிலேயே தொடங்கியது. இதற்குக் காரணம் அதுவரை தமிழர்களால் தமிழ்மொழி ஆய்வும், தமிழர் வரலாற்று ஆய்வும், தமிழ்ப் பண்பாட்டு ஆய்வும் நேர்மையான முறையில் மேற்கொள்ளப்படவில்லை. தங்கள் தங்கள் வகுப்புகளை உயர்த்திப் பேசும் போக்கே காணப்பட்டது. இதனால் இக்காலங்களில் தமிழ்மொழி வளர்ச்சியும், தமிழர் வரலாற்று ஆய்வுகளும் மந்த நிலையை அடைந்தன. 18ஆம் நூற்றாண்டின் பின் மேலை நாட்டு அறிஞர்களும், கிறிஸ்தவ பாதிரிகளும் (கால்டுவெல், வீரமா முனிவர் போன்றோர்) தமிழ் மொழி ஆய்வுகளைச் செய்து கருத்து வெளியிட்டனர். தமிழ் ஆங்கில அகராதிகளை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வெளியிட்டனர். ஆனால் தமிழுக்கு ஆதிச் சிறப்பில்லை, சமஸ்கிருதம், வடமொழி போன்றவைதான் தமிழுக்கு மூலம் என்ற வகையில் கருத்துரைத்தனர். அப்போதுதான் தமிழ் அறிஞர்களுக்கு உத்வேகம் ஏற்பட்டது.

அதன்பின் சங்க காலத்திலிருந்து தமிழும், தமிழர் பண்பாடுகளும் ஆய்வுக்கு உட்படுத்தப்பட்டன. பல தமிழ்ப் பேரறிஞர்கள் தமிழின் தொன்மையையும், பெருமையையும், தமிழர்களின் நாகரிக மேம்பாட்டையும் வெளிக்கொணர்ந் தனர். தொல்காப்பியம், புறநானூறு போன்ற பழந்தமிழ் நூல்கள் ஆய்வுக்குட்படுத்தப்பட்டன. இதன்போதுதான், முக்கியமாக புறநானூற்று ஆய்வின்போதுதான் சான்றோர் குலத்தினரின் வீரமரபு வெளிப்பட்டது. அதுவரை "சான்றோர்" என்றால் "மேன்மையுடையோர்" "ஒழுக்கமுடையோர்" என்றவகையில் மட்டுமே பொருள்கொள்ளப்பட்டிருந்தது. தற்போது "சான்றோர்" என்றால், "வீர வம்ச குலத்தினர்" என வெளிப்படையாகவே தமிழ்ப் பேரறிஞர்களும், பேராசிரியர்களும், கலாநிதிகளும் ஏற்றுக்கொள்கின்றனர். அவர்களின் கருத்துகளை இந்நூலின் பல இடங்களில் காணலாம்.

சான்றார் வரலாறு பற்றி முதன்முதலில் எழுதப்பட்ட நூல் "சான்றோர் மரபு" எனும் நூலாகும். இது கி.பி.1871ஆம் ஆண்டு எழுதப்பட்டது. எனினும் இது வரலாற்று நூல் போலன்றி, சான்றார் குலத்தினரின் சில முக்கிய நிகழ்வுகளையும், உயர்வுகளையும் மட்டுமே பேசியதாகத் தெரிகின்றது. இதன்பின் பல நூல்கள் வெளிவரத் தொடங்கின. அவற்றுள் குறிப்பிடத்தக்க நூல்களாவன:

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

01. 1973இல் வெளியான தமிழருள் மறைந்த அரசகுலம் (நூலாசிரியர் : திரு. கொடித்தூர் இராசரெத்தினம், இலங்கை)

02. 1985இல் வெளியான "சான்றோர் வரலாறு" (நூலாசிரியர்: வடவைப் புலவர் புகழேந்தி எனப்படும் கி.மு.ம. மரிய அந்தோனி நாடார்)

03. 1978 இல் வெளியான "சான்றார், நாடார், கிராமணி"

04. 1972 இல் வெளியான "சத்திரிய குல விளக்கம்"

05. 2004 இல் வெளியான "வலங்கை மாலையும், சான்றோர் சமூகச் செப்பேடுகளும்" (நூலாசிரியர்: திரு.எஸ்.இராமச்சந்திரன், இந்திய கல்வெட்டியல் கழகம், இடப்பெயராய்வுக் கழகம், தென்னிந்திய நாணயவியற் கழகம், உலக தமிழாராய்ச்சி நிறுவனம் ஆகியவற்றின் வாழ்நாள் உறுப்பினர், தொல்பொருள் ஆய்வாளர், கல்வெட்டியல் ஆய்வில் நிபுணர், இத் துறைகளில் முதுகலைமாணிப் பட்டம் பெற்றவர்.)

இந்நூல்களில் சான்றோர் வரலாறு தொடர்பான சான்றுகளுடன் கூடிய பல அரிய தகவல்களும், ஒப்பீடுகளும், கல்வெட்டு விடயங்களும், செப்பேடுகளும், நாட்டார் வழக்குகளும், இலக்கிய ஆதாரங்களும் ஏராளமாகக் கிடைக்கின்றன. பல அறிஞர்களும் ஏற்றுக்கொள்ளக் கூடியவாறு ஆதாரங்களும், நிரூபணங்களும் உள்ளன.

சான்றார் வரலாறு தொடர்பாக கிடைக்கக்கூடிய எல்லா ஆதாரங்களையும் வைத்துப் பார்க்கும்போது, "சான்றார்" எனப்படும் பிரிவினர் கி.பி.4ஆம், 5ஆம் நூற்றாண்டுகளுக்கு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முன்னர் அரச தொடர்புடையவர்களாகவே இருந்துள்ளனர். புறநானூறு போன்ற நூல்களின் மூலம் அரசர்களும், அவனைச் சுற்றியுள்ளோரும் "சான்றார்" "சான்றோர்" என்றே அழைக்கப்பட்டுள்ளனர் எனத் தெரியவருகின்றது. கி.பி.4ஆம் நூற்றாண்டில் தமிழ்நாட்டில் "களப்பிரர்" எனப்படும் இனத்தினரின் படையெடுப்பு நடைபெறுகின்றது. இதில் சான்றார் குலத்தினரின் அரசியல் நிலை தளர்வடைகின்றது. வேளாளரின் நிலை இந்தக் காலத்திலிருந்தே உயர்வடைய ஆரம்பிக்கின்றது.

கி.பி.5 ஆம் நூற்றாண்டு தொடக்கம் கி.பி 15ஆம் நூற்றாண்டுவரை சான்றார் குலத்தவரின் நிலையைப் பார்த்தோமானால், இவர்கள் அந்தக் காலங்களுக்குரிய போர்ப்பயிற்சியை வழங்குபவர்களாகவும், போர்வீரர் களாகவும், தளபதிகளாகவும் இருந்துள்ளனர். சில நேரங் களில் குறுநில மன்னர்களாகவும், நிருவாகத்தில் பங்கு கொள்ளும் ஆட்சியாளர்களாகவும் இருந்துள்ளனர். இதற்கு பெரியபுராணம் கூறும் ஏனாதிநாத நாயனார் வரலாறு தக்க சான்றாக விளங்குகின்றது.

கி.பி. 9, 10ஆம் நூற்றாண்டுகளில் நிலவிய சோழப்பேரரசு காலத்தில் வலங்கைப் படைப்பிரிவுகளில் மிக முக்கிய இடத்தை சான்றார் குலத்தினர் வகித்துள்ளனர். வலங்கை உய்யக்கொண்ட படைப்பிரிவினர், முந்நூற்றுவர், எழுநூற்றுவர், குருகுலப் பிரிவினர், ஈழச்சான்றார் பிரிவினர் எனப்படுவோர். சோழப்படைகளிலிருந்த இச்சான்றோர் குலத்தவரானவேயாவர். இதற்கு தஞ்சைப் பெருங்கோயில் கல்வெட்டுகளும், வலங்கை மாலை எனப்படும் நூலும், வேறுபல கல்வெட்டுகளும் சான்று பகர்கின்றன.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கி.பி. 15ஆம் நூற்றாண்டுக்குப் பின்னர்தான் சான்றார் குலத்தவரின் நிலை பின்னடைவிற்குச் செல்கின்றது. இதற்கான காரணங்களாவன:

1. இந்தியாவில் இஸ்லாமியரின் ஆட்சி மேலோங்குகின்றது. இதனை எதிர்கொள்ள வட இந்தியாவில் "விஜய நகரப்பேரரசு" உதயமாகின்றது. தமிழ்நாட்டில் விஜய நகரப் பேரரசின் ஆட்சியாளர்களாக "நாயக்கர்" எனப்படுவோர் மாறுகின்றனர். இவர்கள் இடங்கைப் பிரிவினைச் சேர்ந்தோராவர். ஆனால் சான்றோர் வலங்கைப் பிரிவைச் சேர்ந்தோராக இருந்தமையால், மோதல்கள் வெடிக்கின்றன. இதில் இடங்கைப் பிரி வினரின் கை மேலோங்கியதால், தங்கள் குலத்தவரை உயர்த்துவதற்காக நாயக்க மன்னர்கள் சான்றாரை இழிவுபடுத்தி சட்டங்களைப் பிறப்பித்தனர்.இதனால் இவர்கள் பாரியளவு பாதிக்கப்பட்டனர். பின்தங்கிப் போயினர்.

2. சான்றார் குலத்தினர் பழைய மரபு ரீதியான யுத்தத்திலேயே பழக்கப்பட்டிருந்தனர். ஆனால் மத்திய காலப்பகுதியில் ஐரோப்பியர்களின் கண்டு பிடிப்புகளினால் பீரங்கிகளும், சுடுகலன்களும், கெரில்லாப் போர்முறைகளும், கடற்படைகளின் நவீனமயப்படுத்தலும் முன்னணிக்கு வருகின்றன. பழைய போர்முறைகள் செல்லாக்காசாகி விடுகின்றன. இதனால் பழைய முறையிலான போர்த் தொழிலையே குலத்தொழிலாகக் கொண்ட சான்றார் குலத்தினர் தங்களது சாதித் தொழிலை இழக்கின்றனர். விவசாயம், சிறு அளவிலான வர்த்தகம், சித்த

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மருத்துவம், வேறு தங்களுக்கு கிடைக்கக்கூடிய தொழில்களைச் செய்கின்றனர்.

3. சான்றார் குலத்தினரின் ஒற்றுமையின்மையும் அவர்களது வீழ்ச்சிக்குக் காரணமாகும். உள் முரண்பாடுகள் காரணமாக, வலங்கைப் பிரிவினரான வேளாளரைப்போல், திட்டமிட்டு காலச் சூழ்நிலைக் கேற்ப தங்களை தகவமைத்துக் கொள்ள இவர்களால் முடியவில்லை.

மேற்குறிப்பிடப்பட்ட காரணங்களினால், சான்றார் குலத்தவர்கள் பிற்படுத்தப்பட்ட நிலைக்குத் தள்ளப் படுகின்றனர். அவர்களுடைய வரலாறுகள் திட்டமிட்டு மறைக்கப்படுகின்றன. குலத்தொழில் மறைந்துபோனமையால், இவர்கள் வேறு தொழில்களுக்குரியவர்கள் (கள் தொழில்) என தவறாக பெயரிடப்படுகின்றனர். யுத்தம், அரச புறக்கணிப்பு, நிலையான தொழிலின்மை போன்ற காரணங்களால் சான்றார் குலத்தவர்கள் எண்ணிக்கையில் குறைந்து போகின் றனர். அதனால் பலவீனப்பட்டுப்போயினர்.

ஆனால் எக்காலத்திலும் இவர்கள் தங்களை குறைந்த வகுப்பினர் என்பதனை ஏற்றுக் கொள்வதில்லை. பல நூற்றாண்டுகளாகவே தாங்கள் அரசாண்ட வம்சத்தினர் என்று வாதாடி வருகின்றனர். ஆங்கிலேயர் காலத்திலும், அதற்குப் பின்வந்த காலங்களிலும் அரச சபைகளிலும், அறிஞர் அவைகளிலும் தங்களை "சத்திரியர்" என நிரூபித்தும் உள்ளனர். அவை வர்த்தமானிகளிலும், பதிவேடுகளிலும் பதிவு செய்யப்பட்டும் உள்ளன.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 2. “சான்றார்” எனும் சொல் பற்றிய விளக்கம்

பிற்காலங்களில் பழந்தமிழ் நூல்களுக்கு உரை எழுதுவோராலும், தமிழர் வரலாறுகளை எழுதுவோராலும், இலக்கியங்களை எழுதுவோராலும், செய்யுள்களை இயற்று வோராலும் சான்றார் தொடர்பான உண்மையான விளக்கங்கள் திரிபுபடுத்தப்பட்டோ அல்லது பொருள் விளக்கங்கள் மாற்றப்பட்டோ உள்ளன. “சான்றோர்” என்பது “சான்றார்” சாதிக்குரிய சொல்லாகவே பண்டைய காலத்தில் இருந்து வந்துள்ளது. பிற்காலங்களில் அது வேறு பொருள் கோடலுக்கு உள்ளானது. வரலாற்றில் பன்னெடுங் காலமாக “சான்றார்” என்பவர்கள் ஒரு வீர மரபினராக இலக்கியங்களிலும் இடம் பிடித்திருந்தனர். பிற்காலங்களில் அதன் அர்த்தம் மாற்றப்பட்டது.

“சான்றார்” என்பது “சால்” பகுதியும், “ற”கர மெய் இடைநிலையும், “ஆர்” என்ற பலர்பால் படர்க்கை விகுதியும் கொண்ட (சால்+ற்+ஆர்) ஒரு பெயர்ச்சொல்லாகும். அதில் “சால்” என்பது “மிகுதியான” “ஆற்றலுடைய” என்ற அர்த்தங்களையுடையது. எனவே சான்றார் என்பதன் நேரடிக்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கருத்து "மிகுதியுடையோர்" அல்லது "ஆற்றலுடையோர்" என்பதாகும்.

"சான்றார்" எனும் சொல் "அர்" விகுதியைப் பெறும் போது "சான்றவர்" என வருகின்றது. இதே சொல்லில் "ஆர்" விகுதியிலுள்ள "ஆ" எனும் எழுத்து நன்னூல் விதியின்படி "ஓ"வாக வரும்போது, "சான்றோர்" என வருகின்றது. செய்யுள் வடிவில் மாறும்போது சான்றார் என்பது "சான்றோர்" என இவ்வாறு மாற்றமடைகின்றது.

எடுத்துக்காட்டாக:

"பெயர் வினையிடத்து னளரய வீற்றயல் ஆ ஓ
வாகலும் செய்யுளு ளாரித்தே"

– நன்னூல் விதி

"ஆய்ந்த வுயர்திணைப்பேர் ஆ,ஓ வாம் செய்யுளிடை"

– நேமிநாதம் 62ஆம் சூத்திரம்

வல்லவர், வல்லார், வல்லோர் என்ற சொல்வடிவங்களும், நல்லவர், நல்லார், நல்லோர் என்ற சொல் வடிவங்களும், உயர்ந்தவர், உயர்ந்தார், உயர்ந்தோர் என்ற சொல்வடிவங் களும் எப்படி ஒரே பொருளைக் குறிக்கின்றனவோ அவ்வாறே சான்றவர், சான்றார், சான்றோர் என்பனவும் மும்மூன்று சொற்களாக வந்தாலும் அவற்றின் கருத்து ஒன்றாகும். "திரிகடுகம்" என்ற சங்க நூலில் (பாடல். 82) "சான்றோரைச் சான்றார் எனவும் அழைப்ப" ("சான்றாருட் சான்றான் எனப்படுதல் எஞ்ஞான்றும்") எனக் கூறப்பட்டுள்ளது. "சான்றார்" எனும் சொல்லானது, புறநானூற்றில் 45 தடவை களும், அகநானூற்றில் 26 தடவைகளும், திருக்குறளில்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

41 தடவைகளும், நாலடியாரில் 35 தடவைகளும், பழமொழியில் 19 தடவைகளும் பயன்படுத்தப்பட்டுள்ளன.

இதேபோல் சால் + ஆர் = "சாலார்" எனும் சொல்லில் இருந்து தோன்றியதே "சாணார்" (சாணோர்) எனும் சொல்லுமாகும். இது மேல் + ஆர் = "மேலார்" (மேனோர்) என்பது போலவும், மேல் + நாட்டார் = "மேனாட்டார்" என்பது போலவும், சோழ + நாடு = "சோணாடு" என்பது போலவும் உருவாகிய சொல்லாகும். சால் + நாடு = "சாணாடு" என்பதுதான் "சோணாடு" ஆகவும், சால் + அர் = "சாலர்" தான் "சோழர்" ஆகவும் திரிபடைந்திருக்க வாய்ப்புள்ளது.

ஆகவே, சான்றார், சான்றோர், சாணார், சாணோர் ஆகிய அனைத்துச் சொற்களினதும் அடிச்சொல் "சால்" (மிகுதியுடைய, வலிவுடைய, நிறைவுடைய, ஆற்றலுடைய, சால்புடைய, பொறையுடைய) எனும் சொல்லாகும். "சான்றார்" எனும் சொல்லின் "பகுதிக்கு" நாம் வேறு அர்த்தம் கொடுக்க முற்பட்டால், "சான்றோர்" எனும் சொல்லுக்கும் பிழையான அர்த்தம் கற்பிப்பவர் களாவோம்.

கி.பி. 1970 ஆம் ஆண்டு தாவீதடிகளால் வெளியிடப்பட்ட "சொற்பிறப்பு ஒப்பியல் தமிழ் அகராதி" (பக். 36–39)யில் "சால்" எனும் தொல் பதம் குறுந்தொகை, புறநானூறு, பதிற்றுப்பத்து, அகநானூறு, திருக்குறள், நாலடியார், பழமொழி என்ற சங்க நூல்களில் சால், சால, சான்ற, சான்றவன், சான்றான், சான்றோன், சான்றாண்மை எனத் தொடர்பு படுவது குறித்துக் காட்டப்பட்டுள்ளது. இதுவே அராபிய மொழியில்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"சலாம்" எனவும், சமஸ்கிருதத்தில் "விசாலம்" எனவும் வருவதாக அதில் மேலும் கூறப்பட்டுள்ளது.

ஆங்கிலேயர்களான ரி. பரோவ் (T.Burrow) என்பவரும், எம்.பி.இமேனெயு (Emeneau) என்பவரும் இணைந்து வெளியிட்ட "A Dravadian Etymological Dictionary" எனும் அகராதியில் (பக். 160) இல் "சால் (சால்வ் – சான்ற்) to be abundant, full, be suitable, be great, Noble, as Noun, "Fullness, abundance, excellence, nobility" எனக் குறிப்பிடப்பட்டுள்ளது. இதில் "சான்ற்" எனும் உயர்வான சொல் "சான்றாரையே" குறித்து நிற்கின்றது.

"சான்றார்" என்பது ஒரு பண்புப் பெயராகும். பார்ப்பனர்களுக்கு "அந்தணர்" என்ற அம் + தண் + அர் = அழகிய குளிர்ந்த தன்மை உடையவர், அதாவது காருண்ய குணமுடையார் என்ற பண்புப்பெயர் சாதிப் பெயராக மாறியது போல, அரசர்களுக்கும் "சான்றார்" என்ற பண்புப் பெயர் சாதிப் பெயராக அமைந்துள்ளது.

"ஒருவரும் இல்லை மாதோ செருவத்துச்
சிறப்புடைச் செங்கண் புகையவோர்
தோல்கொண்டு மறைக்கும் சால்புடை யோனே"

– புறநானூறு 311

இதில் ஒருவரும் இல்லாதபோதும், தான் தனியே நின்று எதிரியின் படையுடன் பெரும்போர் செய்து மீண்டவன் இம்மன்னன். இம்மன்னனைப் பாடிய ஔவையார் "சால்புடையோன்" எனக் கூறியுள்ளார். ஆகவே

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"சால்புடையோன்" என்பது "சான்றான்" எனும் சொல்லின் பகுதியைக் கொண்ட சொல்லே என்பது தெளிவானதாகும்.

சான்றோர், சான்றார், சாணார், சாண்டார், நாடார், கிராமணி, தளையர் இவையனைத்துச் சொற்களும் ஒரே குலத்தினரையே குறிக்கும் சொற்களாகும். "சான்றார்" எனும் சாதிக்குரிய சொல்லே செய்யுள் வடிவில் "சான்றோர்" எனச் சிறப்பித்தும், பேச்சு வடிவில் மூன்றை "மூணு" என்பது போல சான்றாரை "சாணார்" எனவும், கொச்சைத் தமிழில் "சாண்டார்" எனவும் திரிபடைந்து வழங்கப்படுகின்றது. சான்றார் நாட்டுக்கரசர்களாக இருந்தமையால் "நாடார்" எனப் பட்டப் பெயரையும், கிராமங்களை நிருவகித்தமையால் "கிராமணி" என்ற பெயரையும், தலைமைப் பதவிகளைப் பெற்றமையால் "தளையர்" என்ற பெயரையும் பெற்றனர்.

இதனையே கலாநிதி க. கைலாசபதி அவர்கள் தமது "பண்டைத் தமிழர் வாழ்வும் வழிபாடும்" (பக். 38) இல் 'வீர யுகத்திலே சான்றோர் எனும் சொல் போர் வீரரை குறித்து. காலப்போக்கில் போரில் புகழ் எய்திய தலைவர் வீரர்களாகவும், சான்றோர்களாகவும் கருதப்படலாயின' என குறிப்பிடுகின்றார்.

தமிழறிஞரான ஞா. தேவநேயப் பாவாண உரோமானிய நாகரிகத்தில் 'Knight' என வழங்கப்பட்ட உயர் வர்க்கப் போர்வீரர்களுக்குச் சமனாக தமிழக வீரர்கள் 'சான்றோர்' என அழைக்கப்பட்டதாகக் கூறுகின்றார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

'மண்ணும் மனித உறவுகளும்' என்ற நூலுக்கு பேராசிரியர் க.கைலாசபதி அவர்கள் எழுதிய முன்னுரையானது இலங்கை கல்வி அமைச்சின் 'கூர்மதி' 2008 (பக்.13) இல் வெளிவந்துள்ளது. அதில் அவர் குறிப்பிடும்போது "பெரும் பாலும் புராண மரபில் வந்த பிரபந்தங்களிலே திளைத்திருந்த தமிழ் இலக்கிய உலகிற்கு மேற்குறிப்பிடப்பட்ட முந்து நூல்கள் (சங்ககால நூல்கள்) புதியதொரு அனுபவத்தை உண்டாக்குப்வையாக அமைந்திருந்தன. "சான்றோர்" என்ற சொல்லை அறிவொழுக்கங்களால் நிறைந்த பெரியோர்களைக் குறிக்கப் பயன்படுத்திய பிற்காலப் புலவர்களின் நூல்களைப் பயின்றுவந்த நம்மவர்க்கு அச்சொல் 'வீரரை'க் குறித்தது என்பது புறநானூறு முதலிய நூல்களால் புலப்படலாயிற்று" எனக் குறிப்பிடுகின்றார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 3.சான்றார் பற்றிய இலக்கிய ஆதாரங்கள்

*1. 1899 இல் மேலைப்புலோலி நா.கதிரவேற் பிள்ளை அவர்களால் எழுதி வெளியிடப்பட்ட "தமிழ்ப் பேரகராதி"யில் பின்வருமாறு குறிப்பிடப்பட்டுள்ளது.*

*சால் – மிகுதி, சான்றார் – மிகுதியுடையோர், சாணார், சான்றோர், கிராமணி – கிராமத் தலைவன், சான்றோன், நாடன் – சோழன், நாடான் – சாணாருக்குரிய பட்டப் பெயர், சாணான் – ஒரு சாதியான், சான்றான்.*

*2. சான்றோர் – ஒரு சாதியார் (பெயரகராதி 1842)*

*3. சேனாவரையர் எழுதிய தொல்காப்பியம், பெயரியல், 33ஆம் சூத்திர உரை*

*"எல்லாப் பார்ப்பாரும், எல்லாச் சான்றாரும்.."*

*இவ்வரிகளின்படி பிராமணருக்கு அடுத்தபடியாக "சத்திரியர்" (ஆட்சி புரிவோர், அரசர்கள்) வரவேண்டிய இடத்தில் "சான்றார்" என குறிப்பிடப்பட்டுள்ளது. எனவே சான்றார் சத்திரியரேயாவர்.*

*4. "சான்றார்" எனும் சொல் செய்யுள் வழக்கில் வரும் போது "சான்றோர்" என வரும். (நேமிநாதம் 62ஆம் சூத்திரம்)*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

*5. "சான்றார்" எனும் சொல் பேச்சுவழக்கில் வரும் போது மருவி "சாணார்" எனவும் வரும். "மூன்று" என்பது "மூணு" என்பது போலவும், "பன்றி" என்பது "பன்னி" என்பது போலவும் நன்னூல் விதிப்படி. (சான்றோர் வரலாறு)*

*6. சான்றார், சான்றோர் எனும் சொற்களின் பகுதியாக வரும் "சால்" என்பதைக் கவனித்தால் அதன் கருத்து அறிவுடையோர், ஒழுக்கமுடையோர் என்று மட்டும் வராது. ஆற்றலுடையோர், படைத்திறனுடையோர் என்றும் வரும்.*

*(கழகத் தமிழ் கையகராதி. பக்.178)*

7. "அந்தணர் திறந்தும், சான்றோர் தேஎத்தும்
அந்தமில் சிறப்பிற் பிறர்பிறர் திறந்தும்"

*(தொல்.பொருளதிகாரம், கற்பியல் 5)*

*இங்கு சான்றோர் ஓர் சாதியாக அரச குலமாக கூறப் பட்டுள்ளது.*

*8.* "பல் சான்றீரே, பல்சான்றீரே
குமரி மகளிர் கூந்தல் புரைய
அமரில் இட்ட அருமுள் வேலிக்
கல்லென் பாசறைப் பல் சான்றீரே"

*(புறநானூறு 301 ஆம் பாடல்)*

*பொருள்: பலராகிய சான்றோரே! குமரி மகளிர் கூந்தலைப்போல, அடர்த்தியாக முள்வேலியிட்டு அதனுள் பாசறையில் இருக்கும் பல்சான்றீரே! (இந்தப் பாடலின்படி சான்றார் படைவீரர்களாகவும், அரச குலமாகவும் குறிப்பிடப் பட்டிருப்பதை தெளிவாகக் காணலாம்.)*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

9. "தேர் தரவந்த சான்றோரெல்லாம்
தோல்கண் மறைப்ப வொருங்கு மாய்ந்தனரே!"

*(புறநானூறு 63, 16)*

இதில் வரும் சான்றோரை "அறிஞர்" என்ற கருத்தில் எவரும் பொருள் கொள்ள முடியாது. உண்மையில் பிற்காலத்தவர் சிலர் சான்றோர் என்பதை கல்வி, ஒழுக்கம் என்பவற்றுடன் தொடர்புபடுத்தி விட்டனர். ஆனால் இந்தப் பாடலின்படி "மன்னனுக்காக தேர்ப்படையுடன் வந்த சான்றார்குலப் படையினர் அனைவரும் களமாடி வீழ்ந்தனர்" என்பதே கருத்தாகும்.

சங்க இலக்கியங்களில் சான்றோர் என்ற சொல்லாட்சி பரவலாக இடம் பெற்றுள்ளது. இச்சொல்லுக்குப் "போரில் அமைதியுடைய வீரர்" எனப் பழைய உரையாசிரியர்கள் பொருள் கொண்டுள்ளனர். அண்மைக் காலத்துத் தமிழறிஞரான ஞா.தேவநேயப் பாவாணர் உரோமானிய நாகரிகத்தில் Knight என வழங்கப்பட்ட உயர்வர்க்கப் போர் வீரர்களுக்குச் சமமான தமிழக வீரர்கள் 'சான்றோர்' என அழைக்கப்பட்டனர் எனக் குறிப்பிட்டிருப்பது கவனிக்கத் தக்கதாகும். Knight என்ற பட்டம் பெற்ற உயர்வர்க்கப் போர்வீரனுக்குக் குதிரைகள் பூட்டிய தேர் வழங்கப்படுவது உரோமானிய மரபாகும். "தேர்தர வந்த சான்றோரெல்லாம் தோல்கண் மறைப்ப ஒருங்கு மாய்தனரே" எனும் இந்தப் புறநானூற்றுப் பாடலடிகளிலிருந்து சான்றோர் எனப்படுவோர் தலையாய போர் மரபினர் என்பதை உணரலாம்.

10. "எழுமுடி கெழீஇய திருஞெமர் அகலத்து
நோன்புரி தடக்கைச் சான்றோர் மெய்மறை"

*(பதிற்றுப்பத்து 14, 10 – 11)*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இதில் வரும் 'தடக்கைச் சான்றோர்' என்பது 'வலிமையுடைய, நீண் வாள் வீசக்கூடிய கைகளையுடைய சான்றோர்' எனப் பொருள்படும். 'சான்றோர் மெய்மறை' என்பது தமது அரசனை நோக்கி வரும் அம்பானது அவ்வரசன் மார்பைத் தைக்காதபடி குறுக்கிட்டுத் தடுத்து தமது மார்பைக் கொடுத்தலாகும். (தற்காலத்து மெய்ப் பாதுகாவலர் போன்றது.) இது படையினராகிய சான்றோர் செயலாகும். இவ்வாறு தன் இன்னுயிரைத் தியாகம் செய்து வீரமரணமடைந்த அவ்வீரன் இறந்த இடத்தில் "வீரக்கல்" (நடுகல்) நட்டு கடவுள் என வழிபடுதல் பண்டைக்கால முறையாகும். இது "சான்றோர் மெய்மறை" எனப்பட்டது. (சான்றோர் வரலாறு பக். 84,85)

11. "கொலக் கொலக் குறையாத்
தானைச் சான்றோர்"

(பதிற்றுப்பத்து 82, 13 160)

போரில் கொல்லக் கொல்லக் குறையாது மீளவும் பெருகும் படைப்பெருக்குடைய சான்றோர் படையைக் கொண்ட அரசனே! என இதற்குப் பொருள் வரும்.

12. "சான்றோ ரில்லாத் தொல்பதி யிருத்தலின்
தேன்தேர் குறவர் தேயம் நன்றே"

(வெற்றிவேற்கை 26ஆம் சூத்திரம்)

அக்காலத்தில் அரசர்களே மக்களின் காவலர்களாக விளங்கினர். எனவேதான் இப்பாடலில் "அரசர்கள் இல்லாத ஊரில் குடியிருப்பதைவிட குறவர்களுடன் காட்டில் தேனுண்டு வாழ்தல் நன்று" எனப் பொருள் கொள்ள வேண்டியுள்ளது. இங்கு அரசர் சான்றோராகக் காட்டப்பட்டுள்ளது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

*13.* "சான்றோர் வேல்ப்படை" வேல்ப்படையையுடைய அரசர்

*(தொல்காப்பியம் சூத்திரம் 20ஆம் வரி)*

*14.* "சான்றோர் எறிந்த வேலினும், வாளினும், கணையினும்"

*(நல்லாப்பிள்ளை பாரதம், பீஷ்ம பருவம்)*

*இங்கு வரும் பாடல் வரிகளில் "சான்றோர்" என்பது போர் வீரர்களையே குறித்து நிற்பது தெளிவாகத் தெரிகின்றது. எனவே வேல் எறிதலும், வாள் வீசுவதும், கணை எறிதலும் சான்றோர்களின் குலத் தொழிலாகும்.*

*15.* "ஈன்று புறந்தருதல் என் தலைக் கடனே
சான்றோ னாக்குதல் தந்தைக்குக் கடனே
வேல் வடித்துக் கொடுத்தல் கொல்லர்க்குக் கடனே
நன்னடை நல்கல் வேந்தர்க்குக் கடனே
ஒளிறுவாள் அருஞ்சம முருக்கிக்
களிறு எறிந்து பெயர்தல் காளைக்குக் கடனே"

*(புறநானூறு 312)*

*இப்பாடலின்படி மகனுக்கு யுத்தப் பயிற்சியளித்தல் தந்தையின் கடமையாகும். ஏனெனில் களிறு எறிந்து பெயர்தல் மகனின் கடமையாகக் கூறப்பட்டுள்ளது. எனவே இதில் வரும் "சான்றோன்" என்பது போர்வீரனையே குறிக்கின்றது.*

*16. கலித்தொகையில் (10:20) "சான்றார் மகளிர்" என்ற சொல்லாட்சி இடம் பெறுகின்றது. வழக்குத் தீர்க்கின்ற மன்றத்தின் தலைவர்களான சான்றார்களின் குலத்தைச்*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சேர்ந்த பெண்களையே இச்சொல்லாட்சி குறிப்பிடுகின்றது.

17. "தமிழ் நெறி விளக்கம்" என்ற இடைக்கால இலக்கண நூலில் "குலம் மேம்பட்ட சான்றோர்" என குறிப்பிடப் பட்டுள்ளது. இதில் நேரடியாகவே சான்றோரை ஒரு சாதியாக குறிப்பிடப்பட்டுள்ளது.

18. சான்றார் குலத்தினரின் குலதெய்வம் காளி ஆகும். இலங்கையில் அது கண்ணகியாக மாறிவிட்டது. குப்த அரசர்கள் காலத்தில் வாழ்ந்த கவி காளிதாசன், தனது சியாமளா தண்டகத்தில் காளியை "சானுமத் புத்திரிகே" எனக் குறிப்பிடுகிறான். "சான்றார் மகள்" என்பதே இதன் பொருளாகும்.

19. சான்றாரின் குலம் சூரிய குலமாகும். சமஸ்கிருத மொழியில் ஏனாதிநாத நாயனாரைக் குறிப்பிடும் போது,

"அஸ்மின் ஏனாதி நாதாக்ய
ஆசித் சா'ஜீ குலோத்பவா"

எனக் குறிப்பிடப்படுகின்றார்.

இதில் "சாஷி குலம்" என்பதன் பொருள் "சூரிய குலம்" என்பதாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 4.சான்றாரின் ஆரம்பமும் பரவலும் - புராதன காலம்

## (கி. பி. 4-ஆம் நூற்றாண்டு வரை)

கி.பி 17ஆம் நூற்றாண்டுக்கு உரியதான திருவிடை மருதூர் சான்றார்மடச் செப்பேடு, கருமாபுரம் சான்றார்மடச் செப்பேடுகள், அவல்பூந்துறை சான்றார்மடச் செப்பேடு போன்றவற்றில் சான்றார் குலத்தின் 7 பிரிவுகளின் தோற்றம் பற்றி குறிப்பிடப்பட்டுள்ளது. வித்தியாதர முனிவனும், 7 கன்னியரும் இக்குல மூதாதையினராகவும், காளி இவர்களுடைய குலதெய்வமாகவும் அச்செப்பேடுகளில் காணப்படுகின்றது. (வலங்கை மாலையும், சான்றோர் சமூகச் செப்பேடுகளும், பக். 21, திரு S.இராமச்சந்திரன்.)

இற்றைக்குப் பல்லாயிரம் வருடங்களுக்கு முன் (சுமார் கி.மு.2378) உலகத்தில் நிலவிய லெமூரியாக் கண்டம் (குமரிக் கண்டம்) பற்றி 20ஆம் நூற்றாண்டிலேதான் அறிஞர்கள் கருத்து வெளியிட்டனர். கடலியல் ஆய்வாளர்களும் இதனை உறுதிப்படுத்தியுள்ளனர். எமது பழம் நூல்களின்படி இங்குதான் பகுறுளி ஆறும், குமரிக் கோட்டமும், இமயமலையின் ஒரு பாகமும், ஒலை நாடு, எல்லம் (ஈழம்) போன்ற பல நாடுகளும் காணப்பட்டன. இக்குமரிக்கண்டம் கண்டப் பிளவுகள் காரணமாகவோ என்னவோ கடலால்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கொள்ளப்பட்டது. தற்போதைய கடலியல் ஆய்வுகள் மூலம் இதற்கான தடயங்கள் கிடைத்துள்ளன. இங்குத் தமிழர்களின் மூதாதையர்களே வாழ்ந்துள்ளனர். "பகுறுளியாற்றோடு, பன்மலை அடுக்கத்து குமரிக்கோடும் கொடுங்கடல் கொள்ள" என்று சிலப்பதிகாரம் குறிப்பிடுவதுதான் அந்தக் குமரிக்கண்டமாகும்.

குமரிக்கண்ட மக்களில் கடற்கோளில் மாண்டவர் போக எஞ்சியோர் உலகின் பல பாகங்களுக்கும் சென்றனர். குறிப்பாக, ஓரளவு அண்மித்த பிரதேசமாகிய சிந்து வெளிப்பகுதிக்குச் சென்றனர் (கி.மு.2378-1500 வரை). இங்கு வாழ்ந்த மக்கள் 'திராவிடர்களே' என மேலைத்தேய அறிஞர்கள் பல ஆய்வுகளுக்குப்பின் உடன்பட்டுள்ளனர். திராவிடர்களும் தமிழர்களேயாவர். தெலுங்கு, கன்னடம், துளு, மலையாளம் முதலியவற்றின் மூலம் தமிழேயாகும் (மொழி வரலாறு, டாக்டர். மு.வரதராசன்). ஆகவே சிந்துவெளியில் கண்டுபிடிக்கப்பட்ட மொஹஞ்சதாரோ (இறந்தவர் மேடு), ஹரப்பா நாகரிகங்கள் தமிழர்களுடையதே என்பது தெளிவாகின்றது.

குமரிக்கண்ட தொடர்பைக்கொண்ட எல்லம் (ஈழம்) என்ற நாடடை ஆண்ட மன்னன் 'எல்லாளன்' என அழைக்கப்பட்டான். இவனுடைய குலம் 'ஈழ' என்பதாகும். இது சான்றார் குலத்தின் உட்பிரிவாகிய 'ஈழச் சான்றார்' குலமாகும். இதனையே பெரியபுராணம் 'ஈழக் குலச் சான்றார் ஏனாதிநாத நாயனார்' என்கின்றது. இந்த விடயம் சான்றார்கள் அக்காலம் முதலே கோலோச்சியமைக்கு சிறந்த சான்றாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கி.மு 1500 ஆண்டளவில் சிந்துவெளியில் வாழ்ந்த திராவிடரை ஆரியர்கள் வெற்றி கொண்டனர் (ஆதாரம்: இருக்கு வேதம்). "வெற்றி கொள்ளப்பட்ட சூரிய வம்ச திராவிட மன்னர்கள் சான்றார் வம்சத்தினராவர்" என A.L. பாஸன் எனும் அறிஞர் தனது 'வியக்கவைத்த இந்தியா' எனும் நூலில் எழுதியுள்ளார்.

சிந்துவெளியில் தோற்கடிக்கப்பட்ட சிலர் அடிபணிய, பலர் தென்னிந்தியாவிற்குத் தப்பியோடினர். ஒரு சிலர் ஆட்சியைத் திரும்ப கைப்பற்றிக் கொள்வதற்காக யமுனா நதியோரமாக குடியேறினர். இப்பகுதி சான்றார்களால் ஆளப்பட்டது. இங்கிருந்தே பின்னர் இவர்கள் தென்னிந்தியாவிற்குச் சென்றனர். (கொடித்தூர் இராசரெத்தினம், தமிழருள் மறைந்த அரசகுலம் பக்.2.)

ஆதியில் வட இந்தியாவில் "சான்றார்" எனப்படுவோர் "சொலதே" (Soladae) அல்லது "சான்றோ" (Sondre) என கிரேக்கர்களால் அழைக்கப்பட்டதாக "புராதன இந்தியா" (Ancient India) எனும் நூலில் (பக். 154) 'மெக்தினஸ் அரியன்' எனும் அறிஞரால் குறிப்பிடப்பட்டுள்ளது.

கிரேக்கரால் "சான்றோ கோட்டஸ்" (சான்றோர் கோட்டை) என அழைக்கப்பட்ட மௌரியப் பேரரசனான சந்திர குப்தனால் (கி.மு.322–237) ஆரம்பிக்கப்பட்ட இனத்தினரே சான்றார்களாவர்" என J.F.பீலிட் என்பவர் தனது 'கன்னடத்து அரச குலத்தவர்' எனும் நூலில் எழுதியுள்ளார். சந்திர குப்தனின் அரசியல் ஆலோசகர் சாணக்கியன் என அழைக்கப்பட்டது 'சான்றார்' எனும் சொல்லின் தொடர்பைக் காட்டுவதாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வட இந்தியாவில் நிரந்தரமாகத் தங்கிவிட்ட சான்றாரின் ஒரு பிரிவினர் காலப்போக்கில், ஏன் தற்போதும்கூட 'சாண்டாழ்' என அழைக்கப்படுகின்றனர். இவர்கள் இன்றும் 'சாண்டாழ் மொழி' எனும் மொழியையே பேசுகின்றனர். இது தமிழுடன் கலந்த ஒரு மொழியாகும்.

வட இந்தியாவிலிருந்து கிழக்குக் கரையோரமாகவே சான்றார் பிரிவினர் தென்னிந்தியாவிற்கு வந்துள்ளனர். இதற்கு வங்காள தேசத்திலுள்ள சாண்டா நாக்பூர், சாண்பூர், சோண்பூர், சாண்டா போன்ற தற்போதுள்ள பிரதேசங்கள் சான்று பகர்கின்றன.

வங்காள தேசத்திலிருந்தே சான்றார் அரச குலத்தவர் தமிழ் நாட்டுக்குள் பிரவேசித்தனர். சோழ மன்னர்களின் தேசியக் கொடி புலிச் சின்னம் (வங்காளப் புலி) கொண்டதாகும். தமிழ் நாட்டுக் காடுகளுக்குள் புலி காணப்படுவதில்லை. ஆகவே வங்காளத்திலிருந்து வந்த சான்றார்களே தங்கள் அரசியல் அடையாளமாக வங்காளப் புலியை வைத்திருக்கலாம். தென்னாட்டில் பிரதான சாதியினர் பலர் தங்கள் அரச அடையாளமாக குறிப்பிட்ட சின்னங்களை வைத்திருந்தனர். பாண்டிய தொடர்புடைய நெய்தல்நில மக்கள் மீன் கொடியையும், சேர நாட்டுத் தொடர்புடைய மலைப்பிரதேச மக்கள் விற்கொடியையும், மருதநில மக்கள் ஏர்க்கொடியையும், சோழ அரச தொடர்புடைய சான்றார்கள் புலிக்கொடியையும் தங்கள் அரச அடையாளமாக வைத்திருந்தனர்.

பண்டைய தமிழ்நாட்டில் (சங்க காலம் கி.பி. 4 வரை) சாதிப்பிரிவு முறைகள் காணப்படவில்லை. ஆனால்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவர்கள் வாழும் பிரதேசத்தையோ, செய்யும் தொழிலையோ கொண்டு பல பெயர்களால் அழைக்கப்பட்டனர். பள்ளப் பகுதியில் வாழ்ந்தோர் "பள்ளர்", "உழவர்", "ஒளியர்" எனவும், வேளாண்மை செய்தோர் "வேளீர்" எனவும், வேட்டையாடியோர் "எயினர்" எனவும், கள் விற்றோர் "பழையர்", "நுளையர்" எனவும், கரைப்பகுதியில் வாழ்ந்தோர் "பரதவர்" (பரதம் - கடல்) "கரையர்" எனவும், முத்தெடுப்போர் "முக்கியர்" எனவும், அக்காலக் கல்வியாகிய போர்ப் பயிற்சியுடன், அரசாட்சியும் செய்தோர் "சான்றார்" எனவும், "சான்றோர்" எனவும் அழைக்கப்பட்டனர்.

இன்னொரு வகையில் நோக்கினால் மருதநில மக்கள் பள்ளர், வேளீர், ஒளியர் எனவும், நெய்தல்நில மக்கள் பரதவர், கரையர், முக்கியர், செம்படவர் எனவும், குறிஞ்சி நில மக்கள் குறவர், புனவர், கானவர், எயினர் எனவும், முல்லை நில மக்கள் இடையர், குறும்பர், ஆயர் எனவும், பாலை நில மக்கள் மறவர், கள்ளர் எனவும் அழைக்கப்பட்டனர். ஆரம்ப நிலை அரசுகளையும், பாதுகாவலையும் செய்த மக்கள் "சான்றார்" என அழைக்கப்பட்டனர்.

பேராசிரியர் கா. சிவத்தம்பி அவர்களுடைய "பண்டைத் தமிழ் சமூகம்" எனும் நூலிலும், பேராசிரியர் க. கைலாசபதி அவர்களுடைய "பண்டைத் தமிழர் வாழ்வும் வழிபாடும்" எனும் நூலிலும், பேராசிரியர் குஞ்ஞன் பிள்ளை அவர்களுடைய "பண்டைய கேரளம்" எனும் நூலிலும் இவ்விடயம் பின்வருமாறு பிரித்துக் காட்டப்பட்டுள்ளது,

| | | |
|---|---|---|
| முல்லை | - | இடையர், ஏறாடிகள், குறும்பர், ஆயர் |
| மருதம் | - | வேளீர், பள்ளர், உழவர், ஒளியர் |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குறிஞ்சி - குறவர், புனவர், கானவர்

நெய்தல் - பரதவர், மீனவர், வலையர், நுழையர், பழையர், செம்படவர், முக்கியர், கரையர், திமிலர், திரையர்

பாலை - மறவர், வேட்டுவர், எயினர்

எனவே, சங்க காலத்தில் வாழ்ந்த தமிழ் மக்களிடையே சாதிப் பாகுபாடு இருக்கவில்லை. ஐவகை நிலங்களிலும் வாழ்ந்த மக்கள் அந்நிலங்களுக்குரிய தொழில்களைச் செய்து வந்தனர். அதனால் தொழில்களுக்கு ஏற்ப பெயர்கொண்டு அழைக்கப்பட்டனர். இவர்களிலிருந்து வந்தவர்களே பிற்கால தமிழ்ச் சாதியினராவர். ஆனால் எந்த வரலாற்று நூல்களிலும் இப்பிரிவுகளுக்குள் "சான்றார்" அடக்கப்படவில்லை என்பதை அவதானிக்கலாம். இதிலிருந்து சான்றார் தமிழ் நாட்டுக்குப் பிந்திவந்தவர்கள் என்பதும், வடநாட்டிலிருந்து வந்தவர்கள் என்பதும் தெளிவாகின்றது.

பின்வந்த காலத்தில் (கி.பி.4ஆம் நூற்றாண்டின் பின்) 'களப்பிரர்' எனும் இனத்தினர் தமிழ்நாட்டுக்குள் புகுந்து, குழப்பங்களை விளைவித்து, தமிழர் சமூகக் கட்டமைப்பையும் மாற்ற முற்பட்டனர். அவர்களால் வலிந்து கொண்டுவரப்பட்டதே வர்ண, சாதிப் பிரிப்பு முறையாகும்.

இதில் அப்போதே அதிகாரத்திலிருந்த "சான்றார்" களப்பிரரால் இம்சைப்படுத்தப்பட்டனர். காரணம், களப்பிரருக்கும் சான்றோருக்கும் இடையில் ஏற்பட்ட அதிகாரப் போட்டியாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தமிழருள் ஒரு பிரிவினராகிய "சான்றார்" சற்று பிற்பட்ட காலத்திலேயே தமிழ்நாட்டுக்குள் ஒன்று கலந்தனர். இதனால் தமிழர் சாதிப் பண்புகளிலிருந்து வேறு பட்ட ஒரு தன்மையையே இவர்கள் கொண்டுள்ளனர். இக்கருத்தை ஏற்றுக்கொண்ட பேராசிரியர். ஏ.நாகம் அவர்கள் இக்கருத்துக்கு ஆதாரமாக பின்வரும் விடயங்களை சுட்டிக் காட்டுகின்றார்.

1. சான்றாருக்குள் கூடுதலானோர் வேளாண்மை செய்வர். ஆனால் அவர்கள் தங்களை "வேளாளர்" என அழைப்பதில்லை.
2. கோவில் குருக்கள் தங்களை "பிராமணர்" என அழைப்பதில்லை. "ஐயர்" என தங்கள் பெயரை எழுதிக் கொள்வர்.
3. வியாபாரம் செய்வோர் "செட்டிகள்" என அழைப்ப தில்லை. "நாடார்" என அழைப்பர்.
4. சான்றார்களின் குலதெய்வம் பத்திரகாளி. அது வட இந்தியாவிலுள்ள பத்திரிநாத் தலத்தின் அடிப்படையில் வந்ததாகும்.
5. சான்றார் பெரும்பாலும் இறந்தவர்களைப் புதைப் பார்கள். புதைப்பது சிந்துவெளி கலாசாரமாகும்.

பேராசிரியர் கா. சிவத்தம்பி அவர்கள் தனது "பண்டைத் தமிழர் வாழ்வும் வழிபாடும்" (பக்.36) எனும் நூலில் கூறும்போது "போரில் இறந்தவர்களுக்குச் செய்யும் இறுதிச் சடங்குகள் வீர வணக்கம் தோன்றிய விளைநிலமாகும். ஆங்கு (மயானங்களில்) தாழிகளிலோ அல்லது கல்லறைகளிலோ

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மனித எலும்பத் துண்டுகளும், இரும்பாயுதங்களும், மட்பாண்டங்களும் கிடைத்துள்ளன. பெரும்பூர், சாணூர், அமிருதமங்கலம் போன்ற இடங்களில் இத்தகைய புதை குழிகள் காணப்படும்" என எழுதியுள்ளார். இதில் "சாணூர்" என்பது சான்றார்கள் வசித்த பகுதி என அறியப்படுகின்றது.

சந்திரகுப்த மௌரியனின் படையெடுப்புக் காலத்தில் (கி.மு.322) சான்றார்கள் தென்னாட்டில் வந்து குடியேறியிருக்கலாம். அக்காலத்தில் தமிழ்நாட்டு மக்களிடையே நிலவிய பலவீனமான நிலையே சான்றார்குல மன்னர்களுக்கு அப்பகுதிகளைக் கைப்பற்ற வாய்ப்பளித்தது. இவர்கள் நாடார், கிராமணி, தளையர் என மக்களால் அழைக்கப்பட்டனர். பெரிய நிலப்பிரதேசத்தில் அதிகாரம் செலுத்தியோர் "நாடார்" எனவும், கிர மப் பகுதியை நிர்வகித்தோர் "கிராமணி" எனவும், சிறிய பிரிவுகளுக்குப் பொறுப்பானோர் "தளையர்" (தலைவர்) எனவும் வழங்கப் பட்டனர். யாழ்ப்பாணத்தில் சான்றார் "தளைய பகுதி" என்றே அழைக்கப்படுகின்றனர். (தமிழருள் மறைந்த அரசகுலம்)

சோழ அரசர்களுக்குள்ளும் "கிள்ளி வம்சம்" "சென்னி வம்சம்" என இரு வம்சத்தவர் வாழ்ந்தனர். இதில் சென்னி வம்சத்தினரே சான்றார்களாவர். பேராசிரியர் க. வித்தி யானந்தன் தனது "தமிழர் சால்பு" (பக். 29) எனும் நூலில் கூறும்போது "இளஞ்சேட் சென்னியின் ஆட்சிக் காலமே (கி.பி. 70) பெரிப்புளூஸ் எனும் வரலாற்றாசிரியர் வாழ்ந்த காலமாகும். இதனால்தான் இவர் "தெற்கே சான்றார் ஆட்சி மிக உச்ச நிலையை அடைந்தது" என்று குறிப்பிட்டுள்ளார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கி.பி. 2 ஆம் நூற்றாண்டில் கிரீஸ் நாட்டிலிருந்து கிளமென்ஸ் எனும் வரலாற்று ஆய்வாளர் தனது உலக சுற்றுப் பயணத்தின்போது, இந்தியாவிற்கு வந்திருந்தார். அவரது பிரபல்யமான "பெரிப்ளஸ் மாரிஸ் எரித்ரே" எனும் நூலில் சான்றார்கள் பற்றி பின்வருமாறு குறிப்பிடப்பட்டுள்ளது.

அ. மைசூருக்கு மேற்கே சான்றார்களின் ஆட்சி ஸ்திரமாகவுள்ளது.

ஆ. தென் கன்னடத்திலுள்ள "கலியாணபுரம்" எனும் துறைமுகம் சான்றார்களின் ஆட்சியில் செழிப் புற்று விளங்குகின்றது.

இ. கிரேக்கக் கப்பல்கள் ஏதாவது அத்துறைமுகத்திற்கு வந்தால் சான்றான்கள் அதையறிந்து பல கட்டுப் பாடுகளுடன் அக்கப்பலை "பருகாசா" எனும் இடத்திற்குத் திருப்பி விடுவர்.

இவ்வாறு அக்கிரேக்க தேச சஞ்சாரியின் நூலில் குறிப்பிடப்பட்டுள்ளது.

பெரியபுராணத்தில் ஏனாதிநாத நாயனாரை "சான்றார் குலத்தவர்" எனத் தெளிவாகக் கூறப்பட்டுள்ளது. அவர் தளபதியாக இருந்ததாகவும், போர்ப்பயிற்சியளிப்பவராக செயற்பட்டதாகவும் பெரியபுராணப் பாடல்கள் குறிப்பிடு கின்றன. "ஏனாதி" என்பது சான்றார்களுக்கு மட்டுமே உரிய பட்டமாகும். இது வட சொல்லாகிய "சேனாதி" (சேனாதிபதி) எனும் சொல்லில் இருந்து வந்ததாகும்.

பேராசிரியர் கா.சிவத்தம்பி தனது "பண்டைத் தமிழர் சமூகம்" (பக். 110) நூலில் குறிப்பிடும்போது, "மேன்மை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மிக்கோருக்கு பழந்தமிழ் அரசுகள் மூவகையான பட்டங்களாகிய ஏனாதி (படைத்தளபதி), காவிதி (உயரதிகாரி), எட்டி (வணிகர்) என்ற பட்டங்களை வழங்கின" எனக் குறிப்பிட்டுள்ளார். மதிப்புக்குரிய இவையனைத்தும் "மாராயம்" எனப்பட்டது. இதில் ஏனாதிகளாக சான்றாரும், காவிதிகளாக வேளாளரும், சான்றாரும் இருந்தமைக்கான சான்றுகள் உள்ளன. உதாரணமாக, ஏனாதிநாத நாயனார் சான்றார் குலத்தவராவார்.

கலித்தொகை 80 குறிப்பிடும் "ஏனாதிப்பாடியம்" படைத்தளபதிகளாகிய சான்றோர் குடியிருப்பாகும். இதே நூலில் பக். 96, 97இல் பின்வருமாறு குறிப்பிடப்பட்டுள்ளது,

புறநானூற்றில் புகழப்பட்ட புரவலர்களை பின்வருமாறு வரிசைப்படுத்தலாம்.

1. நிலைபெற்ற அரசுகளின் மன்னர்கள்
   - அ. சேரர், 18 அரசர்கள்
   - ஆ. சோழர், 13 அரசர்கள்
   - இ. பாண்டியர், 12 அரசர்கள்
2. குறுநில மன்னர்கள் 47 அரசர்கள்
   - அ. ஏனாதி, மூவேந்தர்களில் ஒருவருடைய (சோழர்) படைத்தளபதி (சான்றார்)
   - ஆ. புரவலர்கள், வேளீர் (வேளாளர்), ஆய்
   - இ. கிழான்கள், ஆம்பர் கிழான், அருவந்தை, நாலை கிழான், மல்லிக் கிழான்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தமிழர் சாதி வரலாற்றில் "ஏனாதி" எனும் பட்டம் சான்றார்களைத் தவிர ஏனைய எவருக்கும் வழங்கப் படவில்லை. எனவே பேராசிரியர் கா.சிவத்தம்பி அவர் களின் கருத்தின்படி பார்த்தால், குறுநில மன்னர்களாக சான்றார்கள் ஆட்சி செய்துள்ளனர் என்பதை தயக்கமின்றி ஒப்புக்கொள்ளலாம்.

பேராசிரியர் குஞ்ஞன் பிள்ளை அவர்களுடைய "பண்டைய கேரளம்" எனும் நூலில் (பக். 213) "பண்டைக் காலத்தில் தொழில் செய்தவர்களை யாவரும் மதித்து வந்தார்கள். உழவர், வலைஞர் முதலிய சொற்கள் வேளாண்மை செய்தவர்களையும், மீன் பிடித்தவர்களையும் குறிக்க மதிப்பாகப் பயன்படுத்தப்பட்டன. படைவீரர்களை தம்பியர் (சான்றார்) என்ற பொருள் தரும் "இளைஞர்" என்ற செல்லால் குறித்தார்கள். "சான்றாண்மை" எல்லாத் தொழில்களையும் விட உயர்வாகக் கருதப்பட்டது" எனக் கூறுகின்றார்.

மேலும் இந்நூலில் (பக். 198) அவர் தனது கருத்தைக் கூறும்போது "சேர மன்னர்கள் செறுமர்களாக இருக்கலாம்" என்பது கே.பி.பத்மநாப அவர்களின் கருத்தாகும். "அவர்கள் வில்லவராக (சான்றார்) இருக்கலாமென்று நான் கருதுகின்றேன். சேரமன்னர்களில் சத்திரியர்கள் காவிதிகளாயிருந்ததும், நாடார்களின் படைத் தளபதிகளே காவிதிகளாயிருந்ததும் வில்லோன், சான்றோன் முதலிய வழக்குகளும் என் கருத்தா தாரங்கள்" என்று குறிப்பிட்டுள்ளார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 5.மத்திய காலத்தில் சான்றாரின் நிலை
## (கி.பி. 5 - 15 ஆம் நூற்றாண்டு வரை)

தமிழர் வரலாற்றில் ஆரம்ப காலங்களிலிருந்து கி.பி 15ஆம் நூற்றாண்டு வரை சான்றார் குலத்தினர் படைக்கலப் பயிற்சியளித்தல், போர்த்தளபதிகளாக செயற்படல், அரசாட்சியில் முக்கிய பங்கு வகித்தல், அரசனுக்கு பிரதானியாகச் செயற்படல் போன்ற தங்கள் குலமரபுத் தொழில்களிலேயே ஈடுபட்டு வந்துள்ளனர் என்பதை மேற்கூறப்பட்ட சான்றுகளின் மூலம் அறியக்கூடியவாறு உள்ளது.

தமிழர்கள் அக்காலங்களில் சேரர், சோழர், பாண்டியர் என பிரிந்து நின்று செயற்பட்டமையால் தென்னாசியாவில் நீண்டகாலம் ஒரு பேரரசை உருவாக்க முடியவில்லை. இலங்கை உட்பட அண்டைய பிரதேசங்களின் அரசர்களும் தமிழ்நாட்டில் செல்வாக்குச் செலுத்தக்கூடிய நிலையே காணப்பட்டது. எடுத்துக்காட்டாக இலங்கை மன்னன் கஜபாகு (கி.பி 114 – 136) சேர மன்னன் செங்குட்டுவனின் உதவியுடன் சோழ தேசத்தை ஆக்கிரமித்து, தனது 12000 கைதிகளை மீட்டு, சோழக் கைதிகள் 12000 பேரைக் கூட்டிவந்ததைக் குறிப்பிடலாம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆனால் 9ஆம், 10ஆம் நூற்றாண்டுகளில் தமிழ் நாட்டில் அந்நிலை மாற்றியமைக்கப்பட்டது. சோழப் பேரரசு உருவாக்கப்பட்டது. சோழ மன்னர்கள் தமிழர்களை ஒன்று சேர்த்து, ஒற்றுமைப்படுத்தியே இப்பேரரசை நிறுவினர். சோழ சாம்ராச்சியத்துள் தமிழ் மக்களின் அனைத்துப் பிரிவினரும் படையில் சேர்க்கப்பட்டு பெரும்படை உருவாக்கப்பட்டது. சோழப் படைகளில் வலங்கைப் பிரிவினரும், இடங்கைப் பிரிவினரும் இருந்தனர். இதில் சான்றார், வேளாளர்களைக் கொண்ட வலங்கைப் பிரிவினரே பிரதான இடத்தை வகித்தனர். ஏனெனில் இவர்களே நிரந்தரமான, முறையான, பாரம்பரியமான படைக் கட்டமைப்பைக் கொண்டிருந்தனர். இடங்கைப் பிரிவினர் சந்தர்ப்பத்திற்கும், தேவைக்குமேற்ப சேர்த்துக் கொள்ளப்பட்டனர். நெய்தல் நில மக்களும், பாலை நில மக்களும் முறையே சோழர்களின் கடற்படை பலத்திற்காகவும், வீரத்திற்காகவும் இடங்கைப் பிரிவினராக சேர்த்துக் கொள்ளப்பட்டனர்.

J.V. வீலர் எனும் மேல்நாட்டு அறிஞர் தமது "இந்துதேச வரலாறு" எனும் நூலில் "சோழப் பேரரசு காலத்தில் சோழர்கள் சான்றார் படைப்பிரிவுகளினூடாக, வெளிநாடுகளிலும் செல்வாக்குச் செலுத்தினர். இலங்கையில் பொலநறுவையில் படைத்தளபதிகளாக இருந்தனர். பர்மாவில் "சாணா அரசு" (Shan States) என்ற பகுதி தற்போதும் உள்ளது. பர்மாவின் கடைசி அரசனான சாணா குலத்தவனாகிய "தீப்பா" என்பவன் தம் குலம் சத்திரிய குலம் என அறிவித்துள்ளான்." என எழுதியுள்ளார்.

தமிழர் போர்முறைகளில் இருவகைப் போர்முறைகள் இருந்துள்ளன. அவை: 1. அறப்போர் முறை, 2. மறப்போர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முறை என்பனவாகும். இதில் அறப்போர் முறைக்கு உரித்தானவர்கள் சான்றார்களாவர். புறமுதுகிட்டு ஓடுபவர்கள், முதியோர், பெண்டிர், குழந்தைகள், பொது மக்கள், நிராயுதபாணிகள் ஆகியோரைத் தாக்காமல் இருப்பது அறப்போர் மரபுகள் ஆகும். அறப்போர் முறையில் ஆயுதங்கள் இன்றி செய்யப்படும் போர் முறைகள் "அங்கைப் போர்" மற்றும் "மற்போர்" என இருவகைப்படும்.

வெறுங்கையினால் படுவர்மம் 12, தொடுவர்மம் 96, ஆக மொத்தம் 108 மனித வர்ம ஸ்தானங்களை (நரம்பு மையங்கள்) தாக்கி எதிரிகளை வீழ்த்துவதே அங்கைப் போர் முறையாகும். இதனை "அங்க வெட்டு" அல்லது "அங்கை வெட்டு" என வழங்குவர். 13 ஆம் நூற்றாண்டின் பிற்பகுதியில் இயற்றப்பட்ட வேம்பத்தூர் திருவிளையாடற் புராணத்தில் இவ் அங்கை வெட்டு குறிப்பிடப்பட்டுள்ளது. தமிழ்க் கல்வெட்டுகளில் இடம் பெறும் அங்கக்களரி, அங்கைக்காரர் போன்றன சான்றார்களையே குறிக்கின்றன. (வலங்கை மாலையும், சான்றோர் சமூகச் செப்பேடுகளும், பக். 148.)

"மறப்போர்" முறையில் ஈடுபடுத்தப்பட்டவர்கள் இடங்கைப் பிரிவைச் சேர்ந்த பாலை நிலத்தவர்களான "மறவர்கள்" ஆவர். பாலைநிலத்துக் கள்வர், எயினர், முதலிய குடியினரே மறவர்களாக பரிணமித்தனர் என சில அறிஞர்கள் கருதுகின்றனர். இம்மறவர்கள் வெட்சிப்போர் (ஆநிரை / பசுநிரை கவர்தல்), வஞ்சிப் போர் (தீயிட்டுக் கொளுத்துதல்), பெண்டிரைச் சிறைப்பிடித்தல் போன்ற போர் முறைகளில் அரசர்களால் பயன்படுத்தப்பட்டனர். மறவர்கள் வஞ்சிப் போர் முறையிலேயே தொடர்ந்து ஈடுபடுத்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தப்பட்டனர் என்பதற்கு கி.பி.13ஆம் நூற்றாண்டைச் சேர்ந்த பொன்னமராவதிக் கல்வெட்டில் சான்றுகள் உள்ளன.

கி.பி. 9–13ஆம் நூற்றாண்டு வரை கங்கைக்கரை வரையிலும், இலங்கையிலும், தென்கிழக்காசிய நாடுகளிலும் தமது புலிக்கொடியை பறக்கவிட்ட சோழப் பெருமன்னர்களின் வெற்றிகளுக்குக் காரணமாயமைந்த படைகளின் பிரிவுகள், அவற்றின் தன்மைகள் போன்றவற்றைப் பற்றிய ஆழமான ஆய்வுகள் இதுவரையிலும் மேற்கொள்ளப்படவில்லை.

பல்வேறுபட்ட சமூகப்பிரிவினர் சோழ மன்னர்களின் படைகளில் இடம்பெற்றிருந்தனர் என்பது மட்டும் அறிஞர்கள் அறிந்த உண்மையாகும். கைக்கோளப்படை, வில்லிகள் படை, வலங்கைப் பெரும்படை (சான்றார்), இடங்கைப் பெரும்படை (மறவர்), வேளைக்காரப் படைகள் போன்ற படைப்பிரிவுகள் கல்வெட்டுகளில் குறிப்பிடப் பட்டுள்ளன.

மிகப் பழங்கால (சங்ககால) மரபாகிய (கி.பி.5ஆம் நூற்றாண்டுக்கு முன்) சதுரங்க சேனை எனப்படும் நாற்படைப் பிரிவுகளான தேர், யானை, குதிரை, காலாட்படை களுள் தேர்ப்படையின் பயன்பாடு சங்க காலத்திலேயே முடிவடைந்து விட்டதாகத் தெரிகின்றது. அதற்குப் பின்னர் தேர்ப்படையின் இடத்தை கப்பற்படை நிரப்பிற்று. உண்மையில் பொதுவாக உலக வரலாறுகளின்படியும் கி.பி 9ஆம், 10ஆம் நூற்றாண்டுகளிலிருந்து ஐரோப்பாவிலும், ஏனைய வர்த்தக மையங்களிலும் கடற்போக்குவரத்தே பிரதானமாகியது. இதன்பின்தான் நாடுகாண் பயணங்கள் இடம்பெறத் தொடங்கின.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இந்த வகையில் மத்திய காலத்தில் சோழர் படைகளிலும் கப்பற்படை பிரதான இடத்தைப் பெற்றது. மத்திய காலச் சோழர்களின் கடற்படையானது கரையார், கரையாழ்வார், கரைதுறையார் எனப்பட்ட முக்குவர் சமூகத்தவரைக் கொண்டிருந்திருக்க வேண்டும். (வலங்கை மாலையும், சான்றோர் சமூகச் செப்பேடுகளும், பக். 17, 18.)

பல கல்வெட்டுக் குறிப்புகளை ஆய்வாளர்கள் ஆய்வு செய்யும்போது, சோழர் படையமைப்புகளுள் பல தகுதித் தேர்வு போன்ற பல்வேறு தேர்வு முறைகளைப் பின்பற்றி போட்டிகள் மூலம் தெரிவுசெய்யப்பட்ட படைகளாக அவை இருந்தன எனத் தெரியவந்துள்ளது. "தெரிஞ்ச வில்லிகள், தெரிஞ்ச கைக்கோளர், தெரிஞ்ச வலங்கை வேளைக்காரர்" எனும் பெயர்களால் அவை அழைக்கப்பட்டன. இத்தகைய தேர்வினை நடத்துகின்ற தகுதியுள்ள படைப்பிரிவு பரம்பரையாக வருகின்ற மூலப்படையாகவும், வலங்கை பழம்படையாகவும் இருந்திருக்க வேண்டும். இத்தகைய படை கி.பி 12–13ஆம் நூற்றாண்டுகளில் "பரிக்ரகம்" என்றும் அழைக்கப்பட்டதாகத் தெரியவந்துள்ளது. ("வலங்கைப் பழம்படைகளிலார்" கி.பி. 1014, தஞ்சைப் பெருங்கோயில் கல்வெட்டு, S.I.I. Vol. 11, No.35.)

வலங்கை – இடங்கை எனும் சாதிகளின் பிரிவுகள் சோழர்களாலேயே அறிமுகப்படுத்தப்பட்டன. சோழர்களின் காலத்தைச் சேர்ந்த திருக்குறள் உரையாசிரியர்கள் (பரிமேலழகர், பரிதியார்) திருக்குறள் பொருட்பாலின், கல்வி அதிகாரத்தின் முன்னுரையில், ஆட்சியாளர்கள் கற்க வேண்டிய "தொண்ணூற்றெட்டுவகை ஆயுதக்கல்வி"

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்பதும் அடங்கும் எனக் குறிப்பிட்டுள்ளனர். தமிழ் சமூகத்தின் பல்வேறு பிரிவினர்களுக்கும், அரச நிர்வாகத்தில் தமக்கும் உரிய இடம் வழங்கப்பட்டிருக்கிறது என்ற உணர்வை ஏற்படுத்தவும், சோழப்பெருமன்னர்களின் வெற்றியிலும், வியாபகத்திலும் இப்பல்வேறு தரப்பு மக்களுக்கும் பங்குண்டு என்ற உணர்வை ஏற்படுத்தவும் இத்தகைய வலங்கை 98, இடங்கை 98 என்ற பிரிவுகள் ஒரு காலகட்டம் வரை உதவிக்கரமாகவே இருந்துள்ளன. அதுவே பின்னர் சோழர்களின் வீழ்ச்சிக்கும் காரணமாகி விடுகின்றது. (வலங்கை மாலையும், சான்றோர் சமூகச் செப்பேடுகளும், பக். 17,18,19.)

இராஜராஜசோழ மன்னர் காலத்தில் அமைக்கப்பட்ட படைப்பிரிவுகளுள் வலங்கைப் பெரும்படை மிகச் சிறந்த போர்ப்பயிற்சி பெற்ற படையாகும். மரபுவழியில் அமைந்த சான்றோர் குல ஆசான்கள் இப்படைப் பிரிவுக்கு போர்ப் பயிற்சிகள் அளித்தனர். "களரி" மற்றும் "வர்மக்கலை" எனப்படும் உடலின் நுட்பமான நரம்பு மையங்களை வெறுங் கையால் தாக்கும் போர்முறை ஆகியவற்றை இணைத்து "அங்கைப் போர்முறை" என்ற ஒன்று உருவாக்கப்பட்டது. "முந்நூற்றுவர்" எனப்பட்ட சான்றார் பிரிவினர் இக் கலையில் தேர்ச்சி பெற்றிருந்தனர் என "கேரள தேச வரலாறு" எனும் நூல் குறிப்பிடுகின்றது.

போர்ப்பயிற்சி முறைகளில் ஆயுதமின்றி வெறுங்கை மற்றும் கால்களால் வெட்டியும், அடித்தும் போரிடும் "சைலாத்து" என்ற அங்கைப் போர்முறைகளிலும், சிரம்பம் (சிலம்பம்) எனப்படும் கம்பு விளையாட்டிலும், வாட்போர் முறைகளிலும், பல்வேறு மிருகங்கங்கள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மற்றும் உயிரினங்களின் இயக்கப் பாணிகளைப் புகுத்தி, பல வகையான போர்முறைகள் சான்றார் குலத்தவரால் நடைமுறைப்படுத்தப்பட்டன. இது வலங்கை மாலையில் "கௌதாரிப் பாணி" என குறிப்பிடப்பட்டுள்ளது. (வலங்கை மாலையும், சான்றோர் சமூகச் செப்பேடுகளும் பக். 61.)

இந்தியாவில் திருவாரூர் மாவட்டம் திருக்கண்ணபுரம் சௌரிராஜப் பெருமாள் கோவிலிலுள்ள கி.பி. 10ஆம் நூற்றாண்டுக் கல்வெட்டில் "இவ்வூர் ஈழச் சான்றான் முந்நூற்றுவப் பெருமானாகிய சோழவேள் ஏனாதி" எனக் குறிப்பிடப்பட்டுள்ளது. (வலங்கை மாலையும், சான்றோர் சமூகச் செப்பேடுகளும், பக். 31.)

முதலாம் குலோத்துங்கன் சான்றாரை தனது முதன்மைப் படைத் தளபதிகளாக நியமித்தான். ஏனெனில் வலங்கை மாலையில் வலங்கை உய்ய'க்கொண்டார் பிரிவினர் இக்காலத்தில் "பூவேந்திய சோழன்" எனும் ராஜ பட்டமும், "சான்றாண்மை" எனும் தகுதியும் பெற்றுவிட்டனர் எனக் குறிப்பிடப்பட்டுள்ளது.

வலங்கை உய்யக்கொண்ட சான்றார்களுக்கு "செட்டி தோளேறும் பெருமாள்" எனும் சிறப்புப் பட்டம் உள்ளது. வலங்கை மாலை வரி 2065 – 2160 இன்படி சோழ அரசன் ஒருவன் வணிகர் (கம்மாளர்) குலப் பெண் ஒருத்தியை அக் குலத்தவரின் விருப்பத்திற்கு மாறாக மணம்புரிய முயன்ற போது, வலங்கை உய்யக்கொண்டார்கள் அதனைத் தடுத்துப் போரிட்டு வணிகர்களின் மானத்தைக் காத்தனர். இதற்கு நன்றி செலுத்தும் விதமாக வணிகர் இவர்களை தம் தோளில் சுமந்து சிறப்பித்தமையினாலேயே "செட்டி தோளேறும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பெருமாள்" என்ற பெயர் சான்றாருக்கு ஏற்பட்டது. (வலங்கை மாலையும், சான்றோர் சமூகச் செப்பேடுகளும், பக். 47.)

சோழர் காலத்தில் எழுந்த பெரியபுராணத்தை நாம் ஒரு சமய நூலாக மட்டும் பார்க்க முடியாது. அது எல்லாத் தமிழர்களையும் ஒன்றுபடுத்திய நூலுமாகும். இதில் எல்லாச் சாதிகளையும் சேர்ந்தவர்களையும் 63 நாயன்மார்களாக்கி ஒற்றுமைப்படுத்தியவர் வேளாள வகுப்பைச் சேர்ந்த சேக்கிழார் ஆவார். அதில் அவர் சான்றாருக்கு ஏனாதிநாத நாயனார் ஊடாக "இவர்களின் குலத்தொழில் சேனைகளுக்கு தலைமை தாங்குதல், போர் மற்றும் போர்ப் பயிற்சியளித்தல்" என்ற விடயத்தைக் கூறியுள்ளார். பெரியபுராணத்தில் வெளிப்படையாகவே சான்றார்களின் குலத்தொழில் "போர்த் தொழில்" என கூறப்பட்டுள்ளது. எடுத்துக்காட்டாக:

"வாழக் குடி தழைத்து மன்னியவப் பொற்பதியில்
ஈழக் குலச் சான்றார் ஏனாதி நாதனால்"

எனவும்,

"மன்னர்க்கு வென்றி வடிவாட் படை பயிற்றும்
தன்மைத் தொழில் விஞ்ஞையில் தலைமை சார்ந்துள்ளார்"

எனவும்,

"தள்ளாத தங்கள் தொழிலுரிமைத் தாயத்தில்
உள்ளான் அதிசூரன் என்பான் உளனானான்"

இதன்படி சான்றார் குலத்தவராகிய ஏனாதிநாத நாயனார் சிவபக்தி மார்க்கத்தில் நின்றாலும், விட்டுவிட முடியாத

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வாள்வித்தை கற்றுக்கொடுத்தலாகிய தங்கள் குலத்தொழிலின் உரிமைக்குரிய தாயாதிகள் மரபில் பிறந்தவனாகிய அதிசூரன் எனும் பெயருடைய ஒருவன் இருந்தான் என்பது இதன் பொருளாகும். (அதிசூரனும் சான்றார் மரபினன் என்பது குறிப்பிடத்தக்கது.)

கி.பி.11ஆம் நூற்றாண்டு வரையிலும் சோழ, பாண்டிய அரசுகள் முற்றிலும் வேளாளர்களைச் சார்ந்தோ அல்லது வேளாளர் குலத்தவருடன் மணவுறவு கொண்டோ ஆட்சியை நடத்தவில்லை. மாறாக நாடாள்வார்கள், காவிதிகள் போன்ற பட்டங்களைப் பெற்றிருந்த சத்திரிய, வைசிய குலத்தவரான அரசியல் தலைவர்களைச் சார்ந்தே ஆட்சியை நடத்தினர். ஏனெனில் ஆரம்பத்தில் வேளாளர் என்பது பயிர்த்தொழிலையே குலத்தொழிலாகக் கொண்ட சாதாரண வகுப்பாகவே காணப்பட்டது. தமிழ்நாட்டில் களப்பிரர் ஆட்சியின் (கி.பி. 4) பின்னர்தான் இவர்கள் தலையெடுக்கத் தொடங்கினர். இவர்களின் சமய ஆசாரங் களும், சைவ சித்தாந்தமும் மேலோங்கின. எடுத்துக்காட்டாக வேளாளர்களான திருஞான சம்பந்தர் சைவ சமயத்தையும், மெய்கண்டார் சைவ சித்தாந்தத்தையும் எழுச்சி பெறச் செய்தமையைக் குறிப்பிடலாம்.

எனினும், அரசியல் ரீதியாக இவர்கள் கி.பி 11ஆம் நூற்றாண்டின் இறுதிப் பகுதியில் கருணாகரத் தொண்டை மான், சேக்கிழார் போன்ற வேளாளர் குல அதிகாரிகளும், அமைச்சர்களும் சோழ அரசியலில் ஆதிக்கம் செலுத்தத் தொடங்கிய பின்னரே இவர்கள் அரசியலில் பிரதான இடத்தைப் பெறத் தொடங்கினர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வரலாற்று ஆய்வாளர் திரு.S.காசிச்செட்டி அவர்களின் கருத்துப்படி "வேளாளர், சான்றார் மற்றும் அவர்களுடைய குடிமக்களும் "வலங்கையர்" எனவும், மறவர், வன்னியர், பள்ளர் "இடங்கையர்" எனவும் அழைக்கப்பட்டனர்" எனக் குறிப்பிடுகின்றார்.

"நாயக்கர் காலத்தில் வலங்கை – இடங்கை சண்டைகள் நடைபெற்றன. சான்றார்கள் வலங்கைப் பிரிவைச் சேர்ந்தவர்கள். மறவர்கள் இடங்கைப் பிரிவைச் சேர்ந்தவர்கள்" என பேராசிரியர் K.K.பிள்ளை அவர்கள் தனது "தென்னிந்திய வரலாறு" நூலில் எழுதியுள்ளார்.

தமிழறிஞரான ஞா.தேவநேயப் பாவாணர் உரோமானிய நாகரிகத்தில் Knight என வழங்கப்பட்ட உயர்வர்க்கப் போர் வீரர்களுக்குச் சமனாக தமிழக வீரர்கள் "சான்றோர்" என அழைக்கப்பட்டதாகக் கூறுகின்றார்.

சான்றாராகிய "வலங்கை உய்யக்கொண்ட பிரிவினர்" சோழர் ஆட்சியின் இதயத் துடிப்பினையே இயக்கிவந்தது உண்மையாக இருப்பின், அவர்களுடைய ஆதிக்கம் சோழ மண்டலத்தில் குறைந்த பின்னர் சோழர் ஆட்சியின் இதயத் துடிப்பு சிறுகச் சிறுக தொய்ந்துபோய் காலப்போக்கில் நின்றிருக்க வேண்டும் என கல்வெட்டு ஆய்வாளரும், தொல்லியல் முதுகலைமாணி பட்டதாரியுமாகிய திரு S.இராமச்சந்திரன் அவர்கள் கூறுகின்றார்.

D.V.சதாசிவ பண்டாரத்தார் அவர்கள் எழுதிய "பிற்கால சோழர் சரித்திரம்" (பகுதி III பக். 17) நூலில் "தமக்குச் சேவை செய்த அதிகாரிகளுக்கும், படைத் தலைவர்களுக்கும் சோழப் பேரரசர்கள் விருதுகளும், பட்டங்களும் வழங்கி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஊக்குவித்தனர். மாராயன், பேரரையன், மூவேந்த வேளான், காடவராயன், நாடாள்வான் (சான்றோர்), விழுப்பரையன், சேதிராயன், சோழர்கோன் முதலியன அவற்றுள் சிலவாகும்" எனக் கூறப்பட்டுள்ளது. இதில் வரும் அனைவரும் (வேளாளர், சான்றார்) வலங்கையராவர்.

சான்றார்களின் வரலாற்றைக் கூறும் முக்கிய இலக்கிய ஆதாரம் "வலங்கை மாலை" எனும் நூலாகும். இதில் சான்றார்கள் வலங்கைப் பிரிவினர் என்றே கூறப் பட்டுள்ளது. இந்நூல் வில்லுப்பாட்டு வடிவிலுள்ளது. சான்றார் (நாடார்) சமூகத்தவரின் ஒரு பிரிவான "வலங்கை உய்யக்கொண்டார்கள்" பிரிவின் தோற்றம் குறித்த விடயங்கள் மற்றும் சோழர் ஆட்சிக் காலத்தில் (கி.பி 1018 – 1100) கலந்துகொண்ட போர்கள் போன்ற வரலாற்று நிகழ்வுகளையும், இவர்களுடைய வீழ்ச்சி மற்றும் மீளெழுச்சி போன்றவற்றையும் இந்நூல் விவரித்துக் கூறுகின்றது. இந்த வில்லுப்பாட்டு இயற்றப்பட்டது கி.பி 1600–1605க்கு இடைப்பட்ட காலப்பகுதியாக இருக்கலாம் என உலகத் தமிழாராய்ச்சி நிறுவனத்தின் ஆய்வாளர் திரு.S.இராமச்சந்திரன் அவர்கள் தனது "வலங்கை மாலையும் சான்றோர் சமூகச் செப்பேடுகளும்" எனும் நூலின் முன்னுரையில் கூறுகின்றார்.

இந்தியாவில் பிரபலமான "வலங்கை மாலை" எனும் வில்லுப்பாட்டை இயற்றியவர் ஸ்ரீ ராசராச சுந்தரம் (1560–1625) எனக் கூறப்படுகின்றது. இது முதன்முதலில் கி.பி.1904 – இல் "பூவனூர் சாமிநாடார்" என்பவரால் அச்சில் பதிப்பிக்கப்பட்டது. வரலாற்றுச் செய்திகளை அறிவதற்கு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இவை போன்ற இந்திய நூல்களுள் இவ்வில்லுப்பாட்டு நூலுடன் ஒப்பிடத்தக்க ஓர் இலக்கியம் இருப்பதாகத் தெரியவில்லை எனவும் இந்நூல் ஒரு "நிகழ்த்து கலை" (Performing art) எனவும் திரு S.இராமச்சந்திரன் குறிப்பிடுகின்றார்.

சித்தூர் ஜில்லாத் தீர்ப்பின்படி "காஞ்சியை ஆண்ட பண்பவிச் சோழன் தன்னைச் சார்ந்தவர்களை வலங்கைச் சாதி என்று அழைத்தான்" என கூறப்பட்டுள்ளது. திரு.மு.மு பிள்ளை அவர்களின் "தென்னிந்திய வரலாறு–II" எனும் நூலில் "நாயக்கர் காலத்தில் தமிழ்நாட்டில் வலங்கை இடங்கை சண்டைகள் இடம்பெற்றன" குறிப்பிடப்பட்டுள்ளது. நாயக்கர் காலத்தில் வீழ்த்தப்பட்ட சான்றார்களே தாங்கள் வலங்கைச் சாதி எனப் போராடியுள்ளனர்.

பேராசிரியர் K.A.நீலகண்ட சாஸ்திரி அவர்கள் தனது "சோழர்" எனும் நூலில் குறிப்பிடும்போது "பாண்டிய நாட்டை ஆண்ட சோழ வம்சத்தினர் தங்களுக்கு பாண்டியன் என பட்டம் சூட்டிக் கொண்டனர். எடுத்துக்காட்டாக கி.பி 1040 – இல் ஆட்சிபுரிந்த சுந்தர சோழபாண்டியனைக் குறிப்பிடலாம்" என எழுதியுள்ளார்.

இலங்கை வரலாற்றைக் கூறும் "சூளவம்சம்" எனும் நூலில் கி.பி 1169 இல் பராக்கிரம பாண்டிய மன்னனின் (பாண்டிய வம்சம்) ஆட்சியின்போது, குலசேகர பாண்டியன் (சோழ வம்சம்) படையெடுத்து ஆட்சியைக் கைப்பற்றிய வேளை பராக்கிரம பாண்டியன் இலங்கை மன்னன் மகா பராக்கிரமபாகுவிடம் உதவி கோரவே, "லங்காபுர" எனும் தளபதியின் கீழ் ஒரு படையை பராக்கிரமபாகு அனுப்பி வைத்தான். அவர்கள் குலசேகர பாண்டியனைத்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தோற்கடித்தனர். இதில் பின்வரும் குறுநில மன்னர்கள் குலசேகரன் பக்கத்தில் நின்று போராடினர் எனக் குறிப்பிடப்பட்டுள்ளது. அவர்கள் அனைவரும் நாடார் எனும் பட்டப் பெயரைத் தாங்கிய சான்றார் குலத்தவராவர். அவர்கள் விவரம் பின்வருமாறு,

1. புங்குண்ட நாடார்
2. அளத்தூர் நாடார்
3. குலவண்டைய நாடார்
4. அஞ்சு கோட்டை நாடார்
5. ஆதாளையூர் நாடார்
6. பாண்டி மண்டல நாடார்
7. கொங்க மங்கள நாடார்
8. அகலந்த நாடார்
9. கீழ் மங்கள நாடார்

சான்றார்கள் சூரிய குலத்தைச் சேர்ந்தோராவர். இதனால்தான் இப்போரில் இவர்கள் பாண்டியரை எதிர்த்து சூரிய குலத்தைச் சேர்ந்த சோழ மன்னன் குலசேகரன் பக்கம் நின்று போராடினார்கள். நாட்டுக்கரசன் "நாடான்" எனப்படுவான். நாடான் என்பது தென் தேசத்து சான்றார் குலத்தவர்களுக்கு வழக்கமான பட்டப் பெயராகும்" என "சனக்கணித" (பக். 297) நூலில் குறிப்பிடப்பட்டுள்ளது.

தமிழ்நாட்டில் நாயக்கர் காலத்திற்கு முன்னர் எல்லா சிவ, விஷ்ணு ஆலயங்களிலும் ஒவ்வொரு கோவிலிலும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நான்கு திசைகளுக்கும் 4 கோபுர வாசல்கள் இருந்தன. எந்தத் திசையால் எக்குலத்தவர் வந்து சுவாமி தரிசனம் செய்ய வேண்டும் என சாஸ்திரம் இருந்தது.

எடுத்துக்காட்டாக:

"அந்தணர் தென்திசை, அரசர் மேற்றிசை
வந்திடும் வணிகர்நல் வடக்க தாகுமே"

(விஸ்வ கர்மா சிற்ப சாஸ்திரம்)

நாயக்கர் ஆட்சி ஏற்படுவதற்கு முன் அரசர்களுக்குரிய வழியாகிய மேற்குக் கோபுரவாசல் வழியாகவே சான்றார்கள் சென்று சுவாமி தரிசனம் செய்துவந்தார்கள் என்பதற்கு ஆதாரங்கள் உள்ளன. சான்றார்களுடன் ஏற்பட்ட அரசியல் முரண்பாடுகள் காரணமாக 16ஆம் நூற்றாண்டளவில் நாயக்க மன்னர்கள் எல்லா மேற்குக் கோபுர வாசல்களையும் அடைத்தனர். சில நூற்றாண்டுகள் வரை இவ்வாசல்கள் அடைபட்டே கிடந்தன. மகாத்மா காந்தியும் கூட தமிழ் நாட்டுக்கு வந்தபோது இதனைக் கண்டித்துள்ளார்.

(சான்றோர் மரபு, பக்.47, கி.பி. 1871.)

பல அறிஞர்களின் கூற்றுகளும், கல்வெட்டு ஆதாரங் களும் சான்றார்கள் அரசாண்ட வம்சத்தினர் என உரைக் கின்றன. அவையாவன:

பேராசிரியர் P.சுந்தரம்பிள்ளை அவர்கள் குறிப்பிடும் போது, "சான்றார்கள் தங்களை சத்திரியர்கள் என்று கூறுகின்றார்கள். இதன்படி இவர்கள் மிகவும் மதிப்பான அந்தஸ்துடையவர்களாக இருந்திருக்கலாம்" எனக் கூறுகின்றார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"V.P.சுப்பிரமணிய முதலியார்" (1907) குறிப்பிடும் போது, "சான்றோர் குலத்தவர்கள் பல சிறந்த நல்லொழுக்கங்களையுடையவர்கள். ஆச்சரியப்படத் தக்கவாறு விடாமுயற்சியுடையவர்கள்" என்கிறார்.

"திரு.L.K.அனந்தகிருஷ்ண ஐயர்" (1891) குறிப்பிடும் போது, "மெய்யாகவே சான்றார்கள் ஒரு காலத்தில் யுத்த வம்சத்தவர்களாக இருந்தார்கள்" எனக் கூறியுள்ளார்.

றோபட் சீவல் என்பவருடைய ஒரு கல்வெட்டு ஆய்வு (கல்வெட்டு இல: EC viii-47) "சான்றார் மன்னனாகிய இரண்டாம் வீரன் மேல் கன்னடத்திலிருந்த தனது அரசை சாளுக்கியரிடமிருந்து காப்பாற்றினான்" எனக் கூறுகின்றது.

"திருவாங்கூர் வர்த்தமானி" அறிவித்தலில் "தமிழ் நூல்களில் காணப்படும் சில துணிதலான குறிப்புகளிலிருந்து நாம் சான்றார்களை யுத்த வம்சத்தைச் சேர்ந்தவர்கள் என முடிபு செய்கின்றோம்" எனக் குறிப்பிடப்பட்டுள்ளது.

1891 இல் எழுதப்பட்ட "இந்திய சனத்தொகையின் விவரம்", தொகுதி 13, பக்.207 இல் "நாடான் நாட்டை அல்லது மாவட்டத்தை ஆட்சி செய்பவனாவான். அது தென் பகுதியில் வாழும் சான்றார்களின் பட்டமாகும்" எனக் குறிப்பிடப்பட்டுள்ளது.

W.R.கோர்னிஷ் அவர்களால் 1871 இல் எழுதி வெளியிடப் பட்ட இந்திய குடிசன மதிப்பு, முதலாம் தொகுதி, பக். 118, 163 இல் "நாடார்கள் பூமியை ஆண்ட புராதன அரச சந்ததியார் மட்டுமல்ல, அவர்கள் ஆரிய சத்திரிய வம்சத்தில் உதித்தவர்களுமாவர்" என எழுதப்பட்டுள்ளது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"திருநெல்வேலி மானுவலில்" (பக். 14) "A.J.ஸ்டுவாட் அவர்கள் "நாடார்கள் பெரும்பாலும் சத்திரியர்களாக இருக்கலாமென்ற சந்தேகமுண்டு. அவர்கள் தங்களுக்கு வைக்கும் பட்டங்கள், சமுதாயத்தில் உயர்வானவாகையால், மற்றைய சாதியினர் பொறாமையால் அதை ஏற்க மறுக்கின்றனர்" எனக் குறிப்பிட்டுள்ளார்.

கி.பி.1870 இல் "திருநெல்வேலிப் பட்டணம்" பற்றி நூல் எழுதிய அரசாங்க சபையின் தலைவர் தார்ன்புள் (T.Turnbull) அவர்கள் "திருநெல்வேலிப் பகுதியில் சான்றார் பெரும்பான்மையினராகக் காணப்படுகின்றனர். அவர்கள் "நாடார்கள்" என அழைக்கப்பட்டனர். அவர்கள் வியாபாரம் செய்துவந்தனர். அவர்களுக்கும் தென்னை, பனை மரங்கள் ஏறுபவர்களுக்கும் எதுவித தொடர்பும் இல்லை. "பாண்டிய தேசம் இங்கிலாந்தின் "கவுண்டிகள்" போல் பிரிக்கப்பட்டிருந்தது. இங்கிலாந்தில் அரசகுலப் பிரபுக்கள் கவுண்டிகளுக்குத் தலைவர்களாயிருப்பது போல பாண்டிய தேசத்தில் உள்நாடு களுக்கு "பாண்டியகுலச் சான்றார்" தலைவர்களாயிருந்தனர். அவற்றின் ஆதி உரிமைக்காரர்களாகிய சான்றார்களுக்கு நாடன், நாடான், நாடாவி, நாடாள்வான் எனப்பட்ட பட்டங்கள் வழங்கப் பட்டன" என எழுதியுள்ளார்.

"கோரக கல்வெட்டு" ஒன்றில் வீரபாண்டியன் பூபால பாண்டியன் (கி.பி.1432இல்) "தான் சான்றார் வம்சத்தவனான ஜினதத்தனின் இனத்தவன்" எனக் கூறியதாக எழுதப்பட்டுள்ளது.

கி.மு.ம.மரிய அந்தோனி நாடார் தனது "சான்றோர் வரலாறு" (பக். 63) எனும் நூலில் "பிரித்தானியர் ஆட்சிக் காலத்தில் அரசாங்கப் பதிவெடுகளில் நாடார்கள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தங்களை சட்ட அங்கிகாரத்துடன் "சான்றோர் சத்திரியர்" என பதிவு செய்து வந்துள்ளனர். இதை எக்குலத்தவரும் எதிர்க்கவில்லை" என எழுதியுள்ளார்.

கி.பி 15ஆம் நூற்றாண்டில் "நாடாள்வான்" என்பது சான்றார் குலத்தவர்களுக்கு மட்டுமேயுரிய சாதிப் பட்டமாக பயன்படுத்தப்பட்டுள்ளது. கி.பி 17ஆம் நூற்றாண்டு ஆவணங்களில் இச் சாதிப்பட்டம் "நாடாவான்", "நாடான்" என்ற வடிவங்களில் பயன்படுத்தப்படுகின்றது.

"நாடார்" அல்லது "நாடாள்வார்" என்பது சாதிப் பட்டமே தவிர சாதியின் பெயர் அல்ல. "சான்றோர்" அல்லது "சான்றார்" என்பதே இந்தச் சாதியின் பெயராகும். சான்றார் குலத்தின் ஒரு பிரிவினர் கி.பி 13ஆம் நூற்றாண்டுக்குப் பின்னர் தங்களை "நாடார்" என அழைக்கத் தொடங்கினர். கி.பி. 19இன் பின் பெருமளவான சான்றார்கள் இச்சொல்லைப் பயன்படுத்தத் தொடங்கினர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 6. சான்றார் குலத்தவரின் வீழ்ச்சி - நவீன காலம்
## (கி.பி. 15-ஆம் நூற்றாண்டின் பின்)

தென்னிந்தியாவில் சூரியகுல பாண்டியர்கள் தம் பெயருக்குப் பின்னால் நாடான், நாடன் என்ற பட்டங்களைப் பாவித்தனர். கி.பி 1310இல் பாண்டிய நாடு வீழ்ச்சியடைந்து, விஜயநகரப் பேரரசு எழுச்சியடையத் தொடங்கியதும் பாண்டியநாடு அதன் ஒரு பகுதியாயிற்று. (தமிழருள் மறைந்த அரச குலம் - கொடித்தூர் இராசரெட்ணம்.)

கி.பி 13ஆம், 14ஆம் நூற்றாண்டுகளில் தமிழ்நாட்டில் இஸ்லாமியப் படையெடுப்புகள் நடைபெற்றன. சூரிய குல பாண்டியர்கள் வீழ்ச்சியடைகின்றனர். கோவில்கள் இடித்தழிக்கப்பட்டன. (மதுரைத் தல வரலாறு.)

கி.பி 1324-1372 ஆண்டுகள் வரை மட்டும் அலாவுதீன், உடயூஜி, குதுபுதீன், கியாதுடீன், நாகரடீன், அடில்ஜா, பதுருதீன், முபாரக் ஷா, சிக்கந்தர் ஷா என 8 இஸ்லாமிய ஆட்சியாளர்கள் மதுரையை ஆண்டனர். (தென்னிந்திய வரலாறு 11, பேராசிரியர் K.K.பிள்ளை)

சூரியகுல பாண்டியரின் சந்ததியினராகிய "சான்றார் குலத்தவர்கள்" இஸ்லாமிய ஆட்சியை ஏற்றுக்கொள்ளவில்லை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வேளாளருக்கும், மறவர்களுக்கும் இஸ்லாமிய விஜயநகர் அரசர்கள் ஆட்சியை ஏற்றுக் கொண்டதனால், பல உயர்ந்த பதவிகள் வழங்கப்பட்டன. மறவர்கள் விஜய நகர ஆட்சிக்குட்பட்ட நாயக்கர்களின் உதவியுடன் இராம நாதபுர பகுதிக்கு ஆட்சியாளர்களாக (கி.பி 1604-1752) மாறுகின்றனர். நாயக்கர் தமது ஆதரவாளர்களுக்கு கௌரவப் பதவிகளைக் கொடுத்தனர். மாறாக தமது அரசியல் எதிரிகளான சான்றார்களை வெறுத்து ஒதுக்கத் தொடங்கினர். (தமிழருள் மறைந்த அரச குலம், பக். 72, 73.)

கி.பி.1573 இல் "பெரிய வீரப்ப நாயக்க மன்னன்" சான்றார்கள் தங்கள் இராஜ்யத்தைக் கைப்பற்ற கலகம் செய்வதாகக் கூறி, சான்றார்களுக்கு எதிராக பின்வரும் சட்டங்களைப் பிறப்பித்தான்.

### அ. ஊரடங்குச் சட்டம்

இதன்படி, சகல கிராமத் தலைவர்களையும் அழைத்து, சான்றார்களுடன் எவரும் தொடர்புபடவோ அல்லது உதவி ஒத்தாசைகள் வழங்கவோ கூடாது. இதனை மீறினால் தண்டனை வழங்கப்படும்.

### ஆ. இடம்பெயர் சட்டம்

இச்சட்டத்தின்படி, சான்றார்கள் ஒரு ஊரில் தங்குவதாயிருந்தால், வர்த்தகம் ஆகிய தொழில்களுக்கு ஏற்றபடி, இத்தனை நாட்கள் இருந்துவிட்டு, உடனே இன்னொரு ஊருக்குப் போய்விட வேண்டும்.

இச் சட்டங்களால் அரசகுல மரபுகளுடனும், படைக் கலங்களுடனும் தொடர்புபட்டிருந்த சான்றார் குலத்தவர்கள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சொத்து, சுகங்களை இழந்து அகதிகளாக்கப்பட்டனர். பிற்காலத்தில் வரலாறு எழுதியவர்களும் இவர்களைப் பற்றி தவறாக எழுதத் தொடங்கி விட்டனர். (சான்றோர் வரலாறு, மரிய அந்தோனி நாடார்.)

மேலும், பின்வந்த காலங்களில் ஆட்சியில் அமர்ந்த ஆட்சியாளர்கள் சான்றார் சமூகத்தவரை கீழ் நிலைக்குத் தள்ள பல பிரயத்தனங்களைச் செய்துள்ளமை வரலாற்றில் பதிவாகியுள்ளது. எடுத்துக் காட்டாக:

1. கி.பி.1899–இல் "சிவகாசி" எனும் இடத்தில் சான்றார்களின் வீடுகளில் மறவர்களை ஏவிவிட்டு செய்யப்பட்ட "பெருங்கொள்ளை" நிகழ்வு. இதனால் சான்றார் சமூகத்தினர் பாரதூரமாக பாதிக்கப் பட்டிருந்தனர்.
2. கி.பி. 1860 இல் தமிழ்நாட்டில் அருப்புக்கோட்டை, பாளையம்பட்டி ஆகிய இடங்களில் சான்றார் குடியிருப்புகள் கொள்ளையடிக்கப்பட்டு, தீக்கிரை யாக்கப்பட்டன.
3. கி.பி. 1974 இல் தமிழ்நாட்டில் கன்னியாகுமரி, உவரி, கூடங்குளம், குளச்சல் எனும் இடங்களில் மேற்கொள்ளப்பட்ட சொத்தழிப்பு, கொலை, கொள்ளைச் சம்பவங்கள்.

இதேபோல் சான்றார் குலத்தவர்களின் மேன்மையை வெளிக்காட்டக் கூடிய அனைத்து ஆதாரங்களும் அழிக்கப்பட்டன அல்லது மறைக்கப்பட்டன. தமிழ்நாட்டிலும், இலங்கையிலும் தங்கள் தங்கள் வகுப்புகளை உயர்வுபடுத்து வதற்காக பிற்காலத்தில் நூல் எழுதியவர்கள் சான்றார்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பற்றிய உண்மையான விடயங்களை மறைத்து, பிழையான விடயங்களை எழுதத் தொடங்கினர்.

எடுத்துக் காட்டாக:

1. "கபிலர் அகவல்" எனும் பழைய உண்மையான ஏட்டுப் பிரதியில்,

"காவிரிப் பூம்பட்டணத்தில் கள் வினைஞர் சேரியில்
பழையர் அகம்தனில் உறுவை வளர்ந்தனள்"

என்று எழுதப்பட்டிருந்ததை, பிற்காலத்தில் "கபிலர் அகவல்" என்ற பெயரில் அச்சில் வெளியிட்டவர்கள்,

"காவிரிப் பூம்பட்டணத்தில் கள் வினைஞர் சேரியில்
சான்றார் அகம்தனில் உறுவை வளர்ந்தனள்"

என வேண்டுமென்றே திரிபுபடுத்தி எழுதியுள்ளனர்.

2. கி.பி.1875 இல் ஞானப்பிரகாச சுவாமிகள் எழுதிய "சாதி நூல்" எனும் நூலில்,

"அதுலமா மரசர் சாதி அரிவையை பெருவேளாளன்
புதுமணம் புரிய வந்த புத்திரர் பழையராகி
முதுபனை யீந்திற்றுக்கு..."

என எழுதியிருந்ததை அதற்கு 34 வருடங்களுக்குப் பின்னர் 1909 இல் திரு. க. செல்லையாப்பிள்ளை என்பவரும், திரு.நா. சிவசுப்ரமணிய சிவாச்சாரியார் என்பவரும் இணைந்து வெளியிட்ட "சாதிபேத விளக்கம்" எனும் நூலில்,

"அதுலமா மரசர் சாதி அரிவையை பெருவேளாளன்
புதுமணம் புரிய வந்த புத்திரர் சான்றாராகி
முதுபனை யீந்திற்றுக்கு..."

எனப் புரட்டி எழுதியுள்ளனர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

3. 1972 இல் திரு சு. சிதம்பரனார் என்பவர் "சேரர் வரலாறு" என்ற பெயரில் ஒரு நூல் எழுதியுள்ளார். அதில் "வேளாளர்களே அரசர்" என்ற வகையில் எழுதியுள்ளார் தொழில் பெயரால் ஏற்பட்ட 18 வகுப்புகளையும் வரிசைப் படக் கூறியுள்ளார். ஆனால் சான்றார், நாடார் என்ற பெயர்களை வேண்டுமென்றே விட்டுவிட்டார்.

வேளாளர்களே அரசர்கள் என்பதற்கு சரியான ஆதாரங்கள் எதுவுமில்லை. சங்க நூல்களிலும், இதிகாசங் களிலும் வேந்தர்களுக்கு சான்றார், சான்றோர், சான்றவர், நாடன், நாடான் என்று கூறப்பட்டுள்ளனவேயன்றி, வேளாளர் என்ற பெயர் எங்கும் கூறப்படவில்லை. எனவே இதில் இவர் தனது பக்கச்சார்பை காட்டிவிட்டார் எனலாம். (சான்றோர் வரலாறு, பக். 198, 199. கி.ம.ம.மரிய அந்தோணி நாடார்)

4. இலங்கையிலும், குறிப்பாக கிழக்கு மாகாணத்தில் எழுதப்பட்ட வரலாற்று நூல்களில் பக்கச் சார்புகளும், கற்பனைக் கதைகளும் மலிந்து கிடக்கின்றன. 1962இல் வித்துவான் F.X.C.நடராசா என்பவரால் எழுதி வெளியிடப் பட்ட மட்டக்களப்பு மான்மியம், 1967 இல் திரு.V.C.கந்தையா அவர்களால் வெளியிடப்பட்ட மட்டக்களப்பு தமிழகம், 2005இல் திரு.சா. இ.கமலநாதன், திருமதி. கமலா கமல நாதன் ஆகியோர் இணைந்து எழுதிய "மட்டக்களப்பு பூர்வ சரித்திரம்," 2005–இல் கவிக்கோ வெல்லவூர்க் கோபால் அவர்கள் எழுதிய "மட்டக்களப்பு வரலாற்றுக்கோர் அறிமுகம்," 2012இல் திருமதி.கமலாம்பிகை லோகிதராஜா என்பவரால் எழுதப்பட்ட "பத்தும் பதியமும்", மேலும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சில வகுப்பினர்கள் தங்கள் தேவைகளுக்காக எழுதிய நூல்களும் வரலாற்றுத் தரம் வாய்ந்தவையல்ல. இவை பக்கச்சார்பாக எழுதப்பட்டவையாகும். இந்நூல்கள் சான்றார் குலத்தவர்களுடைய உண்மை வரலாற்றை துருவி ஆராயாமல் மேம்போக்காக எழுதப்பட்டவையாகும்.

மட்டக்களப்பு மான்மியத்திற்கு இரண்டாம் பதிப்புரை எழுதிய திரு அ.கி.பத்மநாதன் அவர்கள் 'மட்டக்களப்பு மான்மிய'த்தில் கற்பனையும், கர்ண பரம்பரைக் கதைகளும் கலந்திருப்பது உண்மையே" எனக் கூறியுள்ளார்.

"மட்டக்களப்பு பூர்வ சரித்திரம்" எனும் நூலுக்கு "வரலாற்று அறிமுகக் குறிப்பு" வழங்கிய வரலாற்று ஆய்வாளர் திரு த. சிவராம் அவர்கள் மட்டக்களப்பு வரலாறு தொடர்பாக வழங்கியுள்ள குறிப்புரைகள் சில பின்வருமாறு,

"1993 இல் மட்டக்களப்பு மான்மியம் பற்றி நான் செய்த ஆய்வொன்றில் இந்நூலின் பெயர் F.X.C.நடராசா அவர்களால் வழங்கப்பட்டது எனவும், இவரது பதிப்பில் காணப்படும் பிரிவுகளான நாமவியல், சரித்திரவியல், சாதியியல், ஆலயவியல், ஓழிபியல் ஆகியவை அவராலேயே செய்யப்பட்டவை என்பதையும் அகச் சான்றுகளின் அடிப்படையில் சுட்டிக் காட்டியிருந்தேன்."

"வீரமுனைக் கல்வெட்டு எங்கிருக்கிறது என்பது யாருக்கும் தெரியாது. சம்மாந்துறை செப்பேடு எங்கிருக்கிறது என்பது தெரியாது. 16ஆம், 17ஆம் நூற்றாண்டுகளுக்குமுற்பட்ட கல்வெட்டுகள், செப்பேடுகள் எதுவும் கண்டுபிடிக்கப்படவில்லை."

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"மட்டக்களப்பு மான்மியம் நூலுக்கு அடிப்படையான ஏடுகளை யாரும் காணவில்லை."

இவ்வாறெல்லாம் திரு.த.சிவராம் அவர்கள் தனது அறிமுகவுரையில் கூறியுள்ளார்.

"குளக்கோட்டன் தரிசனம்" எனும் நூலில் தனது முகவுரையில் செல்வி.க.தங்கேஸ்வரி அவர்கள் கூறும்போது, "தவறான தகவலின் அடிப்படையில் 'மட்டக்களப்பு மான்மியம்' எழுதியவர்கள் குளக்கோட்டன் வரலாற்றை மகாசேனன் வரலாறாக எழுதியுள்ளனர். நல்லவேளையாக திருகோணமலை வரலாறு பற்றிக் கிடைக்கும் நூல்கள், கல்வெட்டுகள், சாசனங்கள் மூலம் மேற்படி வரலாறு மகாசேனனுடையது அல்ல, குளக்கோட்டனுடையதே என நிறுவ முடிகிறது" எனக் கூறியுள்ளார்.

மட்டக்களப்பு மான்மியத்தில் சான்றார் வகுப்பினரை "தட்டார்" என்றும் (பக். 108) பிழையாகக் குறிப்பிடப் பட்டுள்ளது. எனினும் இந்நூலில் குறிப்பிடப்படும் ஒருசில சம்பவங்கள் ஓரளவு உண்மைத்தன்மை வாய்ந்தவையாகத் தென்படுகின்றன.

2005இல் "மட்டக்களப்பு வரலாறு ஒரு அறிமுகம்" எழுதிய கவிக்கோ வெல்லவூர்க் கோபால் அவர்கள் இந்நூலில் ஏனைய பிற்போக்கு எழுத்தாளர்களைவிட ஓரளவு உண்மைகளை எழுதியிருந்தாலும், குறிப்பிட்ட குலத்தினரை உயர்த்தியும், ஏனைய அனைத்துப் பிரிவினரையும் தடவித் தடவி தலையில் அடிப்பதுபோல் தாழ்த்தியும் எழுதி யுள்ளதை வாசிப்பவர்கள் புரிந்துகொள்ள முடியும். இந்நூலில் 178ஆம் பக்கத்தில் அவர் சான்றாரை "பத்தினாச்சிக்குடி"

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எனத் தலைப்பிட்டிருப்பது இக்குலத்தினரைப் பற்றிய அவரின் அறியாமையைப் புலப்படுத்தும். பத்தினாச்சிக்குடி என்பது சான்றாரின் எட்டுக் குடிகளுள் ஒன்று மட்டுமே யாகும்.

இதுபோல் 2012 இல் பாண்டிருப்பு கிராமத்தின் வரலாற்றை எழுத முற்பட்டுள்ள திருமதி. கமலாம்பிகை லோகிதராஜா அவர்கள் "பத்தும் பதியமும்" என்ற நூலில் அங்கு வாழும் தனது வகுப்பினரை மட்டும் வெகுவாக உயர்த்தியும், ஏனைய அனைத்துப் பிரிவினரையும் மிகவும் தாழ்த்தியும் வேண்டுமென்றே எழுதியிருந்தார். சான்றார்களையும் தாழ்த்தி எழுதியிருந்தார்.

இந்நூல் தொடர்பான 29.07.2012 ஆம் திகதி தினக்குரல் பத்திரிகையில் வெளிவந்த திரு.க.ஜனக்குமார் அவர்களது "பத்தும் பதியமும் ஒரு பார்வை" என்ற விமர்சனம் இங்கு நோக்கத்தக்கது. அதில் அவர் "இது ஒரு கிராமத்தின் புகழ்பாடும் புராணமாக மேலோட்டமாகத் தெரிந்தாலும், தன் குலப்பெருமை, குடும்பப் பெருமையைப் பறைசாற்றுவதும், ஏனையவர்களை தாழ்ந்தவர்கள் என ஏளனம் செய்வதுமே நூலின் முதல் நோக்கமாகத் தெரிகின்றது. இவ்வாறான எழுத்துகள் தமிழ்த் தேசியப் போராட்டத்தின் ஒரு சில நல்ல விளைவுகளாகக் கிடைத்த சாதியச் சிந்தனை ஒழிவுகளை மீண்டும் கிளறி, அந்நாற்றத்தை முகர்ந்து பார்க்கும் வக்கிர உளவியலின் வெளிப்பாடா? என்று ஐயம் கொள்ள வைக்கின்றது" என எழுதியிருந்தார். இவரும் அதே கிராமத்தைச் சேர்ந்தவர் என்பது இங்கு குறிப்பிடத்தக்கது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இதே ஆண்டு (27.09.2012 அன்று) எமது நாட்டின் மூத்த கலைஞர் "பாவாணர் அக்கரைப் பாக்கியன்" அவர்கள் தேசிய பத்திரிகையான வீரகேசரி பத்திரிகையில் "வரலாறு எழுத முற்படுவோரும், கேள்வி ஞானத்தில் நூல் வெளியிட்ட நூலாசிரியர்களும், குறிப்பாக 1962 ஆம் ஆண்டு தொடக்கம் 2012 ஆம் ஆண்டு வரை ஏனாதிநாத நாயனார் குலமாகிய சான்றோர் குலம் பற்றிய வரலாறுகள் பற்றிச் சொன்னவை பிழையானவையாகும். சான்றோர்களது வம்சம் சூரிய வம்சம், தொழில் போர்த்தொழில், குலவிருது வாள். இவர்கள் அரசாண்ட வம்சம் என்பதை வரலாற்று ஆய்வாளர்களுக்குச் சொல்லி வைக்கின்றோம். கி.பி.1422 ஆம் ஆண்டிற்கு முன்பிருந்து அரசாண்டவர்கள் இந்தச் சான்றோர் குலத்தவர்கள்" என எழுதியிருந்தார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 7.சான்றார் வீழ்ச்சி பற்றி அறிஞர்களால் வெளியிடப்பட்ட கருத்துகள்

**28.11.1900** அன்று வெளியிடப்பட்ட "மதராஸ் டைம்ஸ்" பத்திரிகையில் "தங்கள் அரசாட்சி நின்றுபோன காலமுதல் சான்றார் அடைந்திருக்கும் துன்பங்களுக்குக் கணக்கு வழக்கேயில்லை. அரச போகங்களை இழந்த சான்றார் எதிரிகளால் வதைக்கப்பட்டமை ஆச்சரியமான விடயமல்ல" என எழுதப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கதாகும்.

சான்றார்களை வென்ற விஜயநகர, நாயக்க மன்னர்கள் அவர்களை எப்படித் தாக்கியிருப்பர் என்பதை W.W.ஹன்ரர் (W.W.Hunter) எனும் ஐரோப்பிய அறிஞர் விவரமாகக் கூறுகின்றார். "படையெடுத்து, தோல்வியடைந்த அரசர்களும், வீரர்களும் கொலை செய்யப்பட்டு, எஞ்சியோர் தொடக்கத்தில் வேளாண்மை செய்யவும், பின் கட்டை வெட்டவும், யானைக்குப் புல் அறுக்கவும் கட்டளையிடப்பட்டனர்" (W.W.ஹன்ரர், இந்தியாவின் அரசாங்க வர்த்தமானி பத்திரிகை.)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திருவனந்தபுரம் கல்லூரிப் பேராசிரியரும், மனோன் மணிய ஆசிரியருமான ராவ்பகதூர் பி.சுந்தரம்பிள்ளை அவர்கள் இவ்விடயங்களை பின்வருமாறு விளக்குகின்றார். "சான்றார்" தங்களை "சத்திரியர்" என்று சொல்கிறார்கள். தாங்கள் பாராட்டுகிறபடியே பூர்வ தமிழ்நாட்டு சாதிகளுக்குள் மிகவும் மதிப்பான அந்தஸ்துடையவர்களாக இவர்கள் இருந்திருக்கலாம். ஆனால் பின்னர் பிராமணர் தென்னாட்டுக்கு வந்து பின்னால் ஆண்ட அரசர்களை முகஸ்துதியாய் ஏமாற்றி, தங்களுக்கு உயர்ந்த பதவிகளை பெற்றுக்கொண்டது முதல்தான் சான்றார் குறைவடைந்தனர் என்று சொல்லலாம்."

"எனக்குச் சந்தேகமறத் தெரிந்தபடி, ஒரு புது அரசாங்கத்தார் வந்து முந்திய அரச வம்சத்தைத் தலைகீழாய்த் தாழ்த்தி, அவர்கள் நிலங்களையும், சொத்துகளையும் விட்டோடப் பண்ணியதால், அவர்கள் வேறெங்கேயாயினும் புகலிடம் தேடினர்.

அங்கே தங்கள் பெயரையும், பூர்வ தரத்தையும் மறைத்து விறகுவெட்டிகளாகவும், தண்ணீர் சுமப்பவர்களுமாக ஆனார்கள். இதுபோல் மேற்படி புதிய அரசாங்கத்தின் தயவைப் பெற்று சிலாக்கியம் அடைந்த இதர சாதிகளால் அவமதிக்கப்படுகின்ற தொழில்களை நடத்தி வருவது இவ்வாறான நிலைமையில் சகஜம்தான்.

ஆகவே இவ்விடயங்களை ஒரு வகையாய் விசேசமாக கவனிக்க வேண்டியுள்ளது. இப்படி அவமதிக்கப்பட்ட இச் சாதியார் தங்கள் பூர்வ உயர்நிலையைக் கண்டுபிடித்ததனால், தங்களிலே மன எழுப்பமாகி தங்கள் உயர் நிலையை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நிறுவுகின்றனர். இதனை நாம் ஏற்றுக்கொண்டு அவர்களுக்கு சகல கனத்ததையும் மகிமையையும் கொடுக்கவேண்டு மென்றே நான் தாராளமாகச் சொல்லுவேன்" என்று கூறியுள்ளார்.

திருவாங்கூர் அரசாங்கத்தினால் தயாரிக்கப்பட்ட "திருவாங்கூர் ஸ்டேட் மானுவல்" (2ஆம் பகுதி, பக்.392-398) என்பதில் பின்வருமாறு கூறப்பட்டுள்ளது:

"அதாவது இக்குலத்தவருடைய பெயரின் சரியான வடிவம் "சான்றார்" என்பதாகும். சான்றோர், சான்றவர் என்னும் சொற்கள் அதன் பிரதி வடிவங்களாக இருக்கின்றன. தமிழ் இலக்கிய நூல்களிலே காணப்படுகின்ற சில குறிப்புகளிலிருந்தும், இந்தக் குலத்தாருக்கு மாத்திரம் உரியவைகளாயிருக்கும் ஐதீகங்களிலிருந்தும் சான்றார் வட இந்தியாவிலிருந்து தெற்கே குடியெழும்பி வந்த துணிவான யுத்த சாதியாரின் ஒரு கூட்டத்தைச் சேர்ந்தவர்களென்று நமக்குத் தெரிய வருகின்றது. 63 நாயன்மார்களுள் ஒருவரான ஏனாதிநாத நாயனார் சான்றார் சாதியைச் சேர்ந்தவரென்பதாக தமிழ் பெரியபுராணத்திலும், அவர் "சாஷி குலோத்பவ" என்பதாக அதன் சமஸ்கிருத பிரதியிலும் சொல்லப்பட்டிருக்கின்றது.

அக்காலத்தில் இச்சாதியார் இத்தேசத்தின் பல பாகங் களில் அரசாளுவோராய் அமர்ந்ததாகப் புலப்படுகின்றது. அவர்கள் ஒரு காலத்தில் அரசாங்கம் ஆளும் சாதியாய் இருந்தார்கள் என்ற உண்மைச் சங்கதியானது நாடார், நாடாள்வார் போன்ற அவர்களுக்குரிய பட்டப்பெயர்களால் மட்டுமல்ல, அவர்களுக்கு மட்டுமே உரியதான திரளான பழக்க

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வழக்கங்களாலும், இன்னும் வேறு விடயங்களாலும் உறுதியாகின்றன. நாடாள்வார் என்ற பட்டப்பெயர் திருவாங்கூர் நாட்டில் சில பூர்வ சாசனங்களில் காணப்படுகின்றது.

அவர்களுடைய ஆளுகை பின்வந்த திராவிட சனங்களின் படையெழுச்சியால் பின்னான ஒரு காலத்தில் கவிழ்க்கப்பட்டது. இந்த சாதி சனங்கள் சாதாரணமாய்ச் "சான்றார்" என்று சொல்லப்பட்டாலும், அவர்கள் நாடார்கள் என்ற பெயரைத்தான் தங்களுக்கு வழங்கினார்கள். நாடார் என்ற பதம் பட்டப் பெயராக வழங்கி வருகின்றது." இவ்வாறு குறிப்பிடப்பட்டுள்ளது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 8.சான்றார்கள் தாங்கள் உயர் வகுப்பினர் என நிரூபித்த சந்தர்ப்பங்கள்

முதலாம் குலோத்துங்க சோழன் காலத்தில் சான்றார் குல வலங்கை உய்யக்கொண்டார் பிரிவினர் பூவேந்திய சோழன் என்ற ராஜ பட்டமும், சான்றாண்மை எனும் தகுதியும் பெற்றனர். இதனைக் கண்டு பொறாமை கொண்ட வேறு குடியைச் சேர்ந்த அதிகாரி ஒருவர் சோழ அரசனிடம் வலங்கையர் பற்றி கோள்மூட்டுகின்றார். சோழ நாட்டில் பெருமழை பெய்து காவிரி ஆற்றில் வெள்ளம் பெருகி உடைப்பேற்படுகின்றது. உடைப்பினை அடைக்கும் பணியில் சோழ நாட்டின் அனைத்துக் குடிகளும் கட்டாய உடலுழைப்பில் ஈடுபடுத்தப்படுகின்றனர்.

வலங்கை உய்யக்கொண்டார்களோ தமது சத்திரிய வர்ண அந்தஸ்து கருதியும், தமது மரபு வழிப்பட்ட பழக்கம் கருதியும் இவ்வுடலுழைப்பில் ஈடுபடாமல் இருக்கின்றனர். இந்த நேரத்திலேயே சோழ மன்னனின் அதிகாரி ஒருவர் இவ்விடயத்தை மன்னனிடம் தெரியப்படுத்துகின்றார். இதைக் கேட்ட சோழனும் ஒற்றன் ஒருவனை அனுப்பி இவர்களை தனது அவைக்கு வரவழைத்து காவிரியின் உடைப்பை அடைக்க ஆணையிடுகின்றான்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வலங்கைப் படையினரோ உடைப்படைக்கும் வெட்டி வேலை செய்ய மறுக்கின்றனர். சோழ அரசன் இவர்களில் இருவரை யானையின் காலால் இடறச் செய்கின்றான். அப்படியும் இவர்கள் வெட்டி வேலை செய்ய மறுக்கின்றனர். இறுதியில் இவர்கள் குலதெய்வமான காளியின் சாபத்திற்குப் பயந்தும், இவர்களின் சத்திரிய அந்தஸ்தை ஏற்றுக் கொண்டும் மன்னன் இவர்களை அப்பணியில் இருந்தும் விடுவிக்கின்றான். இந்நிகழ்ச்சி சான்றார் குலப் பட்டயங்கள் பலவற்றிலும் குறிப்பிடப்பட்டுள்ளது.

செங்கோல் ஏந்த வேண்டிய கையில் மண்வெட்டி ஏந்த மாட்டோம் என்றும், கிரீடம் சுமக்க வேண்டிய தலையில் கூடை சுமக்க மாட்டோம் என்றும், நாடாள்வாராக இருப்போமே தவிர, நாட்டாராக (வேளாண் குடிகளாக) இருக்க மாட்டோம் என்றும் பொருள்பட,

"கொத்தெடுத்து மண்வெட்டோம்,
கொற்றவரை கை முகையோம்,
கூடை தொடோம்"

என்று சான்றார்கள் உரைத்ததாக ஆவணங்கள் குறிப்பிடுகின்றன. வலங்கை மாலையில் இவ்விடயம் விரிவாகக் குறிப்பிடப்பட்டுள்ளது.

அடுத்து, சான்றார்கள் தங்கள் உரிமையை நிரூபித்த இன்னுமொரு விடயத்தைக் குறிப்பிடலாம். விஸ்வகர்ம சிற்ப சாஸ்திர செய்யுள்களின்படி சான்றோர் குலத்தவர்கள் சத்திரியர்கள் ஆனபடியினால், இவர்களுக்கு ஆலயங்களில் மேலைக் கோபுரவாசல் உரியது. எனவேதான் இவர்களை "மேலை வாசல் விசேடத்தோர்" எனக் கூறப்பட்டது. நாயக்கர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆட்சி ஏற்படுவதற்கு முற்பட்ட காலங்களில் அரசர்களும், சான்றோர்களும் உரிமையுடன் மேலைக் கோபுரவாசல் வழியாகவே சென்று சுவாமி தரிசனம் செய்துவந்தார்கள்.

மதுரையில் நாயக்கர் ஆட்சிக் காலத்தில் திருமலை நாயக்கருக்கும், நாடார்களுக்கும் ஏற்பட்ட அரசியல் விரோதம் காரணமாக, நாடார்கள் கோவிலுக்கு மேலைக் கோபுரவாசல் வழியாகவே செல்வோம் என்றதால், நாயக்கர் ஆட்சிக்குட்பட்டிருந்த கோவில்களில் மட்டும் எல்லா மேலைக் கோபுரவாசல்களும் அடைக்கப்பட்டன. மதுரையில் பிரசங்கத்திற்கு வந்திருந்த மகாத்மா காந்தியும் கூட இவ்வழக்கத்தைக் கண்டித்துள்ளார்.

1924ஆம் ஆண்டு மதுரை மீனாட்சியம்மன் கோவில் கும்பாபிஷேகத்தை முன்னிட்டு திருமலை நாயக்கரால் அடைக்கப்பட்ட மேலைக்கோபுர வாசல் வழி அரசாங்க உத்தரவின்படி திறக்கப்பட்டது. எனவே நாடார்கள் தங்கள் உரிமையைப் பயன்படுத்தினர்.

மேலும், சான்றார்களின் உரிமைப் போராட்டம் தொடர்பான இன்னுமொரு சம்பவம் வரலாற்றில் இடம்பெறுகின்றது. கி.பி.1829ஆம் ஆண்டில் தென்னிந்தியாவில் திருவிதாங்கூர் சமஸ்தானத்திற்கு உட்பட்ட பகுதியில் ஒரு சட்டம் கொண்டுவரப்பட்டது. அதன்படி தாழ்ந்த சாதி வகுப்பைச் சேர்ந்த பெண்கள் மேல் சட்டை போடக்கூடாது என்று சட்டம் கொண்டுவந்தார்கள். ஆனால் இச்சட்டத்தை நாடார்கள் ஏற்றுக் கொள்ளவில்லை. தாங்கள் சத்திரிய குலத்தைச் சேர்ந்த உயர் வகுப்பினர் எனப் போராட்டம் நடத்தினர். வழக்குத் தொடர்ந்தனர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இது வரலாற்றில் "தோள் சீலைப் போராட்டம்" எனப் பதியப்பட்டது. இறுதியில் சான்றார்கள் நாடார்கள் உயர் வகுப்பினர் என்பது நிரூபணமானது. இதை உறுதிப்படுத்தி திருவிதாங்கூர் வர்த்தமானி அறிவித்தலும் வெளியிடப்பட்டது. இதில் சான்றார்களின் உறுதியான போராட்டத்தை இலங்கையின் பிரபல்யமான எழுத்தாளர் திரு.டொமினிக் ஜீவா அவர்களும் தனது சுயசரிதையில் வியந்து எழுதியிருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது.

இதேபோல் 18ஆம் நூற்றாண்டின் பின்னர் தமிழ் நாட்டு அரச சபைகளிலும், அறிஞர் அவைகளிலும், வழக்காடு மன்றங்களிலும் சான்றார்கள் தாங்கள் அரச குலத்தவர்கள் என்பதனை நிரூபித்துள்ளனர். இவை ஆவணங்கள் மூலம் உறதிப்படுத்தி எழுத்துருவிலும் இருந்தன. பிரித்தானியர் ஆட்சியிலும் அரசாங்கப் பதிவேடுகளில் சான்றார் தங்களை சட்ட அங்கீகாரத்துடன் "சத்திரியர்" என்றே பதிவு செய்து வந்துள்ளார்கள். இதை எவரும் எதிர்க்கவில்லை. பின்னாளில் அவற்றுக்கு என்ன நடந்தது என்பது தெரியாது. இது தொடர்பாக காத்திரமான ஆய்வுகள் இன்னும் மேற்கொள்ளப்பட வேண்டும்.

"சிம்மன் பாதிரியார்" அவர்கள் குறிப்பிடும்போது "இந்தியாவிலுள்ள சகல சாதி இந்துக்களிலும் சான்றோர் குலத்தவரைப் போல் சாதி அபிமான விஷயத்தில் மகாரோஷம் பாராட்டும் வேறு சாதி இல்லவே இல்லை" எனக் கூறியுள்ளார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 9. இலங்கையில் சான்றார் குலத்தவரின் வரவு

இலங்கையில் சான்றார் வரவு தொன்மை வாய்ந்ததாகும். "ஈழக்குலச் சான்றார் ஏனாதி நாயனார்" எனப் பெரிய புராணம் கூறுகின்றது. இங்கு "ஈழக் குலம்" என்பது "ஈழன் + குலம்" என வருகின்றது. ஈழன் என்பது எல்லாளனைக் குறிக்கும். இவன் கி.மு 145இல் அனுராதபுரத்தைக் கைப்பற்றி 44 ஆண்டுகள் ஆட்சி செய்தான். எனவே எல்லாளன் நிலைகொண்ட காலமே சான்றார் இலங்கையில் காலூன்றிய காலம் எனக் கொள்ளலாம். சான்றார் சமூகத்துள் பல்வேறுபட்ட உட்பிரிவுகள் இருந்தன. அவற்றுள் ஈழக் குலம் முக்கியமான பிரிவாகும். கேரளத்தில் தற்போதும் சான்றார் "ஈழவர்" என அழைக்கப்படுகின்றனர்.

இலங்கையில் கிழக்கு மாகாணத்தின் வரலாறு கூறும் நூல்கள் சிலவற்றில் சான்றார்கள் வேறு குலத்தவர்களால்... குறிப்பாக முக்குவ குலத்தவர்களால் கொண்டுவரப்பட்டதாக குறிப்பிடப்பட்டுள்ளது. அவர்கள் அரச வம்சமாக இருந்தமையால் சான்றார்களையும், ஏனைய கிழக்கு மாகாணத்திலுள்ள 18 சாதியினரையும் சிறைக்குடிகளாக கூட்டிவந்ததாக பல நூல்களில் எழுதியுள்ளனர். அது

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பிழையானதாகும். ஏனெனில் முக்குவரின் மட்டக்களப்பு வரவு கி.பி.12ஆம், 13ஆம் நூற்றாண்டுகளில் ஏற்பட்டதாகும். அதற்கு முன்பே சோழர் காலத்தில் கி.பி. 9ஆம், 10ஆம் நூற்றாண்டுகளில் சான்றார்கள் சோழப் படைகளினூடாக மட்டக்களப்புக்கு வந்துவிட்டனர். சான்றார், முக்குவர்களின் வரவுக்கு பல நூற்றாண்டுகளுக்கு முன்பே பூர்வீக குடிகளாக மட்டக்களப்பு பிரதேசத்தில் நாகர், இயக்கர், வேளாளர் (வேட வேளாளர்), திமிலர் போன்ற மக்கள் இங்கு வாழ்ந்தனர். மட்டக்களப்பில் வெளியிடப்பட்ட நூல்களைத் தவிர வேறு எந்த நூல்களிலும் "குகர்" என்ற மக்கள் வாழ்ந்ததாகக் குறிப்பிடப்படவில்லை.

யாழ்ப்பாண வரலாற்று நூல்களிலும், வீரகேசரி வாரவெளியீட்டில் 3.06.2012 அன்று திரு.தாழை.செல்வ நாயகம் அவர்களால் எழுதப்பட்ட கட்டுரை ஒன்றிலும் "கி.பி 5இல் வட மாகாணத்திலிருந்து குடியெழுப்பப்பட்ட முக்குவ குலத்தவர்கள் மட்டக்களப்புக்கு வந்து புகலிடம் தேடினர். அந்நேரம் இங்கு வாழ்ந்துவந்த வேட வேளாளர்களும், திமிலர்களும் முக்குவர்களை எதிர்த்துப் போராடினர்" என்று குறிப்பிடப்பட்டுள்ளது.

யாழ்ப்பாண வரலாறுகளின்படி இச்சம்பவம் நடைபெற்றது உண்மையாயினும், இதில் வெளியேற்றப்பட்டவர்கள் முக்குவ குலத்தவர்கள் அல்லர். இது மீன்பிடிச் சமூகங்களில் ஒன்றாக இருக்கலாம். ஏனெனில் உறுதியான வரலாற்று ஆய்வுகளின்படி, முக்குவர்களின் மட்டக்களப்பு வரவு கி.பி. 13ஆம் ஆண்டின் பின்பே ஏற்பட்டுள்ளது. கவிக்கோ வெல்லவூர்க் கோபால் அவர்களால் எழுதப்பட்டு, அண்மையில் வெளியிடப்பட்ட "மட்டக்களப்பு வரலாறு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஓர் அறிமுகம்" (பக். 48) நூலில் "கி.மு.500 வாக்கில் யாழ்ப்பாணத்தில் உசுமன் தலைமையில் வாழ்ந்த மீன்பிடிச் சமூகம் ஒன்று பண்டுவசுவால் வெளியேற்றப்பட்டு பாணகையில் வந்து குடியேறியதாக யாழ்ப்பாண வரலாற்றுக் குறிப்புகளால் அறியப்பட்டாலும், மட்டக்களப்பில் இது குறித்த தகவல்கள் எதுவும் பெறப்படவில்லை. எனினும் இம் மீன்பிடிச் சமூகமானது கலிங்கத்தின் குக வம்சத்தினரின் வரவுக்கு முற்பட்டு வாழ்ந்த திமிலர் சமூகத்தை அடையாளப்படுத்துவதாக அமையலாம்" எனக் குறிப்பிடுகின்றார்.

கி.பி.10ஆம் நூற்றாண்டுகளின் பின் கிழக்காபிரிக்கா, குஜராத், கேரளம் ஆகிய பிரதேசங்கள் முஸ்லிம்களின் வாணிப வலயங்களாக மாறுகின்றன. (பேராசிரியர். செ. கிருஷ்ணராஜா, இலங்கை வரலாறு, பக். 20.) பேராசிரியர் கா.சிவத்தம்பி அவர்கள் கூறும்போது, மட்டக்களப்புத் தமிழரிடம் (முக்குவர்) கேரள மக்களின் உணவு முறைகளும், பழக்கவழக்கங்களும் காணப்படுவதாகக் குறிப்பிடுவார். ஐரோப்பியர்கள் தங்கள் குறிப்புகளில் அக்காலத்தில் இலங்கையின் மட்டக்களப்புப் பகுதியில் வாழ்ந்த தமிழ் மக்களை "மலபாரிகள்" என்றே குறிப்பிட்டனர். மலபார் என்பது கேரள தேசமாகும். எனவே இங்குள்ள முக்குவ சமூகத்தவர் 12ஆம், 13ஆம், நூற்றாண்டுகளில் கேரள நாட்டிலிருந்தே மட்டக்களப்புக்கு வந்துள்ளனர். இக்காலத்தில் கேரளத்தில் முஸ்லிம்களுடன் அவர்களுக்கு நெருங்கிய தொடர்புகள் இருந்தன.

13ஆம் நூற்றாண்டில் இலங்கையில் புத்தளம் மட்டக்களப்புப் பகுதிகளில் முக்குவத் தலைவர்கள் கிட்டத்தட்ட குறுநில மன்னர்களைப்போல் செயற்பட்டார்கள் என்பதற்குப்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

போதிய ஆதாரங்கள் உள்ளன. கேரளக் கரையோரத்திலிருந்து படையெடுத்துவந்த முக்குவர்கள் இலங்கையின் மேற்குக் கரையிலுள்ள புத்தளம் பகுதியை கைப்பற்றிக் குடியேறினர் என "முக்கர ஹட்டண" எனும் சிங்கள ஓலைச்சுவடியில் குறிப்பிடப்பட்டுள்ளது. முஸ்லிம் மக்களும், முக்குவருடன் இணைந்தனர். இவர்களுடன் அப்பகுதியில் வாழ்ந்த தமிழ் கரையார் சமூகத்தினர் போரிட்டனர். இக் கரையார மக்களே பின் "கரவா" எனும் சிங்களச் சாதியாராக மாறிப் போயினர்.

முக்குவர்கள் முதன்முதலில் மட்டக்களப்புப் பகுதியில் நுழைந்தபோது, அங்கு ஏற்கனவே வாழ்ந்து வந்த "திமிலர்" எனும் மீனவ சாதியினரோடு அவர்களுக்கு மோதல் ஏற்பட்டது. முக்குவர்கள் முஸ்லிம்களின் துணையோடு திமிலர்களுடன் போரிட்டு பனிச்சங்கேணிக்கு அப்பால் அவர்களை விரட்டி விட்டனர். மட்டக்களப்பில் வாழும் முஸ்லிம்கள் தங்களை "முக்குவக் குடியினர்" என்பதை ஏற்றுக்கொள்வர்.

கி.பி.1605 காலப்பகுதியில் கண்டி மன்னன் செனரத் புத்தளப் பகுதியில் வாழ்ந்த முஸ்லிம்களுக்கு வாணிபம் தொடர்பாக போர்த்துக்கேயரால் நெருக்குதல் ஏற்பட்டபோது, முஸ்லிம்களின் நெருங்கிய தொடர்பினரான மட்டக்களப்புப் பிரதேச முக்குவ ஆட்சியாளர்களுடன் தொடர்புபட்டு மட்டக்களப்பிற்கே அவர்களை அனுப்பி வைத்தான். அவர்கள் நற்பிட்டிமுனை, கல்முனை போன்ற இடங்களில் பெருமளவில் குடியமர்த்தப்பட்டதாக மட்டக்களப்பு வரலாற்று நூல்கள் கூறுகின்றன.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கலிங்க மாகன் 13ஆம் நூற்றாண்டில் (கி.பி.1215–1255 வரை) கலிங்கத்தில் (ஒரிசா) இருந்து படையெடுத்து வந்து, பொலநறுவையைப் பாழாக்கி மட்டக்களப்பில் தனது குலத்தாருக்கு (முக்குவ) வாய்ப்பாக சட்டதிட்டங்களை ஏற்படுத்திக் கொடுத்ததாக மட்டக்களப்பு மான்மியமும், செல்வி.க.தங்கேஸ்வரியின் "மாகோன் வரலாறு" நூலும் கூறுகின்றன. உண்மையில் கலிங்கத் தொடர்புடைய மாகன் கேரளத்திலிருந்தே படையெடுத்து வந்தான். சிங்கள நூலாகிய "ராஜாவலிய" எனும் நூலில் "இந்தியாவிலிருந்து 24000 கேரள, தமிழ்ப் போர்வீரர்களுடன் இலங்கைக்கு வந்த மாகன், பொலநறுவையைக் கைப்பற்றி ஆட்சி செலுத்தினான். வடக்கு, கிழக்கு, மேற்குப் பகுதிகளில் இவனது படைகள் இருந்த ஒவ்வொரு கிராமத்திலும் மாகன் தமிழரைக் குடியேற்றினான்" எனக் கூறப்பட்டுள்ளது. இதில் குறிப்பிடப்பட்ட தமிழர்கள் கேரள நாட்டிலிருந்து வந்த முக்குவ சமூகத்தவராக இருக்கலாம். அக்காலத்தில் தமிழ் பேசும் மக்களே அங்கு வாழ்ந்தனர். ஆனால் இவர்கள் வரவுக்கு முன்பே இப்பகுதிகளில் வேறு குலங்களைச் சேர்ந்த தமிழர்கள் இங்கே வாழ்ந்துள்ளனர் என்பது தெளிவானதாகும்.

பொதுவாக மட்டக்களப்பு வரலாறுகளை நோக்கும் போது, இங்கு முக்குவ சமூகத்தவர்களே பிரதான இடத்தைப் பெற்றிருந்தனர். காரணம், மட்டக்களப்புப் பகுதியில் அவர்களே பெரும்பான்மையினராக வாழ்ந்தனர். யாழ்ப்பாணத்தில் ஆரம்பத்தில் தமிழ் அரசர்களான ஆரியச் சக்கரவர்த்திகளின் கீழும், பின்னர் நாயக்கர் ஆட்சியில் வன்னி அரசர்களின் கீழும் "யாழ்ப்பாண இராச்சியம்"

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சுதந்திர அரசாக இருந்தது. ஆனால் கிழக்கில் "மட்டக்களப்பு இராச்சியம்" என்று தனியரசு நிலவவில்லை. முக்குவ பிரதேச ஆட்சியாளர்கள் சிங்கள இராசதானிகளுக்கு உட்பட்டே இங்கு ஆட்சி செய்தனர்.

எனினும் யாழ்ப்பாணத்தைப் போலல்லாது, மட்டக்களப்புப் பகுதியில் தமிழ் மக்கள் சாதி வேறுபாடுகளை பொருட்படுத்தாது ஒற்றுமையுடன், ஓரளவாயினும் அன்னியோன்னியத்துடன் வாழ்ந்து வருவதைக் காண முடிகின்றது.

இதைத்தான் மட்டக்களப்பு வரலாற்று நூல்கள் "ஆரியச் சுவடுகள் பதியாத இம்மண்ணில் மக்கள் வேறுபாடுகளின்றி, விருந்தோம்பல் பண்புடன், ஒற்றுமையாக வாழ்கின்றனர்" என வர்ணிக்கின்றன.

பிரித்தானியர் ஆட்சிக் காலத்தில் சேர். எட்வேட் வார்ன்ஸ் என்பவர் தேசாதிபதியாக கடமையாற்றிய காலத்தில், (கி.பி. 1824 ஆம் ஆண்டில்) மேற்கொள்ளப்பட்ட "சாதிக் கணக்கெடுப்பில்" மட்டக்களப்பில் வாழ்ந்த 34 பிரிவினருள் (சிங்களவர், முஸ்லிம்கள் உட்பட) முக்குவர் சமூகத்தவர் மட்டும் 28 சதவீதம் வாழ்ந்துள்ளனர். தமிழ் மக்களில் காணப்பட்ட 28 பிரிவினருக்குள் முக்குவர் சமூகத்தவர் மட்டும் 45 சதவீதம் வாழ்ந்துள்ளனர். எனவே மட்டக்களப்புப் பகுதியில் 13ஆம் நூற்றாண்டு முதல் முக்குவர் பிரிவினரே பெரும்பான்மை சாதியினராக வாழ்ந்து வந்தனர். இதனால்தான் ஒல்லாந்தர் ஆட்சிக் காலத்தில் ஒல்லாந்தரால் உருவாக்கப்பட்ட மட்டக்களப்புச் சட்டம் "முக்குவச் சட்டம்" என அழைக்கப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அண்மையில் பேராசிரியர் செ.கிருஷ்ணராஜா எழுதிய "இலங்கை வரலாறு," பாகம்–II இல் (பக். 261) "கி.மு.3500 ஆண்டுகளுக்கு முன்னர் பபிலோனிய நாகரிகத்தில் ஹமுராபி என்ற மன்னன் முதன்முதலாக மக்களுடைய இலகுவான வாழ்க்கை முறையைக் கருத்தில் கொண்டு சட்டக்கோவை ஒன்றினை உருவாக்கியமை போன்று, ஒல்லாந்தர் ஆட்சிக்கால இலங்கையிலும் மக்களுடைய மரபுகள், சம்பிரதாயங்கள், பழக்கவழக்க வரன்முறைகள் போன்றவற்றை அடிப்படையாகக் கொண்டு, "சட்டக் கோவை" (Code of Law) ஆக்கப்பட்டது. அச்சட்டக் கோவை கள் யாழ்ப்பாண வழக்கில் "தேச வழமை" எனவும், மட்டக் களப்பில் "முக்குவச் சட்டம்" எனவும், மலைநாட்டில் "கண்டியர் சட்டம்" எனவும், இலங்கையில் வாழும் முஸ்லிம்கள் மத்தியில் "முகமதியர் சட்டம்" எனவும் வழங்கப் பெறுவதனைக் காண்கின்றோம்" எனக் குறிப்பிடுகின்றார்.

இதனை மட்டக்களப்பு எழுத்தாளர்கள் சிலர் முக்குவச் சட்டம் அக்குலத்தவர்களுக்கே சொந்தமான சட்டம் என்ற வகையில் எழுதிவருவது நகைப்பிற்குரியதாகும். முக்குவர் பெரும்பான்மையினராகக் காணப்பட்டமையினால், அவர்களின் மரபுகளையும், சம்பிரதாயங்களையும் பெருமளவுக்கு உள்வாங்கி ஒல்லாந்தரால் உருவாக்கப்பட்டதே மட்டக்களப்புக்கு உரிய சட்டமாகும்.

எனவே சான்றார் குலத்தவர்கள் முக்குவ சமூகத்தவரால் இலங்கைக்குக் கொண்டுவரப்படவில்லை என்பதும், காலத்திற்குக்காலம் இலங்கை மீது மேற்கொள்ளப்பட்ட சோழப் படையெடுப்புகள் மூலமே சான்றார் குலத்தவர்கள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மட்டக்களப்புக்கு வந்துள்ளனர் என்பதும் மேற்கூறப்பட்ட ஆய்வுகளின் மூலம் உறுதியாகத் தெரிகிறது.

16.11.1969 இல் வரலாற்று ஆய்வாளர் கலாநிதி இந்திரபாலா அவர்கள் எழுதிய கட்டுரையொன்றில் "சோழர் ஆட்சிக் காலத்திலேயே சான்றார் குலத்தவர்கள் அதிகளவில் இலங்கைக்கு வந்துள்ளனர். கி.பி 993 இல் முதலாம் இராஜராஜசோழன் இலங்கையைப் பிடித்தபோது சோழப் படைகளில் பிரதான படைத்தளபதிகளாகவும், போர்வீரர் களாகவும் வந்த சான்றார் குலத்தவர்கள் இலங்கையில் குடியேறினர். ஆரம்பத்தில் திருக்கேதிச்சரத்திலும், அனுராத புரத்திலும்; பொலநறுவையிலும் வேளாளரும், சான்றாரும் ஆட்சியாளராக நியமிக்கப்பட்டனர். பொலநறுவையில் முதக்கரை நாடாள்வான், முகரிநாடாள்வான் ஆகிய இருவரும் நியமிக்கப்பட்டனர். அனுராதபுரத்தில் ஐயமுரி நாடாள்வார் நியமிக்கப்பட்டார்" என எழுதப்பட்டுள்ளது.

இக்கருத்தை நாம் ஏற்றுக்கொள்ள முடியும். எடுத்துக் காட்டாக மட்டக்களப்பு, அம்பாறை பிரதேசங்களில் வாழும் சான்றார் குலத்தவர்களிடையே 8 குடிகள் காணப்படுகின்றன. அவற்றுள் ஆண்வழிக் குடிகள் அனைத்தும் "பணிக்கன்" குடிகளாக உள்ளன. பன்னெடுங்காலமாக இவ்வாறே அழைக்கப்பட்டு வந்துள்ளது.

பணிக்கன் என்ற சொல்லுக்கு "படைக்கலம் பயிற்று வோன்", "யானையை அடக்கி கட்டுப்படுத்துபவன்" எனப் பொருள் கொள்ளப்படுகின்றது. (கழகத் தமிழ் கையகராதி, பக்.249.) எனவே இவர்கள் படைத் தளபதிகளாக, வீரர்களாக இலங்கைக்கு வந்திருக்கலாம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

1997 – ஆம் ஆண்டு திரு. லயனல் சரத் அவர்களால் சிங்கள தமிழ் மொழிகளில் எழுதப்பட்ட "புராதன இலங்கையின் தமிழ் சிங்கள உறவுகள்" எனும் நூலில் (பக்.47) தமிழ் மக்களின் குடியேற்றங்கள் இலங்கையில் ஏற்பட்ட விதங்களைக் கூறுகின்றார். அதில் அவர் "கிறிஸ்துவுக்கு முன்னர் இரண்டாம் நூற்றாண்டில், அதாவது இற்றைக்கு இரண்டாயிரத்து நூறு ஆண்டுகளுக்கு முன்னர், பிராமி எழுத்துகளால் பொறிக்கப்பட்ட சிலாசாசனம் வாயிலாக அனுராதபுரி இராச்சியத்தின் வடக்கே அமைந்துள்ள பிரதேசத்தில் (வவுனியா மாவட்டத்தில்) தமிழ் மக்கள் குடியேற்றங்களை அமைத்திருந்தமை பற்றி அறிய முடிகின்றது. வெளிநாட்டு ஆக்கிரமிப்பாளர்களால் மட்டுமன்றி, உள்நாட்டு அரச வம்சங்களாலும் படிப்படியாக வரவழைக்கப்பட்ட தமிழ்ப் படைவீரர்களே இலங்கையின் வடக்கே தமிழர்கள் பெரும்பான்மையாக குடியேற்றங்களை அமைக்கக் காரணியாய் அமைந்ததென்பதும், ஆரம்ப காலந்தொட்டே சிங்கள மக்களும் இங்கு வசித்து வந்துள்ளனரென்பதும் நன்கு புலனாகின்றது" எனக் குறிப்பிட்டுள்ளார்.

இவ்விடயங்களிலிருந்து எமக்குத் தெரியவருவது யாதெனில் இலங்கையில் தமிழர்களின் வரவு படையெடுப்புகள் மூலமே நிகழ்ந்துள்ளது என்பதாகும். இந்த வகையில் சான்றார் குலத்தவர்களும் படையெடுப்புகள் மூலமே இங்கு வந்துள்ளனர் எனலாம்.

"தமிழருள் மறைந்த அரச குலம்" (பக். 103) நூலில் "மட்டக்களப்புப் பகுதியிலுள்ள சான்றார் சோழர் காலத்தில் (கி.பி 11ஆம் நூற்றாண்டின் முற்பகுதி) பொலநறுவையைச்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சுற்றி போர்வீரர்களாக குடியமர்த்தப்பட்டவர்களாவர். சோழப் படையினருக்கும் சிங்களவர்களுக்கும் நடந்த போராட்டங்களில் சான்றார்களில் பலர் மடிந்தனர். எஞ்சியோர் மட்டக்களப்பைச் சுற்றி மறைந்து வாழ்ந்தனர். காலப் போக்கில் இவர்கள் சிங்களப் படையில் சேவை செய்யத் தொடங்கியதால் அம்பாறைப் பகுதியில் குடியேற்றப்பட்டனர். கல்முனை, கல்லாறு, அக்கரைப்பற்று, பாண்டிருப்பு, சாய்ந்தமருது, மகளூர், எருவில், வாழைச்சேனை, வந்தாறு மூலை, ஆறுமுகத்தான் குடியிருப்பு போன்ற பகுதிகளில் குடியேற்றப்பட்டனர். இவர்கள் சிங்கள அரசர்களுக்கு சேனாதிபதிகளாகவும், போர்வீரர்களாகவும் கடமையாற்றினர். இவர்கள் சிங்களப் பகுதிகளில் வாழ்ந்ததால் போர்த்துக்கேய, ஒல்லாந்தர் காலப் பகுதிகளில் மட்டக்களப்பிலிருந்த முக்குவச் சட்டங்கள் இவர்களைப் பாதிக்கவில்லை. கிழக்கு மாகாணத்தில் பல ஊர்களில் காணப்படும் சான்றார் குல மக்கள் அம்பாறைப் பகுதியிலிருந்தே குடியெழும்பிச் சென்றதாகக் கூறுகின்றனர். அதனால் சிங்கள அரசர்களுக்கு சேவை செய்தமை நிரூபிக்கப்படுகின்றது" என குறிப்பிடப்பட்டுள்ளது.

"மாகோன் வரலாறு" எனும் நூலில் வரலாற்றாசிரியர் செல்வி.க. தங்கேஸ்வரி குறிப்பிடும்போது, "மட்டக்களப்பில் வாழும் சாதிகளின் குடிவழிகள் எவரும் திணித்ததன்று. அவை அவற்றின் இயற்கையான தலைமைத்துவங்களினால் ஏற்பட்டதாகும்" எனக் கூறுகின்றார்.

அண்மைக் காலத்தில் (2011 – இல்) வெல்லவூர்க் கோபால் அவர்கள் "மட்டக்களப்பு வரலாறு ஓர் அறிமுகம்" (பக்.178) என்ற நூலில் "மட்டக்களப்புப் பிரதேசத்தில்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வாழும் பாரம்பரியமிக்க ஒரு சமூகமாகவே சாணார் அடையாளப்படுத்தப்படுகின்றனர். சாணாரே "சாண்டார்" எனப்பட்டனர்.

பண்டைய தமிழக வரலாறுகளில் ஈழவர், சாணார், நாடார், கிராமணி என்போர் ஒரே தொழில் பிரிவினராகவே அடையாளப்படுத்தப் படுகின்றனர். தமிழகத்தில் அன்றைய ஆட்சி நிருவாகத்தில் சான்றாரும் பங்கெடுத்தமைக்கு வரலாற்று ரீதியான சான்றுகள் உள்ளன. அக்காலத்தே இவர்கள் சத்திரியப் பள்ளிகளை (போர்ப் பயிற்சிப் பள்ளிகள்) நிறுவி கல்வி புகட்டியதாக "தேர்ஸ்டன்" சான்றளிக்கின்றார். இம்மக்கள் இங்கு குடியேறிய காலமாக கி.பி.11 – ஆம் நூற்றாண்டின் முற்பகுதியைக் குறிப்பிடலாம்" எனக் குறிப்பிடுகின்றார்.

கிழக்கு மாகாண வரலாறு தொடர்பாக F.X.C.நடராசா அவர்கள் எழுதியுள்ள "மட்டக்களப்பு மான்மியம்" எனும் நூலிலும் ஒருசில தகவல்கள் ஏற்றுக்கொள்ளக் கூடியவாறு உள்ளன. அந்நூலில் கண்டியரசனான விமலதர்மன் (கி.பி. 1594) மலாய வீரர்களை அழைத்து, மட்டக்களப்பில் போர்த்துக்கேயரை அகற்றிவிட்டு காவல் வைத்தான். கண்டி ஆட்சியின் கீழ் மட்டக்களப்பைக் கொண்டுவந்தான்.

இந்தச் சம்பவங்களை அறிந்த யாழ்ப்பாணத்தில் ஒத்துக்குடா எனும் இடத்திலிருந்த நாடார்கள் (சான்றார்) கந்தப்பர் என்பவரிடம் எங்களையும், எங்கள் கண்ணகையம்மன் விக்கிரகங்களையும் மட்டக்களப்பில் கொண்டு குடியிருக்கும்படி வேண்டினர். கந்தப்பரும் அவர்களுடன் ஆலோசனை செய்து இனி யாழ்ப்பாணத்தில் தமிழ் விலகி கிறிஸ்தவமே பெருகிவரும் என நினைத்து

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மட்டக்களப்புக்குச் செல்லத் தீர்மானித்தார். கந்தப்பர் தனது மனைவி இறந்தபடியால், தனது மகளுடன் 7 நாடார்க் குடும்பங்களையும், 7 கண்ணகையம்மன் விக்கிரகங்களையும், 7 ஆலய ஊழிய கோவிலார்க் குடும்பங்களையும், 3 நம்பிக் குடும்பங்களையும் அவர்கள் வைர விக்கிரகத்தையும் தயார் செய்து, தனது 3 சகோதரிகளுடன் படகிலேறினார். அவர்கள் மட்டக்களப்பு மண்முனையில் வந்திறங்கினர்.

அக்காலத்தில் மட்டக்களப்பில் முக்குகர் ஆட்சி நடைபெற்றது. எனவே மண்முனையில் காலிங்க குலத்து "நிலைமை"யை (பிரதேச ஆட்சியாளர்) இவர்கள் கண்டு தாங்கள் வந்த நோக்கத்தைக் கூறினர். அவன் அவர்களுடைய வேண்டுகோளுக்கு ஒத்துக்கொண்டு, மண்முனைக்கருகே 7 கிராமங்கள் அமைத்து 7 கண்ணகையம்மன் விக்கிரகத்தையும் இருத்தி, பூசை புரிந்து வரும்படி 7 நாடாரையும் திட்டம் செய்து, கோவிலரை கண்ணகை அம்மனுக்கும் தனக்கும் ஊழியம் செய்யும்படி செய்து, நம்பி மூவரையும் கிராமத்திற்கு அருகே இருக்கச் செய்தான்.

எனினும் மட்டக்களப்புப் பகுதியொன்றின் பிரதேச ஆட்சியாளன் ஒருவன் (திக்கரன்) கண்டி மன்னன் விமலதர்மனுக்கு இவ்விடயத்தை கடிதம் மூலம் தெரியப் படுத்தினான்.

அக்கடிதத்தில் அவன் "யாழ்ப்பாணம் ஒத்துக்குடாவில் இருந்து ஒரு புத்திரியுடனும், சகோதரிகள் மூவருடனும், சில குடும்பங்களுடனும் கந்தப்பர் எனும் ஒருவர் வந்திருக்கிறார். அவர் 7 கிராமங்கள் அமைத்து 7 கண்ணகை அம்மன்கள் விக்கிரகங்களை அதிலிருத்தி 7 நாடார்க் குடும்பங்கள் பூசை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

புரிந்து வருகின்றார்கள். கந்தப்பர் எங்கள் உத்தரவில்லாமல் குடியேறியிருக்கின்றார். இவர் போர்த்துக்கேயருக்கு வேவுகாரன் போலிருக்கிறது" என எழுதி அனுப்பினான்.

விமலதர்மன் அக்கடிதத்தை வாசித்து எங்கள் உத்தர வில்லாமல் வந்தேறிய கந்தப்பனையும், அவன் சகோதரிகள் மூவரையும் களப்பில் தாட்டுக் கொல்லவும். அவன் புத்திரியை காலிங்க குலத்தவன் ஒருவனுக்கு மணம் செய்து வைக்கவும். 7 கண்ணகையம்மன் விக்கிரகங்களையும் மட்டக்களப்பு பிரதான ஊர்கள் ஆறில் வைக்கவும். இந்த இடத்தில் ஒரு விக்கிரகத்தை வைக்கவும். நாடாரே பூசகராக இருக்கவும். கோவிலரே ஆலய ஊழியர்களாக இருக்கவும் என விமலதர்மன் தனது உத்தரவை எழுதி அனுப்பினான்.

இக்கட்டளையின்படி படையாட்சி குலத்து திக்கரன் என்பவன் கந்தப்பனையும், சகோதரிகளையும் ஆற்றில் தாழ்த்திக் கொன்று, கங்குல் காலத்தில் அவர்களின் பிரேதங்களை எடுத்து கோவிலர்களைக் கொண்டு அடக்கம் செய்வித்தான். கந்தப்பரின் மகள் சங்குமுத்தை காலிங்க குல வில்லவனுக்கு மணம் செய்வித்தான். பின்பு 6 கண்ணகை யம்மன் விக்கிரகங்களையும் 6 ஊர்களிலுமிருத்தி, ஒரு விக்கிரகத்தை இருந்த இடத்திலுமிருத்தி நாடாரே பூசகராகவும், கோவிலரே ஊழியராகவும் திட்டம் செய்துவைத்தான். மத்திய நகரமாகிய கண்டிக்குப் போகவர ஒரு பாதையும் (அதர்) ஏற்படுத்தினான்." இவ்வாறு மட்டக்களப்பு மான்மியம் விவரித்துக் கூறுகின்றது.

செவிவழிக் கதைகளின் மூலமும், மட்டக்களப்பு மான்மியத்தின் மூலமும், கண்ணகி வழிபாட்டு முறைகளின்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மூலமும் ஆராய்ந்து பார்க்கும்போது கிழக்கு மாகாணத்திற்கு கண்ணகி வழிபாட்டைக் கொண்டுவந்தவர்கள் சான்றார் குலத்தவரே எனத் தெரிகிறது. மட்டக்களப்பு மான்மியமும் இதனை உறுதி செய்கின்றது. சான்றோரில் "பத்தினி நாச்சிக் குடி" என்பது எட்டுக் குடிகளிலும் ஒன்றாகவுள்ளது.

மட்டக்களப்பு மான்மியத்தின் கூற்றுப்படி, மட்டக் களப்பில் கண்ணகியம்மன் விக்கிரகங்கள் பிரதிஷ்டை செய்யப்பட்டு வழிபடப்பட்ட 7 கிராமங்களாக மண்முனை, எருவில், மகிளூர், செட்டிபாளையம், காரைதீவு, கல்முனை, பட்டித்திடல் ஆகியவை அடையாளப்படுத்தப்படுகின்றன. இப்பிரதேச கள ஆய்வுகளின்படி, மேலுள்ள கண்ணகியம்மன் ஆலயங்களின் பூசகர்களாக சான்றோர் குலத்தோரே (பத்தினி நாச்சிக்குடி) இருந்துள்ளனர். காலப்போக்கில் காலச்சூழ்நிலை, சமூக மாற்றங்களுக்கேற்ப தற்போது மாறுதல்கள் ஏற்பட்டுள்ளன.

எடுத்துக்காட்டாக, வெல்லவூர்க் கோபால் அவர்களின் "மட்டக்களப்பு வரலாறு ஓர் அறிமுகம்" (பக். 178–179) எனும் நூலில் "மட்டக்களப்பில் பண்டைய ஆட்சி முறையில் ஆதிக்கம் மிக்கதாக கருதப்படுவது எருவில் கிராமமாகும். வன்னிமை, நிலமை, உடையார் எனத் தொடர்புபட்ட தலைவர்களை இது தந்திருக்கின்றது. தாயூரான எருவிலும், மகளூரான மகிளூரும் ஒரே சிறப்பியல்புகளைக் கொண்டவை. இங்குள்ள புகழ்பெற்ற இரு கண்ணகையம்மன் ஆலயங்களிலும் முற்குகர் மற்றும் வேளாளர் கோவில் பங்காளிகளாக இருக்க சாணாரே பூசை செய்கின்ற குருமாராய் உள்ளனர். இவ்வுரிமைச் சிறப்பு 1807இல் எருவில் உடையாராகவிருந்த கோபிகுடி சின்னப்போடி உடையாராலும், பணிக்கனார் குடி காத்தமுத்து

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விதானையாராலும் இவர்களது ஊர்த் தொண்டினைச் சிறப்பித்து இம்மக்களுக்கு வழங்கப்பட்டடதென கள ஆய்வில் கூறப்பட்டாலும், சமூக ஆய்வு நோக்கில் இதனைப் பார்க்கும் போது மட்டக்களப்பில் சாதித் தெய்வக் கல்வெட்டில் "நாடார்க்குக் கண்ணகியாம்" எனும் பாடல் அடிகளின்படி நாடாரும், சான்றாரும் ஒரே சமூகமாக உள்ளமையால், சாணாருக்கும் கண்ணகியே குலதெய்வமாகக் கொள்ளப்படவும் அதன் பின்னணியாக பத்தினியாச்சிகுடியே பத்தினாச்சி குடியாக மருவி வரவும் காரணமுள்ளதை ஆய்வாளர்கள் ஏற்றுக்கொள்ளவே செய்வர்" எனக் கூறியுள்ளார்.

கல்முனை வரலாறுகளின்படியும் ஆரம்ப கண்ணகி யம்மன் ஆலயத்தில் சுமார் கி.பி.1900ஆம் ஆண்டுவரை சான்றார் குலத்தவர்களே உரித்துடையவர்களாக, பூசை களையும் செய்துவந்தனர். எனினும் இக்காலப்பகுதியில் ஏற்பட்ட முரண்பாடுகள் காரணமாக பிரிந்து சென்று கல்முனை 3, ஸ்ரீ கடற்கரை கண்ணகியம்மன் ஆலயத்தை அமைத்துத் தங்கள் குலதெய்வ வழிபாட்டைச் செய்து வருகின்றனர்.

முன்பு குறிப்பிடப்பட்ட மட்டக்களப்பு மான்மிய தகவல்களின்படி, காரைதீவு கண்ணகியம்மன் ஆலயமும் "கோவிலர்" குல மக்களால் சிறப்பாக வழிபாடுகள் இயற்றப்படுகின்றன. அவர்கள் தங்கள் தனித்துவத்தையும், பாரம்பரியத்தையும் பேணி வருகின்றனர். இம்மக்களுக்கும் தங்களுக்கும் நெருங்கிய தொடர்பிருப்பதாக சான்றார் குல மக்கள் பொதுவாகக் கூறுகின்றனர். கல்லாறு, பெரிய நீலாவணை போன்ற கிராமங்களின் சான்றார் குலத்தவர்கள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தங்களை "கோவிலார்" என்றே குறிப்பிடுகின்றனர். இத்தொடர்பு ஆழமாக ஆய்வு செய்யப்பட வேண்டிய தொன்றாகும்.

கிழக்கு மாகாணத்தில் தற்காலத்தில் பதினான்கு கிராமங்களில் சான்றார் குலத்தவர்கள் வாழ்கின்றனர். களஆய்வுகளின்போது கடந்த பலநூறு வருடங்களாக இவர்கள் பிரதானமாக வேளாண்மை, சித்த வைத்தியம், வியாபாரம், ஆலய பூசகர், அரச தொழில் போன்ற தொழில் களைச் செய்து வந்துள்ளனர். தற்போதைய நிலவரங் களின்படி, கல்வி வளர்ச்சி சிறப்பாக ஏற்பட்டுள்ளது. பொருளாதாரத்தில் குறிப்பிடத்தக்க முன்னேற்றம் கண்டுள்ளனர். இதனால் இவர்களிடையே அரச உத்தியோகம் செய்வோர் கூடுதலாக உள்ளனர். அத்துடன் வேளாண்மை, வியாபாரம், கைத்தொழில்கள், அந்நியச் செலாவணி ஈட்டல் போன்ற தொழில்களையும் செய்து வருகின்றனர். தங்களுடைய பாரம்பரியங்களையும், மரபுகளையும், கலை, கலாசாரங்களையும் பேணிவருகின்றனர்.

இனி யாழ்ப்பாணத்தில் சான்றாரின் வரவைப் பார்த்தால், வண.ஞானப்பிரகாச அடிகள் எழுதிய "யாழ்ப்பாண வைபவ விமர்சனம்" எனும் நூலில் "யாழ்ப் பாணத்தில் வழங்கினவாகத் தோன்றும் வராக உருவம் தாங்கிய "வராகன்கள்", கப்பற் சித்திரமுடைய "சாண்டார் காசு" ஆகிய மாத்திரமன்றி, உரோமரின் பொன், வெள்ளி நாணயங்கள் தாமும் யாழ்ப்பாணத்தில் வெவ்வேறு இடங்களில் பழம்புதையலாய் கண்டெடுக்கப்பட்டு வருகின்றன" எனக் குறிப்பிடப்பட்டுள்ளது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யாழ்ப்பாண வரலாறு கூறும் நூல்கள் பலவற்றில் யாழ்ப்பாண ஆரியச் சக்கரவர்த்திகளுக்கு சான்றார் குலத்தவர்கள் மெய்ப்பாதுகாவலர்களாக இருந்துள்ளனர். யாழ்ப்பாண அரசை ஆதரித்தமைக்காக அவர்கள் ஆட்சியைக் கைப்பற்றிய காலங்களில் ஊர்த்தலைவர் பதவியாகிய 'தளையர் பதவி' சான்றாருக்கு வழங்கப்பட்டது. அதனாலேயே இவர்கள் "தளையர் பகுதி" என யாழ்ப்பாணத்தில் அழைக்கப்படுகின்றனர். கலாநிதி S. பத்மநாதன் அவர்கள் தனது "வன்னியர்" (பக். 77, 102.) எனும் நூலில் "தளையர் (தலையாரி / தலைவர்) என்போர் ஊர்த் தலைவர்களாக இருந்தனர். இது படைத் தலைவர்களையும் குறிக்கும்" எனக் குறிப்பிட்டுள்ளார்.

'பல்லவரையன்' என்ற பட்டம் வேளாளருக்கு மட்டுமன்றி சான்றார் குலத்தவருக்கும் உரியதாக இருந்ததென்பது இலங்கையின் யாழ்ப்பாணப் பகுதி வரலாற்றால் தெரிய வருகின்றது. அது மட்டுமன்றி 'அதிகாரி' என்ற பதவியை பரம்பரையாக அனுபவித்துவந்த சாதியினராக சான்றார், வேளாளர், தனக்காரர் ஆகிய 3 சாதியினரை அறிஞர்கள் அடையாளம் கண்டுள்ளனர். (யாழ்ப்பாண இராச்சியம், பக்.119, கலாநிதி சி.க.சிற்றம்பலம்.) இவை சோழராட்சியின் பிற்கால எச்சங்களாகும்.

திரு. கொடித்துர் இராசரெத்தினம் அவர்கள் எழுதிய தமிழருள் மறைந்த அரசகுலம் (பக். 97, 98, 99) எனும் நூலில் மேற்கூறப்பட்டுள்ள விடயங்களோடு, பின்வரும் விவரங்களும் குறிப்பிடப்பட்டுள்ளன. அதாவது வன்னிப் பகுதியில் முக்கியமாக வன்னியர், கரையார், முக்குவர், கம்மாளர் காணப்பட்டனர். வன்னியர் ஓமந்தை, பூநகரி,

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திருகோணமலை, துணுக்காய் போன்ற பகுதிகளை ஆட்சி செய்தனர். முக்குவர் மட்டக்களப்பை ஆட்சி செய்தனர். கரையார் முல்லைத்தீவுப் பகுதியை ஆட்சி செய்தனர். கம்மாளர் திருக்கேதிஸ்வரத்தின் சிற்றரசர்களாக நியமிக்கப் பட்டனர். இதில் கம்மாளர் தவிர ஏனைய அனைவரும் தம்மை "வன்னியர்" என அழைத்துக் கொண்டனர்.

மேற்கூறப்பட்ட வன்னியர் விஜயநகர அரசர்களால் வன்னியில் குடியேற்றப்பட்டனர். யாழ்ப்பாண அரசை விஜயநகர மன்னன் கைப்பற்றியதும் வலங்கையினரான வேளாளரும், சான்றாரும் விஜயநகர மன்னர்களுக்கு ஆதரவு கொடுக்கவில்லை. இவ்வலங்கையினரின் ஒற்றுமையை முறியடிக்கவே கி.பி *1420*-இல் விஜயநகர அரசனால் மேற்குறிப்பிடப்பட்ட வன்னிப் பிரிவினருக்கு அதிகாரங்கள் வழங்கப்பட்டன. இக்காலப்பகுதியிலேயே சான்றாரின் பலக்கோட்டையாகிய "அடங்காப்பற்று" வன்னியரால் கைப்பற்றப்பட்டது. "யாழ்ப்பாண வையாபாடல்" நூலில் "சோழ அரசர்களால் அடங்காப்பற்று சிங்களவரிடமிருந்து கைப்பற்றப்பட்டு, சான்றார்களிடம் ஒப்படைக்கப்பட்டது" எனக் குறிப்பிடப்பட்டுள்ளது.

வன்னியர் ஆட்சியில் சான்றார் பெருமளவு பாதிக்கப் பட்டனர். இவர்கள் ஓதியாமலை, கற்குளம், பட்டிக் குடியிருப்பு போன்ற இடங்களில் குடியேறினர். அவர்கள் போர்களினாலும், கொள்ளை நோய்களினாலும், யாழ்ப் பாணத்திற்குக் குடிபெயர்ந்தமையாலும் தொகையில் குறைந்து விட்டனர். கற்கடந்த குளத்தில் (முருங்கன்) சான்றார்கள் மட்டுமே காணப்படுகின்றனர். இங்குச் சான்றார்களுக்கு ஏராளமான நிலபுலன்கள் உள்ளன.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மாதோட்டத்தில் மற்றைய கிராமங்களைவிட பொருளாதார நிலையில் முன்னேற்றமடைந்துள்ளனர். இவ்வாறு 1973ஆம் ஆண்டு தனது நூலில் திரு.கொடித்தூர் இராசரெத்தினம் அவர்கள் எழுதியுள்ளார்.

திரு.கே.வேலுப்பிள்ளை அவர்கள் எழுதிய "யாழ்ப்பாண வைபவ கௌமுதி" (பக்.75) எனும் நூலில் "யாழ்ப்பாண அரசர் காலத்தில் வேளாளர், சான்றார், தனக்காரர் என்போர் மற்றைய சாதியினரைவிட உயர்ந்தவர்களாக இருந்தனர். இவர்களுக்கே கிராமங்களை ஆள உரிமையளிக்கப்பட்டது. சான்றார் படைகளுக்கும், வேளாளர் நிருவாகத்திற்கும், தனக்காரர் நிதிக்கும் பொறுப்பாக இருந்தனர்" என எழுதப்பட்டுள்ளது.

யாழ்ப்பாண கௌமுதி குறிப்பிடும் "தேச வழமைச் சட்டம்" விளக்கத்தின்படி பின்வருமாறு சமூக வகுப்புகள் பிரிக்கப்பட்டிருந்தன.

| | |
|---|---|
| முதலாம் பிரிவு: | வேளாளர், சான்றார், தனக்காரர் |
| இரண்டாம் பிரிவு: | பரதேசிகள், மடப்பள்ளி, மலையாளி |
| மூன்றாம் பிரிவு: | மீனவர், பரவர், திமிலர், சோனகர், செட்டி, மறவர், சாயக்காரர், கன்னார் |
| நான்காம் பிரிவு: | நளவர், பள்ளர், துரும்பர், ஏனையோர் |

திரு.கொடித்தூர் இராசரெட்ணம் அவர்கள் தனது 'தமிழருள் மறைந்த அரச குலம்' நூலில் கூறும்போது "யாழ்ப்பாண குடா நாட்டிலுள்ள சான்றார் தமிழ் அரசர்களின் போர்வீரர்களாக கடமையாற்றினர். இவர்கள் பண்டைத்தரிப்பு, ஆனைக்கோட்டை, வல்வெட்டித்துறை,

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பளை, கிளாலி, இயக்கச்சி, மிருசுவில், கொடிகாமம், கச்சாய், மன்னன்குறிச்சி, சோழன்பற்று, அரசர்கேணி, வண்ணார்பண்ணை, சங்கானை, தொண்டமனாறு, நவாலி போன்ற இடங்களில் குடியமர்த்தப்பட்டனர். சிங்களப் பகுதிகளில் குடியமர்த்தப்பட்ட சான்றார் 'துராவ' எனும் பெயருடன் சிங்கள மக்களுடன் ஒன்றித்து விட்டனர்" எனக் குறிப்பிடுகின்றார்.

திரு.டி.இராமநாதன் அவர்கள் எழுதிய 'யாழ்ப்பாண சட்டங்களும் மரபுகளும்' எனும் நூலில் "யாழ்ப்பாணத்தில் வேளாளரும், சான்றார்களும் சமமாகவும், ஒற்றுமையாகவும் வாழ்ந்தனர். ஆனால் பிற்காலங்களில் சான்றார் போர்வீரர் களாக இருந்த காரணத்தினால் எண்ணிக்கையில் குறைந்த துடன், போர் அடிமைகளாக்கப்பட்டு பலவீனப்பட்டுப் போயினர். ஒல்லாந்தர் காலத்தில் இச்சான்றார் 'சாண்டார் வெலெபேட்றே' (வேலைப்பற்று) என அழைக்கப்பட்டனர். தங்கள் செல்வாக்கு மங்கியதும் பல கிராமங்களிலுமிருந்த சான்றார் குல மக்கள் தங்களை 'வேளாளர்' என அழைக்கத் தொடங்கினர். இதனால் சான்றார் குலம் மேலும் பலவீனப்பட்டுப்போனது" என விவரிக்கின்றார்.

ஆய்வாளர் H.W.தம்பையா தனது "யாழ்ப்பாணத் தமிழர்களின் சட்டங்களும் பழக்க வழக்கங்களும்" நூலில் "ஆங்கிலேயர்களுக்குக் கீழ் போர் அடிமைகளான சான்றார் களுக்கும் சுதந்திரமளிக்கப்பட்டது" என எழுதியுள்ளார். அடுத்து, சிங்கள மக்களுடன் சான்றார் குல மக்கள் கலந்துகொண்டமைக்கான ஆதாரங்களைப் பார்க்கலாம். வரலாற்று ஆய்வாளர் திரு. இரால்ப் பீரீஸ் அவர்கள் தனது "சிங்கள சமூகப் பழக்கவழக்கங்கள்" (பக். 191) எனும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நூலில் எழுதும்போது "பழைய சிங்கள நூல்களில் 'துராவ' எனப்படும் சாதியினர் 'சாண்டாஸ்' எனப்பட்டனர் எனக் குறிப்பிட்டுள்ளார்.

திரு.M.D. இராகவன் அவர்கள் தான் எழுதிய "இலங்கைக் கரையார்" (பக். 192) எனும் நூலில் "சிங்கள துராவ இனத்தவனான சாண்டான் தனது பெயருக்குப் பின்னால் 'சாண்டான்' எனப் பெயரிடுவதை அக்காலத்தில் விரும்பினான். இதற்கு ஆதாரமாக 'சமரவீர சான்றார்' என காணித்தோம்பில் பதியப்பட்டிருப்பதை ஆதாரம் காட்ட முடியும்" என எழுதியுள்ளார்.

இலங்கையின் பூர்வீகம் மூன்று இன மக்களிலிருந்து ஏற்பட்டதாகும். 1. ஈழவர் 2. நாகர் 3. இயக்கர் எனும் இனத்தவர்களின் சந்ததியினரே பூர்வீக இலங்கைக் குடிகளாவர். ஈழவர் 'எலு' என்னும் திராவிட மொழியைப் பேசினர். இலங்கையில் ஈழவர் பெரும்பான்மையினராகக் காணப்பட்டமையினால், இது 'ஈழ நாடு' என அழைக்கப் பட்டது. புத்த மதத்தைத் தழுவிய தென்பகுதி ஈழவர் தங்கள் மொழியில் அதிகமான பாளி, சமஸ்கிருத சொற்களைச் சேர்த்தமையால், "சிங்களம்" (சிங்கலு) எனும் புதிய மொழி ஏற்பட்டது. மக்களும் "சிங்களவர்" என அழைக்கப்பட்டனர். சேர, சோழ, மன்னர்களால் மலையாளத்தில் அடிமைகளாகக் குடியேற்றப்பட்ட ஈழவர், தாங்கள் இலங்கையிலிருந்து வந்ததாக விருப்பத்துடன் வாதாடுகின்றனர். இவர்கள் தங்களை 'சாணார்' என்பதில் பெருமையடைகின்றனர். சான்றார் குலத்தவர்களுக்குள் "ஈழச் சான்றார்" பிரிவு முக்கியமானது என்பது குறிப்பிடத்தக்கது.

*(தமிழருள் மறைந்த அரச குலம், பக். 165, 166)*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 10. சான்றார் நாணயங்கள் தொடர்பான சான்றுகள்

சான்றார் குல ஆட்சியாளர்களின் ஆட்சிக் காலங்களில் பொன்னாலும் செம்பாலும் செய்யப்பட்ட நாணயங்கள் புழக்கத்தில் இருந்துள்ளன. அவற்றுள் சில தற்காலங்களிலும் சிலரிடம் இருப்பதாக கூறப்படுகின்றது. இந்தியாவில் நுண்பொருட்காட்சி சாலைகளில் இந்நாணயங்கள் வைக்கப்பட்டுள்ளன. இவை ஆய்வாளர்களாலும், வரலாற்று ஆசிரியர்களாலும், சாதாரண மக்களாலும் கூட 'சான்றார் காசு' 'சாண்டார் காசு', 'சாணார் காசு' என அழைக்கப்படுகின்றன. நாணயங்கள் வெளியிடும் உரிமை பண்டைக்காலம் தொட்டு நாட்டை ஆளுபவர்களுக்கே உரியதாக இருந்து வந்துள்ளது என்பது இங்குக் குறிப்பிடத்தக்கதாகும்.

"பத்துப் பொன் கொண்டது ஒரு கழஞ்சு அல்லது பத்துக் காணம் கொண்டது ஒரு கழஞ்சு. ஒரு பொன் ஒரு காணம் எனப்படும். 'சான்றார் காசு' என்பது சுத்தமான தங்கக் காசு. இது சிற்சில இடங்களில் சில தனி நபர்களிடம் உள்ளது. திருவனந்தபுரம், சென்னை மியூசியங்களில் இது உள்ளது" என "சான்றோர் வரலாறு" (பக். 91) நூலில் கூறப்பட்டுள்ளது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

*04.10.1966* ஆம் தேதி வெளியான "ஆனந்த விகடன்" சஞ்சிகை (பக். *61*) இல் "காசு பேசுகிறது" என்ற தலையங்கத்தின் கீழ் 'சாணார் காசு' என்பது வராகன், கழஞ்சு என்று வழங்கி வந்த பொற்காசுகளைப்போல இதுவும் ஒரு பொற்காசின் பெயர்" என விவரிக்கப்பட்டுள்ளது.

வண. ஞானப்பிரகாச அடிகளாரால் எழுதப்பட்ட "யாழ்ப்பாண வைபவ விமர்சனம்" (பக். *97*) நூலில் அவர் "சான்றார் குலம் அரசகுலத் தலைவர்களாக விளங்கியமையால் அவர்களுக்குரிய நாணயங்கள் தங்கக் காசு, செப்புக் காசுகளாகக் காணப்பட்டன. இவை நமது காலத்து சதமும், அரைச் சதமும் போன்ற அளவில் உள்ளன. கப்பற் சித்திரமுடைய 'சாண்டான் காசு' ஆகிய மாத்திரமன்று, உரோமரின் பொன், வெள்ளி நாணயங்கள்தாமும் யாழ்ப்பாணத்தின் பல்வேறு இடங்களில் பழம் புதையலாய் கண்டெடுக்கப்பட்டு வருகின்றமையை நோக்குக" என எழுதியுள்ளார்.

யாழ்ப்பாண வைபவ கௌமுதியில் "சாணார் காசு எனப் பெரிய நாணயம் பண்டைய யாழ்ப்பாணத்தில் வழங்கப்பட்டிருந்தது" என உள்ளது.

திரு.எஸ்.இராமச்சந்திரன் அவர்கள் தனது 'வலங்கை மாலையும் சான்றோர் சமூகச் செப்பேடுகளும்' என்ற நூலில் "வலங்கைத் தலைவர்களில் ஒருவரான வீரசோழ நாடான் "சாணான் காசு" எனும் பொற்காசு அடித்துப் புழக்கத்தில் விடுகின்றான். நெல்லை, தூத்துக்குடி, கன்னியாகுமரி மாவட்டங்களில் பாடப்பட்டு வந்த வெங்கலராசன் வில்லுப் பாட்டு மற்றும் கல்வெட்டுகளாலும் "சான்றார் காசு" பற்றி தெரியவருகின்றது எனக் கூறுகின்றார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பர்மா, இந்தியா போன்ற நாடுகளின் வரலாறுகளை ஆராய்ச்சி செய்த வரலாற்றாய்வாளர்கள் சேர். ஆதர் பிளைரி (Sir. Arther Playre) அவர்களும், சேர். வோல்டர் எலியட் (Sir. Walter Elliot) அவர்களும் ஆராய்ச்சி செய்து எழுதிய கட்டுரைகளில் "கி.பி.8ஆம் நூற்றாண்டின் பிற்பகுதியில் தமிழ் தேசத்திலிருந்து சான்றோர் குலத்தவர் எழும்பி (Tsandra dynasty, Chandra dynasty, Chandra race) சான்றார் ராஜ வம்சம் அல்லது சான்றார் குலம் என்ற பெயருடன், இந்து சீன தேச 'அரகன்' எனும் நாட்டில் 'வேதாளி' எனும் இடத்தை தலைநகராக்கி (கி.பி.788 – 957) வரை அரசாண்டார்கள் எனவும், அக்காலத்தில் அவர்கள் அவ்விடத்தில் சைவசமய அடையாளங்களுடன் வெளியிட்ட காசுகள், அதே காலத்தில் தமிழ் தேசத்தில் ஆட்சி செய்த சோழ அரசர்களின் காசுகளுடன் ஒத்திருக்கின்றன எனவும் குறிப்பிட்டுள்ளார்கள். (தமிழருள் மறைந்த அரசகுலம், பக். 55.)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 11. சான்றார் குலத்தினரின் உட்பிரிவுகள்

கி.பி.1750ஆம் ஆண்டைச் சேர்ந்த கல்வெட்டு ஒன்றில் சான்றார் சமூகத்தின் 5 உட்பிரிவுகள் பற்றி குறிப்பிடப் பட்டுள்ளது. அப்பிரிவுகளாவன, 1. நிலைமைக்கார சான்றார் (சிற்றரசர் பிரிவினர்) 2. முக்கந்த சான்றார் (குடியிருப்பு தலைவர் பிரிவினர்) 3. வினையிடை நின்ற சான்றார் (நடுவர் பதவி வகித்த பிரிவினர்) 4. செருகுடிச் சான்றார் (வலங்கைப் பிரிவினர்) 5. கள்ளச் சான்றார் (அகமுடையார் கலந்தவர்கள்)

இக்கல்வெட்டு இந்தியாவின் தூத்துக்குடி மாவட்டம் குலசேகரன்பட்டினத்தில் உதயமார்த்தாண்ட விநாயகர் கோவிலில் நிறுத்தப்பட்டுள்ள கல்தூண் ஒன்றில் பொறிக்கப் பட்டுள்ளது.

சான்றார் குலத்தில் "பேரறமுடையார்", "அடக்கமுடையார்" என்ற இரு பிரிவுகள் உள்ளன என்று திருமுருகன் பூண்டி சான்றார் மடத்துப் பட்டயம் குறிப்பிடுகின்றது.

"பேரறமுடையார்" என்ற பிரிவில் ஏனாதி, பணிக்கன் (படைத்தலைவன்), எழுநூற்றுவர், வலங்கை உய்யக்கொண்டார்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

போன்ற பிரிவுகள் இருந்தன. இவர்கள் போர் நடவடிக்கைகள் தொடர்பான விடயங்களில் ஈடுபட்டனர். தற்போதும் சான்றார் குடிவழிகளில் "பணிக்கன்" என்ற சொல் ஆண் வழிக் குடிகள் அனைத்திற்கும் உள்ளது. "பணிக்கன்" என்ற சொல்லாட்சி வேம்பத்தூரரார் திருவிளையாடற் புராணத்தில் அங்கம் வெட்டிய திருவிளையாடலில் சான்றார் குல போர்ப் பயிற்சியாளனைக் குறிக்கப் பயன்படுத்தப்பட்டது.

"அடக்கமுடையார்" பிரிவில் முந்நூற்றுவர், முழிக்களச் சான்றார் (சத்திரிய சபை), ஒழுக்கவிச் சான்றார், தலைவாய்ச் சான்றார், (நீர்நிலைகளின் நிருவாகம்), இடைச் சான்றார் (நீதி நிருவாகம்) போன்றோர் இருந்தனர். இவர்கள் அரச நிருவாகம் தொடர்பானவர்களாக இருந்தனர்.

சான்றார் பிரிவுகளில் "கிராமணி" என்பதும் ஒன்றாகும். கிராமத் தலைவன் அல்லது கிராம மணியம் என்று பொருள்படும் "கிராமணி" என்ற சொல் பிராகிருத மொழியில் "காமணி" என வழங்கப்பட்டது. பௌத்த சமய நூல்களில் "அசாரோக காமணி" (குதிரையில் சவாரி செய்யும் கிராமணி), "ஹத்தாரோக காமணி" (யானைமேல் சவாரி செய்யும் கிராமணி), "யோதஜீவ காமணி" (போரிடுவதன் மூலம் பிழைக்கும் கிராமணி), "வைசிய காமணி" (வணிக மற்றும் விவசாயத்தைத், தொழிலாகக் கொண்ட கிராமணி) என்ற பல பிரிவுகள் குறிப்பிடப்படுகின்றன.

இலங்கை வரலாற்றில் "வட்டகாமினி" "துட்டகாமினி" என்ற அரசர்கள் ஆட்சி செய்ததாக மகாவம்சம் குறிப்பிடுகின்றது. தற்போதும் இலங்கையிலுள்ள சிங்கள பௌத்தர்களிடையே உள்ள சாதியமைப்பில் சத்திரியர்களே உயர்வானவர்களாகக்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கருதப்படுகின்றனர். அவர்களுக்குள்ளும் "காமினி" என்ற குலப் பட்டப்பெயர் கொண்டவர்கள் உயர் அடுக்கில் இடம் பெற்றுள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கதாகும்.

இந்தியாவிலுள்ள தொண்டை நாடு சான்றார்க்கு உரியதாகும். இங்கு இவர்கள் "கிராமணிகள்" என்ற பெயரில் வாழ்கின்றனர். கி.பி.1819இல் சென்னை கலெக்டர் "பிரான்சிஸ் வைட் எல்லிஸ்" எனும் ஆங்கிலேயர் இதனை "ஜெயம் கொண்ட தொண்டிய சாணார் நாடு" எனக் குறிப்பிட்டார். (எல்லிஸ் கல்வெட்டு) "தொண்டை நாடு சான்றோர் உடைத்து" என்பது இந்தியாவிலுள்ள ஒரு பழமொழி என்பது குறிப்பிடத்தக்கது.

"பார்ப்பர சான்றார்" என கி.பி 13ஆம் நூற்றாண்டு வரையிலும் அழைக்கப்பட்ட ஒரு பிரிவினர் "அரசர்களின் குலகுரு" போன்ற தமது தன்மையால் பிராமணருக்கு சமமாகக் கருதப்பட்டனர். ஆயுத பூசையை பரம்பரை உரிமையாகப் பெற்ற இவர்கள் உண்மையில் பிராமணரல்லர். சத்திரியர்களாவர்.

இவர்கள் விஜயதசமி தினத்தில் தங்கள் ஆயுதங்களை அலங்கரித்து, பட்டாடை மலர் மாலைகள் சூட்டி வழிபட்டனர். நவராத்திரிக் காலம் முடிந்த பின்னர் வரும் தசமி திதியை "விஜயதசமி" என்ற பெயரில் விரதம் முடித்து புதிதாக போர்க்கலைப் பயிற்சி தொடங்கும் நாளாக, வெற்றித் திருநாளாகக் கருதினர். விஜயதசமிக்கு முதல் நாளான ஆயுத பூசை நாளினை "மகாநவமி" என வழங்குவர். இதன் திருநட்சத்திரம் புரட்டாதி உத்தராடம் ஆகும். 63 நாயன்மார்களுள் சான்றார் குல ஏனாதிநாத நாயனாருக்கு மட்டுமே "மகாநவமி" எனப்படும் ஆயுத பூசை நாள் திரு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நட்சத்திரமாக குறிப்பிடப்பட்டுள்ளது. இவ்விடயம் ஆயுத பூசை என்பது சான்றார்களுக்கு உரித்தானது என்பதற்கு சிறந்த எடுத்துக்காட்டாகும். பிற்காலங்களில் ஏற்பட்ட நாயக்க மன்னர்களின் ஆட்சி மாற்றங்களினாலும், போர் தவிர்த்து கல்வி நடவடிக்கைகளின் வளர்ச்சியினாலும், ஆயுத பூசை என்பது வேறு வடிவங்களையும், விளக்கங்களையும் பெற்றது. எனினும் "ஆயுத பூசை" என்ற சொல்லில் இதன் அர்த்தம் பொதிந்து கிடப்பதைக் காணலாம்.

புரட்டாதி மாதம் என்பது ஓர் ஆண்டின் 6ஆவது மாதமாகும். சோதிட சாஸ்திரத்தில் போர், காயங்கள், நோய்கள் ஆகியவற்றுக்கு வீடாக அமைவது கன்னி (புரட்டாதி) மாதமாகும். இம் மாதத்தின் வளர்பிறையில் வரும் அஷ்டமி, நவமி திதிகளில் போர்க்கருவிகளை போருக்கோ, பயிற்சிகளுக்கோ பயன்படுத்தாமல் அவற்றால் தீங்கு நேராமல் காத்துக் கொள்வதற்காக அவற்றை நீராட்டி, அலங்கரித்து வழிபடும் வழக்கம் நீண்ட காலமாக இப் பார்ப்பர சான்றார் குலத்தவரிடம் இருந்துள்ளது. இதுவே புரட்டாதி மாதத்தில் ஆயுத பூசை, விஜயதசமி என்பன வரக் காரணமாகும். (இவ்விடயங்கள் கோவை மாவட்டம், அவிநாசிக் கல்வெட்டில் பொறிக்கப்பட்டுள்ளன.)

சான்றார் குல உட்பிரிவுகளில் "ஈழக்குலச் சான்றார்" பிரிவும் முக்கியமானதொன்றாகும். ஏனாதிநாத நாயனார் இப் பிரிவைச் சேர்ந்தவர் என பெரியபுராணம் குறிப்பிடுகின்றது.

"ஈழக்குலம்" என்பதை "ஈழன் + குலம்" எனப் பிரித்து நோக்கலாம். இங்கு "ஈழன்" எனக் குறிப்பிடப்படுவது "எல்லாளன்" எனும் மன்னனையேயாகும். இதனால் எல்லாள

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மன்னனின் குலம் எனவும் இது அழைக்கப்படுகின்றது. ஈழக் குலச் சான்றார் என்பது சான்றோர் குலத்தின் ஓர் உட்பிரிவு என்ற உண்மையை திருமுருக கிருபானந்த வாரியாரும் குறிப் பிட்டுள்ளார். (பக்.171 – 175, பெரியபுராணம், வாரியார் பதிப்பகம்.)

கேரளத்து ஈழவர்களுள் "கோழிக்காலர்" என்ற பிரிவும் உள்ளது. இது கோழிகள் தமது கால்களால் சண்டையிடும் பாணியை பின்பற்றிச் செய்யப்படும் போர் முறைகளில் வல்லவர்கள் என்ற பொருளை உணர்த்துகின்றது.

தமிழ்நாட்டிலும் இப்பிரிவினர் இருந்துள்ளனர். கி.பி 1165 இல் இலங்கை மன்னன் முதலாம் பராக்கிரமபாகு காலத்தில் இலங்கைத் தண்டநாயகன் இராமநாதபுரம் நகரைத் தாக்கியபோது "கோழிக்காலர்" என்ற படைப் பிரிவினர் சோழர்களின் சார்பாக அவனை எதிர்த்தனர் என சூளவம்சம் (76 : 247, 260) குறிப்பிடுகின்றது. வலங்கை மாலை குறிப்பிடும் விடயங்களின்படி சான்றார் படையணி களில் "கௌதாரிப் பாணி"யில் யுத்தம் செய்யும் ஒரு பிரிவினரும் இருந்துள்ளதாக அறியமுடிகின்றது.

சான்றார் உட்பிரிவுகளில் "வலங்கை உய்யக் கொண்டார் பிரிவு" மிக முக்கியமானதாகும். பொதுவாக தமிழர் படைப்பிரிவுகளில் குறிப்பாக சோழப் பேரரசு காலத்தில் இப்பிரிவினரின் சாதனைகள் அளப்பரியனவான இருந்துள்ளன.

மேலே பல இடங்களில் இவ்விடயங்கள் சுட்டிக் காட்டப் பட்டுள்ளன. கி.பி 1547இல் எழுதப்பட்ட வெங்கலராஜன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கதைப் பாடல் என்ற வில்லுப் பாட்டு இவனை "வலங்கைச் சான்றான்" எனத் தெளிவாகக் குறிப்பிடுகின்றது.

மேலும் சான்றார்களுக்குள் "எழுநூற்றுவர்" என்ற பிரிவினரும் இருந்துள்ளனர். வலங்கை மாலை (வரி. 844 – 846) "சான்றார் எழுநூற்றுவர்" எனக் குறிப்பிடப்பட்டுள்ளது. ஒருமுறை (கி.பி 9 ஆம் நூற்றாண்டு) சோழர்களின் தலைநகரை கலியாணன் எனும் அரசன் வளைத்துக் கொள்கிறான். மூன்று முறை சோழர்கள் எதிர்த்துப் போரிட்டும் அவனை வெல்ல முடியவில்லை. (வலங்கை மாலை, வரி 879.) இறுதியில் இச்சான்றார் படையின் உதவியுடன் சோழர்கள் அவனை வெல்கின்றனர். இத்தகவல்கள் சோழர் மெய்க்கீர்த்திகளிலும் காணப்படுகின்றன.

தொல்பொருள் ஆய்வாளர் திரு. இராமச்சந்திரன் அவர்களின் கூற்றுப்படி, இந்தியாவில் திருவாரூர் மாவட்டம் திருக்கண்ணபுரம் சௌரிராஜப் பெருமாள் கோவிலிலுள்ள கி.பி. 10 ஆம் நூற்றாண்டுக் கல்வெட்டில் "இவ்வூர் ஈழச்சான்றான் முந்நூற்றுவப் பெருமானாகிய சோழவேள் ஏனாதி" என்பவன் குறிக்கப்படுகின்றான். இவர்களுடன் தெலுங்குச் சோழர் ஆட்சிக் காலத்திலே "நானூற்றுவர்" என்ற பட்டப் பெயரையுடையவர்களையும் சேர்த்து "எழுநூற்றுவர்" என்ற வாட்படைப்பிரிவு ஏற்படுத்தப்பட்டிருக்கலாம். எது எவ்வாறிருப்பினும் இந்தச் சோழப் பேரரசுடன் தொடர்புடைய சான்றார் குலப்பிரிவின் முக்கியத்துவம் சோழர் கால கல்வெட்டுக்களிலும், வலங்கை மாலையிலும் முதன்மையாக பாராட்டப்படுகின்றன.

❖❖❖

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உசாத்துணை நூல்கள்

1. பண்டைத் தமிழ் சமூகம் (பேராசிரியர் கா. சிவத்தம்பி)
2. தமிழர் சால்பு (பேராசிரியர் க. வித்தியானந்தன்)
3. புறநானூறு
4. வலங்கை மாலையும் சான்றோர் சமூகச் செப்பேடுகளும் (தொல்பொருள் ஆய்வாளர் S. இராமச்சந்திரன்)
5. பண்டைத் தமிழர் வாழ்வும் வழிபாடும் (பேராசிரியர் க. கைலாசபதி)
6. சான்றோர் வரலாறு (கி.மு.ம. மரிய அந்தோணி நாடார்)
7. பண்டைய கேரளம் (பேராசிரியர் குஞ்ஞன் பிள்ளை)
8. தமிழருள் மறைந்த அரசகுலம் (ஆய்வாளர் கொடித்துார் இராசரெத்தினம்)
9. மட்டக்களப்பு மான்மியம் (பண்டிதர் F.X.C. நடராசா)
10. மட்டக்களப்பு வரலாறு - ஒரு அறிமுகம் (கவிக்கோ வெல்லவூர்க் கோபால்)
11. Monograph of the Batticaloa District (S.O. Kanagaretnam)
12. மட்டக்களப்பு தமிழகம் (வி.சி.கந்தையா)
13. மாகோன் வரலாறு (செல்வி.க.தங்கேஸ்வரி)
14. குளக்கோட்டன் தரிசனம் (செல்வி.க.தங்கேஸ்வரி)
15. யாழ்ப்பாண வைபவ கௌமுதி (ஆசுகவி வேலுப்பிள்ளை)
16. யாழ்ப்பாண வைபவ விமர்சனம் (சுவாமி ஞானப்பிரகாசர்)
17. இலங்கைவரலாறு (பேராசிரியர் செ. கிருஷ்ணராஜா)
18. இலங்கைச் சுருக்க வரலாறு (கலாநிதி க. குணராசா)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

19. மத்திய கிழக்கிலிருந்து மட்டக்களப்பு வரை (மருதூர் ஏ. மஜீத்)
20. மட்டக்களப்பு பூர்வ சரித்திரம் (சா. இ. கமலநாதன்)
21. ஆயுத பூசை கொற்கை (மே 1997)
22. இலங்கைத் தமிழர் தேச வழமைகளும் சமூக வழமைகளும் (பேராசிரியர் சி. பத்மநாதன்)
23. பிரவாதம் ஏப்ரல் 2011, இதழ் 5 (சமூக விஞ்ஞானிகள் சங்கம்)
24. கூர்மதி, 2008 வெளியீடு (கல்வி அமைச்சு)
25. பழந்தமிழர் நடுகற் பண்பாடு (நா.நவநாயகமூர்த்தி)
26. நாடார், சான்றார், கிராமணி
27. சத்திரிய குல விளக்கம்
28. புராதன இலங்கையின் தமிழ் – சிங்கள உறவுகள் (லயனல் சரத்)
29. தாந்தா மலைமாட்சி (குடமுழுக்கு மலர் 2011)
30. பெரியபுராணம்
31. கன்னடத்து அரச குலத்தவர் (J.F. பீலிட்)
32. ANCIENT INDIA (மெக்தீனஸ் அரியன்)
33. இந்து தேச வரலாறு (J.V. வீலர்)
34. தஞ்சைப் பெருங்கோயில் கல்வெட்டுக்கள்
35. தென்னிந்திய வரலாறு (பேராசிரியர் மு. மு. பிள்ளை)
36. பிற்கால சோழர் சரித்திரம் 111 (D.V. சதாசிவ பண்டாரத்தார்)
37. யாழ்ப்பாணச் சரித்திரம் (ஆ. முத்துத்தம்பிப் பிள்ளை)
38. திருவாங்கூர் பழங்குடிகளும் சாதிகளும் (அனந்தகிருஷ்ண ஐயர்)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

39. குமரிக்கண்டம் அல்லது கடல் கொண்ட தென்னாடு (கா. அப்பாத்துரை)
40. சூளவம்சம்
41. திருவாங்கூர் வர்த்தமானி
42. இந்திய குடிசன மதிப்பு, தொகுதி 1 (W.R. கோர்னிஷ்)
43. யாழ்ப்பாண இராச்சியம் (கலாநிதி சி.க. சிற்றம்பலம்)
44. யாழ்ப்பாண சட்டங்களும் மரபுகளும் (T. இராமநாதன்)
45. சிங்கள சமூகப் பழக்கவழக்கங்கள் (இராப் பீரீஸ்)
46. இலங்கைக் கரையார் (M.D.இராகவன்)
47. ஆனந்த விகடன் (04.10.1966 சஞ்சிகை)
48. தமிழ்ப் பேரகராதி (மேலைப் புலோலி நா.கதிரவேற்பிள்ளை)
49. எல்விஸ் கல்வெட்டு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# குறிப்புகளுக்காக...

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# என்னைப்பற்றி...



**பெயர்** : திரு.வைரமுத்து சுந்தரராஜா

**விலாசம்** : இல. 19, ஆர்.கே.எம் வீதி, கல்முனை 02,

கிழக்கு மாகாணம், அம்பாறை மாவட்டம், இலங்கை.

தொலைபேசி : 077 - 8493130.

மின் அஞ்சல் : suntharvy@gmail.com

**கல்வி** : இளமைக்காலக் கல்வியிலிருந்து க.பொ.த (உ.த) வரை கல்முனை, உவெஸ்லி உயர்தரப் பாடசாலையில் கல்வி கற்றேன். 1996 இல் இலங்கைப் பேராதனைப் பல்கலைக்கழகத்தில் பொதுக் கலைமாணி பட்டப்படிப்பைப் பூர்த்தி செய்தேன். 2007 இல் பட்டப்பின் கல்வி டிப்ளோமா பட்டத்தைப் பெற்றேன். 2000 இல் கிழக்கு மாகாணக் கல்வி அமைச்சின் நூலக அபிவிருத்தி ஆவணகாப்புத் தொடர்பான பயிற்சியை முடித்தேன். வரலாறு, அரசறிவியல் துறைப் பட்டதாரி ஆசிரியருக்கான பல பயிற்சிகளை இலங்கை தேசியக் கல்வி நிறுவகத்தில் பெற்றேன்.

**தொழில்** : 1999 இலிருந்து தற்போது வரை 17 வருடங்களாக அரச பாடசாலைகளில் உயர்தரப் பிரிவு மாணவர்களுக்கு வரலாறு, அரசியல் விஞ்ஞானம் போன்ற பாடங்களையும் சாதாரணப் பிரிவு மாணவர்களுக்கு குடியியல் பாடத்தையும் கற்பித்து வருகின்றேன்.

**வேறு திறமைகள்** : பாடசாலைக் காலத்திலிருந்து கட்டுரைகள் எழுதும் பழக்கம் உள்ளது. எனது ஆய்வுக் கட்டுரைகள் சில பத்திரிகைகளில் வெளிவந்துள்ளன. நூல் எழுதுவதில் மிகுந்த ஆர்வம் உள்ளது. இந்நூல் எனது கன்னி முயற்சியாகும்.

பாடசாலை நிகழ்வுகளிலும் ஆலய நிகழ்வுகளிலும், பொது வைபவங்களிலும் கவிதை, பாடல்கள் எழுதுவேன். பல பத்திரிகைகளில் எனது கவிதை யாக்கங்கள் வெளிவந்துள்ளன. சித்திரம் வரைவேன், சிற்பக்கலையில் ஓரளவு நாட்டமுண்டு.

**சமய, சமூகப் பணிகள்** : எமது பிரதேச ஆலயங்களில் ஆலயத்திருப்பணிச் சபை செயலாளராகவும், இந்து இளைஞர் மன்றச் செயலாளராகவும், அறநெறிப் பாடசாலையின் ஆலோசகராகவும் செயற்படுகின்றேன்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org